கொக்குவில்

முன்னேற்ற மன்றம் - கொழும்பு

# KOKUVIL DEVELOPMENT SOCIETY - COLOMBO

" தீதும் நன்றும் பிறர்தர வாரா "

# 10வது ஆண்டு நிறைவுவிழா


1970 - 1980

துர்மதி சித்திரை (1981)

University of Jaffna
050
KOK
183304(AR; Main)

வாழுக கொக்குவில் பெருவளம் செழிக்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

050
KOK AR



[stamp]

அன்னை காலடிக்கே அன்புமலர்

## காணிக்கை

கொக்குவிலார் கற்புலத்துக்
கொற்றவையாம் கண்ணகியை
கோயிலோடு காலமெல்லாம்
கோபுரமும் காணவைத்தார்
கற்றவர்க்கோர் உள்ளொளியாம்
கற்பகமாம் மனோன்மணியே
கல்லுதற்கோ அம்மாகல்லானாய்
காலடிக்கே அன்புமலர்.

வணக்கம்

University of Jaffna
183304
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007

# கமலத்துள்....

UNIVERSITY OF JAFFNA LIBRARY

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"


நல்வாழ்த்துக்கள்

தலைவர்: திரு. க. இரத்தினசபாபதி அவர்கள்
முன்னைநாள் தலைவர் திரு. இரா. இராசநாயகம் அவர்கள்
உயர்திரு வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்
மதிப்பிற்குரிய இரா. பாஸ்கரலிங்கம் அவர்கள்
மதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கள்
மதிப்பிற்குரிய திரு. மாணிக்கவாசகர் அவர்கள்
திருமதி செ. நவரத்தினம் அவர்கள்

போற்றப்படுபவர்கள்

அமரர் கலாநிதி பொன்னையா அவர்கள்
அமரர் ஹண்டிப் பேரின்பநாயகம் ஆசான்

பாராட்டுக்கள்

கொக்குவில் கலா பவனம்
இசையரசி திருமதி சரஸ்வதி பாக்கியராசா
திருத்தொண்டர் ஆ. சின்னத்தம்பி J. P.

அறிக்கைகள்

பத்தாண்டுப் பணி அறிக்கை
பொருளாளர் அறிக்கை

அறிவுக்கு விருந்தாக

சைவசித்தாந்தம்
தமிழ் அருச்சனை ஏன்?
தமிழகத்துக் கோயில்களில் தமிழ் அருச்சனை
வள்ளுவர் கண்ட அரசியல்


REFERENCE

UNIVERSITY OF JAFFNA LIBRARY

183304

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றப் பண்

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு என்றும் வாழ்கவே
கொக்குவில் வளம்பெருக்கி நீடு வாழ்கவே.

அமிழ்தாம் தமிழ் மொழியினர் அன்புச் சைவ நிதியினர்
அச்சம் அறியா ஆண்மையர் அறிவு சேர்க்கும் மதியினர்
உழைப்பில் பெருமை கொள்பவர் உண்மை போற்றி வாழ்பவர்
தன்மானம் உடைய தமிழர்கள் தம்மை ஆளும் தகைமையர்.

செந்நெல் கொழிக்கும் நந்தாவில் செம்மண் விளை பொருள் புகையிலை
நந்நீர் சுரக்கும் நம்நிலம் பிறர் நாடிவரும் கொக்குவில்
திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, யாழ்நகர், கோண்டாவில் நம்எல்லைகள்
கோயிலுண்டு பல்கலை வளாகமுடன் வசதிகள் கொக்குவில் வளம்பல

யாதும் சொந்த ஊரென செல்வராய் எங்கும் வாழ்பவர்
தீதும் நன்றும் பிறர்தர வாராதென கொழும்பார் நன்றாய் தெளிந்தவர்
திருப்பணி கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு ஊர்ப்பணி
மேன்மை உண்டு நமக்கினி மேலும் முயலுமித் தவப்பணி.


*WITH THE BEST COMPLIMENTS FROM*

**DEVI JEWELLERS**

BUYERS AND SELLERS OF GOLD, DIAMOND & GEMS.

**No 131. SEA STREET, COLOMBO 11.**

*T'Phone:* **32502**


அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. — குறள்

As (one's) ignorance is discovered the more one learns so does repeated intercourse with a well-adorned female (only create a desire for more)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best
Compliments
from

## M/s. Annalackshumi Gold House

137, SEA STREET, COLOMBO.

*PHONE* 28787

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். — குறள்

**If the creator of the world has decreed even begging as a means of livelihood, may he too go abegging and perish.**

## விவசாயிகளே !

உங்களுக்குத் தேவையான

- உர வகைகள்
- விவசாய மருந்து வகைகள்
- களைகொல்லிகள் மற்றும்
- பலசரக்குச் சாமான்கள்
- சீமெந்து

போன்றவற்றை நல்ல ரகத்திலும் நிதான விலையிலும்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம் :

## திருநாவுக்கரசு அன் சன்ஸ்,

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மதிப்பிற்குரிய
### திரு. க. இரத்தினசபாபதி அவர்கள்
*மன்றத் தலைவர் மொழிந்தவை...*

## ஒரு கண்ணோட்டம்

எமது மலரைப் படிக்கும் அன்பர்கள், கொக்குவில் முன்னேற்ற மன்றம் கொழும்பில் உறுதியாக நிலை கொண்டு உழைப்பதை அறிந்து மகிழ்வர்; கொக்குவில் வாழ் மக்கள் பல துறைகளிலும் ஆற்றிய பங்களிப்பைத் தேர்ந்து அகமகிழ்வர் இச்சுப வேளையில், நாமும் ஒரு மலர் வெளியிட வேண்டும் என்ற எண்ணக்கருவைக் கொண்டவரும், அதை நனவாக்குவதற்குப் பலரோடு முதன்மையாக உழைத்தவருமான எம் அருமருந்தன்ன செயலாளர் இராசேந்திரனைப் பாராட்டுவது ஒரு மகிழ்ச்சியான செயலாகும்.

அதேவேளையில், கொழும்புவாழ் கொக்குவில் மக்கள் ஒன்றுகூடி அளவளாவவும் ஊரின் நலன் பேண கைங்கரியங்களில் ஈடுபடவும் இம் மன்றத்தை நிறுவிய 'தாபனத் தந்தைகளை' நன்றியறிதலோடு நினைவு கூருகிறோம். அப் பெரியார்களின் பட்டியலில் தனது ஆரவாரமற்ற அமைதியான சேவையினால் இளமைப் பருவத்திலேயே சகபாடிகளினால் 'தலைவர்' என்று அழைக்கப்பட்டவரும் எமது மன்றத்தின் தோற்றுவாய் தொட்டு அண்மைக்காலம் வரை தலைவராகவிருந்து வழிகாட்டியவருமான இராசநாயகத்தின் பெயர் தலையாயது; பசுமையான நினைவு தருவது.

இன்றை உலகிலே அரசாங்கமும் அதன் நிறுவனங்களும் எம் அனைவரையும் பல துறைகளிலும் பாதிக்கின்றன; அரசியல் தாக்கம் எங்கணும் வியாபித்திருக்கிறது. இந் நிலையிலே, சங்கங்கள் வேண்டுமா? அவை எதைச் சாதிக்கும்? என்ற ஐயப்பாடுகள் எழுதல் இயற்கையே. ஆகவே இத் தருணத்தில் இத்தகைய சங்கங்கள் ஆற்றும் இன்றியமையாத பணி குறித்து ஒரு சிறு குறிப்புக் கூறலாம் என்று கருதுகிறேன்.

எமது மன்றம் போன்றவற்றை அரசியல்துறை அறிஞர்கள் தன் விருப்புத்தாபனம் (Voluntary Association) என்றழைப்பர். அவை குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்காகத் தாபிக்கப்படும் நிறுவனங்கள்; யாருடைய வற்புறுத்தலுக்கும் கட்டுப்படாது, தன்னிச்சையாக அமைவன. அவை மக்களின் நல்வாழ்விற்குப் பெரும் பணி புரியக்கூடியவை என்பதை சமூகவாழ்வில் பங்குகொள்வோர் நன்கறிவர். அரசறிஞரும், பாராளுமன்ற உறுப்பினராயிருந்தவருமான ஆர். எச். எஸ். குறொஸ்மன் 'அரசாங்கமும் ஆளப்படுவோரும்' என்னும் தமது பிரசித்திபெற்ற நூலில் பின்வருமாறு கூறுவார்: ''கடைசியாகப் பார்த்தால், சனநாயக நிறுவனங்கள் வெற்றி பெறுவது அவற்றைச் செயற்படுத்த சுறுசுறுப்புள்ளவர்களும் பொறுப்பு வாய்ந்தவர்களுமான சிறுபாலாரான சனநாயகவாதிகள் போதுமான அளவிலிருக்கிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்ததாகும்.''

தலைநகரிலிருந்து ஒரு கிராமத்தை வழிநடத்த முடியாது; நாம் அதைச் செய்ய முற்படவும் இல்லை. அது அவசியமும் அல்ல. எமது உறவை வலுப்படுத்துவதனால் கொழும்பில் எமக்கொரு துணையும் தெம்பும் ஏற்படுகின்றது; அதே வேளையில் நமது ஊரின் தேவை அறிந்து ஓரளவு செயற்படவும் முடிகிறது.

கொக்குவிலோடு வேறு கிராமங்களிலும் வாழ்ந்த அநுபவம் உடையவர்களுக்கு இவ்வூரின் அருமை பெருமைகள் எளிதிற் புலப்படும்! ஒருமைப்பாடு; ஆபத்தில் உதவும் பண்பு; நல்ல காரியங்களுக்குக் கைகொடுத்துதவுதல்; தலைமையுடன் தோளோடு தோள்நின்று தொழிற்படும் தகைமை: பொறுப்புணர்வுடன் கூடிய தன்னம்பிக்கை. இவை யெல்லாவற்றிற்கும் மேலாகத் தம்மோடு சேர்பவர்களை அன்பினால் ஈர்க்குத் தன்மை. இப் பாரம்பரியம் சிதைவுறாது, மேலும் மேலும் உழைப்பது எமது அன்புக் கடனாகும்.

*1981-03-18*

க. இரத்தினசபாபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST

WISHES

FROM

## CHANDRA MULTI TRADERS

**Dealers in all Hardwares and Electrical Goods and Machinery Etc.**

*Agents for* **KENWOOD & HITACHI PRODUCTS.**

BRANCHES:
**137/7, MALAY STREET,**
**COLOMBO 2.**
*T'Phone*: 35999

HEAD OFFICE
**77, CIRCULAR ROAD,**
**HATTON.**
*T'Phone*: 0512 - 465

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். — திருக்குறள்

**You meet with joy, with pleasant thought you part;**
**such is the learned Scholar's wonderous Art.**

*—Holy Kural.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில்,
*14-1-1981*

எமது மன்றத்தை அமைத்த நல்லார்
திரு. இராசையா இராசநாயகம் அவர்கள்
*தலைவர் (1970 — 1979)*

## நல்வாழ்த்தும் நல்லுரையும்

கொக்குவில் முன்னேற்ற மன்றம் — கொழும்பு, 1970ம் ஆண்டு அமைக்கப்பட்டதன் நோக்கம், எமது கொக்குவில் மக்கள், கொழும்பில் ஒருவரோடொருவர் தொடர்புகொண்டும், ஒன்றிணைந்து நன்மை தீமைகளில் கலந்து சகோதரர்கள்போல் வாழவும், இதே வேளையில் எமது ஊரில் உள்ள பொதுமக்கள் வசதிகளைப் பாதுகாத்து விரிவடையச் செய்யவும், மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுமேயாகும்.

இம் மன்றம் சென்ற பத்தாண்டுகாலம் ஊருக்குத் தொண்டு செய்துள்ளது. இவற்றை மக்கள் மறவாதிருக்கவும், மன்றத்தின் பத்தாண்டுகள் நிறைவைக்கொண்டாடவும் விழாவும் மலரும் அளிப்பது கேட்டு மகிழ்ச்சியடைகின்றேம். தமது கொக்குவிலுக்குத் தொண்டு செய்யும் கடமையுணர்வுள்ள நம்மவர்கள் யாபேரும் இம்மன்றத்தில் சேர்ந்து, கொக்குவிலில் மக்களுக்குத் தேவையான வசதிகளை எல்லாம் ஊரிலேயே கிடைக்கச் செய்யவேண்டுகின்றேம்.

மற்றும் கொழும்புவாழ் எமது இளைஞர்கள் எல்லோரும் மன்றத்தில் சேர்ந்து ஊர்த் தொண்டில் பயிற்சிபெறவும், இவ்வளவுகாலமும் தங்கள் அண்ணன்மார் தங்கள் பதவிகளையும், செல்வாக்கையும் கொக்குவிலின் முன்னேற்றத்திற்குக் கொடுத்த நல்ல பழக்கத்தை இளஞ்சந்ததியினரும் தொடர்ந்துசெய்ய வேண்டுகின்றேன்.

வணக்கம்.

வாழ்க கொக்குவில்
வாழ்க கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு

தங்கள் அன்புள்ள
இரா. இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*from*

# TRAMANI EXPORTS

EXPORTERS

OF

NON TRADITIONAL PRODUCTS.


LOVE Never claims, it ever gives,
Love ever suffers, Never resents,
Never revenges itself. — *Mahatma Gandhi*

அன்பு என்றும் உரிமை கோருவதில்லை;
என்றும் அது அளி செய்வது; அன்பு என்றும்
துன்பம் தாங்குவது; ஒருகாலும் சினப்பதில்லை;
பழி எண்ணுவதற்கில்லை.

— மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம்**
*உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர்;*
*தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்*

## ஆசிச் செய்தி

ஒருவனின் தருமம் அவனது வீட்டிலே தொடங்க வேண்டுமென்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. அதேபோல் ஒருவனின் தேசபக்தி அவன் பிறந்த கிராமத்திலே தொடங்குவதுதான் பொருத்தம். நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும் முன்னேறினால் நாடு முழுவதுமே முன்னேறிவிடும். ஆகவே, கொழும்பில் வாழும் கொக்குவில் இளைஞர்கள் தமது கிராமத்தில் தமக்குள்ள பற்றால் உந்தப்பட்டு அதன் அபிவிருத்தியைக் குறிக்கோளாக வைத்து 'கொக்குவில் முன்னேற்ற மன்றம்' என்னும் பெயரில் ஒரு சங்கத்தை நிறுவியது மிகவும் மெச்சற்பாலது. இம் மன்றம் சென்ற பத்து ஆண்டுகளாக ஆற்றிய அருஞ்சேவைகள் பல. மன்றத்தின் பத்து ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஓர் ஆசிச்செய்தி அனுப்புவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு மூலாதாரமாயுள்ளது கல்வி. கொக்குவில் கிராமம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருந்தும் அங்குள்ள மகளிர் உயர்தரக் கல்விகற்க ஒரு மகளிர் கல்லூரி இல்லாதது நெடுங்காலமாக ஒரு பெரும் குறையாகவிருந்தது. அக்குறை முன்னேற்ற மன்றத்தின் விடாமுயற்சியால் நிவிர்த்தியாகிவிட்டது. இச் சேவையையிட்டுச் சங்க அங்கத்தவர்கள் பெருமை கொள்ள உரித்துண்டு. இன்னும் சில துறைகளில் முன்னேற்றத்துக்கு இடமுண்டு. இம்மன்றம் இது காறும் காட்டிய உற்சாகத்துடன் தொடர்ந்து சேவையாற்றினால் விரைவில் குறைகளெல்லாம் நிவிர்த்தியாகி, கொக்குவில் மற்றும் கிராமங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

அவ்வாறு அங்கத்தவர்கள் தொடர்ந்து தொண்டாற்றவும், மன்றம் மேன்மேலும் ஓங்கி வளரவும் இறைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

கொழும்பு
*29-1-1981*

**வீ. சிவசுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு

வாழ்க பல்லாண்டு!

# SASI GARMENTS

MANUFACTURE OF QUALITY GARMENTS

# சசி காமன்ஸ்

தரமான ஆடை உற்பத்தியாளர்கள்

உற்பத்தியகம்:
''சிவமனே''
உடுவில் வீதி,
மருதனுமடம்,
சுண்ணுகம்.

அலுவலகம்:
150, புதிய செட்டித்தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி: 34979 – 31550

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
— குறள்

To discern the truth in everything, by whomsoever spoken is wisdom.
— *Holy Kural*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி, வீடமைப்பு, கட்டிட அமைச்சு
செயலாளர்
இரா. பாஸ்கரலிங்கம்
அவர்களின்

## ஆசிச் செய்தி

கொக்குவில் முன்னேற்றச் சங்கம் தனது ஊரின் நலத்திற்காக அயராது உழைக்கும் உத்தம சேவையில் பத்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளமை கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பணிகள் யாவற்றுள்ளும் மேலானது அறியாமை அகற்றி அறிவொளியூட்டும் கல்விப் பணி, கொக்குவில் முன்னேற்றச் சங்கத்தின் அரும்பணிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்று துலங்குகிறது. இச்சங்கத்தின் அரும்பெரும் முயற்சிகளினால் உருப்பெற்று அறிவுத்தொண்டும் ஆத்மீகத் தொண்டும் ஆற்றிவருகின்ற சாரதா மகளிர் கல்லூரி.

கொக்குவில் பொதுமக்களின் நலனையே தனது குறிக்கோளாய்க்கொண்டு அவர்களது இடையூறுகள் களைந்து வாழ்வின் நலன்பெருக்க விழையும் இச்சங்கத்தின் பணிகள் பல்லாண்டுகள் தொடரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இரா. பாஸ்கரலிங்கம்

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST WISHES FROM

## NAYANA AGENCIES

*Civil Mechanical, Marine Engineers, Architects, Building Contractors, Hardware Dealers, Exporters & Importers, Trade representatives, Government & Corporation Suppliers.*

**21, Norris Canal Road,**
**Colombo 10.**
**Sri Lanka.**

WITH THE BEST COMPLIMENTS FROM

## WIMALASIRI BROTHERS

**FURNITURE DEALERS & GOVT. CONTRACTORS**

*No. 1034, MARADANA ROAD,*
*BORELLA.*


அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
— குறள்

**The loveless to themselves belong alone; the loving men are other's to the very bone.** — *Holy Kural*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் தந்த பெருமகன்

## பேரறிஞர் தத்துவ கலாநிதி பொன்னையா அவர்கள்

நாம் கொக்குவிலார் என்றும் பெருமைகொள்ள வைத்த பேரறிஞர் திரு. வ. பொன்னையா B.A. Hons, Ph. D. அவர்கள் இலங்கையில் தத்துவஞான கலாநிதிப் பட்டப்பேறு பெற்ற முதல் பெருமகனுவர். 1945ம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில், இலங்கை அரசின் புலமைப்பரிசில் பெற்று இம்மேன்மையுற்ருர். அவர் தமது சைவ சித்தாந்தத் தத்துவ ஆய்வுக்கோவையை உலகமறியவேண்டும் என்ற பெருநோக்குடன் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். (*Saiva Siddhanta Theory of Knowledge*) என்னும் தலைப்பில், அண்ணுமலைப்பல்கலைக்கழகத்திஞல் வெளியிடப்பட்ட இந்நூலைப் படிப்பவர்கள் எமது Dr. பொன்னையா ஓர் ஆங்கிலேயராக விருப்பாரோ என வியக்கும்படி தமது ஆங்கிலப்புலமையும் வெளிக்கொள்ள வடித்துள்ளார்கள். இவர் சைவத்தின் உயர்வினை என்றும் போற்றியவர், எச்சபையிலும் எடுத்துரைக்கும் திறன் படைத்தவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, லத்தீன் போன்ற மொழிப்பாண்டித்தியமும், பல்கலை விஞ்ஞானப் பேரறிவும், புறநாட்டு மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும் ஐயம் திரிபற ஆய்ந்தவர். இதே முயற்சியில் தமிழ் நாட்டில் ஈடுபட்ட தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையான மறைமலை அடிகளாரைப் புகழ்ந்துரைத்துள்ளார். இவர் தமது வாழ்வில் ஆன்மீக உண்மைகளைப் பயிற்சித்து உண்மையை உணரும் திரமுடையவராகவும் திகழ்ந்தார். உலகப்புகழ்பெற்ற யாழ்ப்பாணத்துத் தவமுனி சிவயோகசுவாமிகளின் அறிவுத் தாகந் தீர்க்கும் கூட்டாளியாகவும், இணைந்து ஆன்மீக சோதனைகளைச் செய்பவராகவுமிருந்தவர். இல்லறமல்லது நல்லறமன்று என்றுஇதில் ஈடுபட்டபொழுதிலும் தமது அறிவுத்தாகமும் ஆன்மீகப்பயிற்சியும் வாழ்வோடு இணையக்கொண்டவர். தமது பயிற்சியின் விழைந்த வாழ்வுபற்றி சித்தாந்த ஞான விளையாட்டாக நூலாகத் தந்துள்ளார். மதுரையிற் கரந்தைத் தமிழ்ச்சங்கம் பிரசுரித்து வந்த ''தமிழ்ப்பொழில்'' என்னும் சஞ்சிகைக்கு ''திருக்குறள்'' துறவற இயல் பகுதிக்குச் சிறப்புப்பொருள் எழுதியுள்ளதுடன் இலங்கையில் தாய்மொழியில் கல்வி தொடங்கிய பொழுதில் இதற்கான அமைப்பில் ஒரு தலைமைப்பதவியை வகித்ததுடன் 1949 — 1954 வரை தமிழ்விரிவுரையாளராக மகரகம அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் நற்பணியாற்றினர். இத்துடன் இவர் கோளியல் (சோதிடம்) அறிவும் நிக்கலைக்குப் பெருமையளித்தன. இவர் ஆச்கிய நூல்கள் பல. இவற்றுள் பாட நூல்களான கேத்திரகணிதம், அட்சரகணிதம், பௌதிகம், நீர்நிலையியல், இயக்கவிசைஇயல், றிக்நோமற்றி போன்றவையுமுண்டு. *

இவரைப் பல்கலைஞானியாக இறைவன் படைத்தனன், பல்கலைகளைத் தமிழ் செய்ய, தமிழ்ச்சொற் கருவூட்டவே என்று வியக்குமளவுக்குப் பல பேராசிரியர்கள் மத்தியில், தனித் தமிழில் இவர் சொல்லாக்கத்திறமை எல்லோரும் கைகட்டியவாறு இவர் ஆக்கிய சொற்கள் யாவற்றையும் ஏற்குமளவிற்குப் பேராசிரியர்க்கெல்லாம் எட்டாத பேரறிவாளராக வாழ்ந்த இவர், அன்றையகால மாதிரி ஆசிரியர்போல் வெள்ளை வேட்டி, தேசிய மேற்

---

*கலைச்சொற்கோவையில் இலங்கை அரச அலுவலக மொழித்திணைக்களம் Dr. V. பொன்னையா அவர்கள் உதவியுடன் ஆக்கியளித்த சொற்கருவூலக்கோவைகள்.

(1956) பௌதிகவியல், தூயகணிதமும் பிரத்தியேக கணிதமும், புவியியல், கைப்பணி (நெசவுத்தொழிலும் வனைதற்றொழிலும், மரவேலை)

(1957) தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பொருளியல், கணக்குப்பதிவியல், உடற்றொழிலியல், உலோகவேலை,

(1955) இரசாயனவியல், (1958) புவியியல், மெய்யியல் (1960)

(1963) தாவரவியல், (1965) கணிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டை, நீண்ட குலைந்த சால்வையணிந்து, பழுத்த பனிமுடித்தலை, பரந்துயர்ந்த நெற்றி, ஆழ்ந்தகன்ற விழிகள், கூரிய நீண்ட மூக்கும், மெல்லிய நீண்ட உதடும், அகன்ற சதுரமான நாடியும் கொண்ட, சிந்தனையில் ஆழ்ந்த பார்வையுடன் கால்நடையாக எம் மூரில் திகழ்ந்தார் இப்பேரறிஞர். இவரை மாணவர், பாமரர், புலவர் யாவரும் தம் அறிவுத்தாகத்தைத் தீர்க்க நாடுவதும், இவர்களுக்கெல்லாம் ஏற்புடைய கலைகள் யாவற்றிலும் இவர்கள் விளங்க எடுத்துரைத்தார். ஆனாலும் இவர் புலவருக்கும் புரியாத பல வற்றைப் புரிய வைத்தாரென்றும் இவற்றைப் புரியத் தமக்கு இவர் அறிவுகண்ட பல் துறையிலும், தமக்கில்லாத புலமை தடையாகவிருந்ததையும் பலகற்றோர் தம்மை நொந்து கூறுவதுண்டு.

இவர் 1-5-1900 ஆண்டு திருவாதிரை நாளில் பிறந்து 1968ஆண்டு நவம்பர் மாதம் 9ம் நாள் சிவபதம் எய்தினர்.

பேரறிஞராகவும் மெய்ஞ்ஞானியாகவும் வாழ்ந்த இவர் கிரேக்கப் பேரறிஞர் பகுத்தறிவாளர் ''சோக்கிரதிஸ்'' என்றும், சிவயோக சுவாமிகளைத் தவமுனியாகக் கொள்ளும் நாம் இவரை தவஞானி என்றோ, இல்லை முன்னையவரைப் பெருஞ்சித்தர் என்றால் பேரறிஞர் பொன்னையா அவர்களை எம் கொக்குவில் தந்த ஒரு புத்தர் என்றால் மிகையாகா. இவர் நூல்களைப் பயின்று இவர் தந்த சைவத்தத்துவங்களை உலகறியச் செய்வோமாக!

**கொக்குவில் முன்னேற்ற மன்றம்-கொழும்பு**


அல்லற்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

Will not the tears shed by a people who cannot endure the oppresion which they suffer (from thinking) become a sow to waste away his wealth ?

என்றும் எப்பொழுதும்

**கனகலிங்கம் சுருட்டுக்களையே**

பாவியுங்கள்.

தயாரிப்போர் :

**V. கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ்**

17, சென் ஜோன்ஸ் வீதி,


கொழும்பு - 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரறிஞர் திரு. வ. பொன்னையா, B. A. Hons, Ph. D. (Philosophy)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தகை
ஹன்டி பேரின்பநாயகம் ஆசானுக்கு

# அஞ்சலி

பிறந்த பெருநாள்
28 - 3 - 1899

மறைவு
11 - 12 - 1977

பேரறிஞர், கல்விவிற்பன்னர், சமூகத்தொண்டர், ஒழுக்கசீலர், மகாத்மாகாந்திய சித்தாந்தத்தை வாய்மையிலும் வாழ்விலும் கற்பித்த கதராடையுடுத்த நிறைமனிதன், மாணவர் மனமகலா ஆசான், அமரர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராகக் கொக்குவிலுக்குள் குடிபுகுந்ததால் இவர் புகழில் இக்கல்லூரியின் வாழ்வும் வளமும் மேன்மையுற்றதைக் கொக்குவில் மக்கள் என்றும் நினைந்திருப்பர். அதிபராகப் பொறுப்பேற்றதும் ஈழமே என்றும் கண்டிராத பெரும் களியாட்ட விழாவொன்றினை நடாத்தி, அதில் கலைவாணர் கிருஷ்ணன் மதுரம் தம்பதிகளும், தமிழ் நாடகப்புகழ் டி. கே. எஸ். சகோதரர்களும், இசையரசியான எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இன்னிசையும், அன்றைய திரையுலகப்புகழ் இரஞ்சன், சூரிய குமாரி ஆகியோரும் இவர் நட்புக்காகப் பங்குகொண்டு பெரும்புகழ் தந்ததையும், இதில் குவிந்த செல்வத்தில் விளையாட்டிடமும் இதோடிணைந்த கட்டிடங்களும் தொடங்கப்பட்டு, இவற்றை நிறைவுசெய்யக் கடல் கடந்து மலாயா, சிங்கப்பூர் சென்று பொருள்தேடி ஓலைக்கொட்டகையாயிருந்த கல்லூரியின் பகுதியை மூன்று மாடிக் கட்டிடமாக அமைத்ததையும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபராகப் பத்து ஆண்டுகள் பெருந்தொண்டாற்றினர். இக்கல்லூரி நூற்றாண்டில் ஏற்படும் வளர்ச்சியை இவ்வாண்டுகளிற் பெற்றது. இவர் தொண்டில் விளைந்த மும்மாடிக்கு ''ஹன்டி பேரின்பநாயகம் மாடி'' எனப் பெயர் சூடி மகிழவேண்டும் என்பதே கொக்குவில் மக்கள் பெருவிருப்பமாகும்.

இத்துடன் கொழும்புவாழ் தமிழ்மக்கள் இளஞ்சந்ததியினர் தமிழ்-சைவப்பண்பாட்டுடன் இசைந்த நிறைகல்விபெற இரத்மலானை இந்துக்கல்லூரியை அமைக்கவும் முன்னின்றுழைத்த பெரியாருமிவரே.

உலகப் புகழ்பெற்ற இப்பெருந்தகை 1931 ம் ஆண்டு முதல் இலங்கைச் சுதந்திர இயக்கங்களில் ஈடுபாடுகொண்டதுடன் யாழ்ப்பாண வாலிபர் மகாநாடு ஒன்றினைச் செவ்வனே கூட்டி, அதன் பயனைச் சட்டசபைத் தேர்தல் பகிஷ்காரத்தை வெற்றிகரமாக நடாத்தினர். மகாத்மாகாந்தியையும் மற்றும் இந்திய விடுதலை வீரர்களையும் எம் மண்ணுக்கு அழைத்த பெருமை இவரையே சாரும். 1953ம் ஆண்டு சேர் யோன் கொத்தலாவல அவர்களைப் பிரதமராகக் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அழைத்து அங்கு தமிழ்மக்களுக்கு இந்நாட்டில் சமஉரிமை வழங்க வேண்டுமென உரிமைக்குரல் எழுப்பினர். இதைத் தொடர்ந்த அரசியல் மாற்றங்கள் எமது கல்லூரியையும் சரித்திரத்தில் இடம்பெற வைத்தது. தன்திறமையைக் கல்விப்பணிக்குத் திசை திருப்பிய ''ஆசான்'' முதலில் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆசிரியராகி அங்கு மாணவர் பலரை இலட்சிய மனிதராக வாழச் செய்தார். இலங்கை தேசியக்கல்வி ஆலோசனைக்குழுவிற் பல்லாண்டுகள் பயனுறப் பங்கு கொண்டார். இங்கு தாய்மொழிக் கல்வியின் தந்தையுமானர். கொக்குவில் இந்துக்கல்லூரிக்குப் பொற்காலமும் பிறந்தது. இவர் மாணவர்கள் ''தாயினும் நல்ல ஆசானுக'' உளமாரப்பேசி மகிழ்வதே என்றும் நற்சாட்சியாகும். உலகமுய்ய எண்ணும் உள்ளமும் எளிமையான தோற்றமும் வாழ்வும் இயற்றிய இவர் பண்பாட்டை நாமும் பயின்று எம்வாழ்வில் பேரின்பம் விளையவும், இவர் தூய ஆன்மா பேரின்பவீடு பெறவும் கடவுளையே வேண்டுவோமாக.

கொக்குவில் முன்னேற்ற மன்றம்—கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS OF*

*The Kumaran Press*

201, DAM STREET,
COLOMBO 12.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. — குறள்

Let those that need partake your meal; Guard everything that lives; this the chief and sum of lore that hoarded wisdom gives.
— *Holy Kural*

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு (இன்)
உளத்தொண்டு வாழ்க !

**நீங்கள் மில்க்வைற் தயாரிப்புகளுக்குத் தரும் ஆதரவின் பயன்**

- ★ வசதி, வாய்ப்பு, பயன்கருதி மரங்களை நடுதல்.
- ★ வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்.
- ★ பனைவளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்.
- ★ பசளைதரும் செடிகள் மரங்களை உண்டாக்குதல்.
- ★ ஊர்கள்தோறும் குளங்களை ஆழமாக்கி மழைநீரைத் தேக்குதல்.
- ★ சனசமூக நிலையங்களில் வாசிக்க வழிசெய்தல்.
- ★ பக்திநெறியில் பரமனைப் பணிந்துவாழப் பயிற்றுதல்.
- ★ எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்.
- ★ வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழிவகுத்தல்.
- ★ எல்லோரும் யோகாசனம் பயிலவைத்தல்.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த
பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் தந்த தத்துவஞானி

கலாநிதி வ. பொன்னையா (பொன்னையா மாஸ்டர்)

கொக்குவில் என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா மாஸ்டர் ஓர் அசாதாரணப் பிறவி. அதனால் அவரைப்பற்றி எழுதுவதென்பது எளிதான காரியமன்று. ஒருவர் இரண்டொருதுறையிலேதான் சிறந்து விளங்குவது வழக்கம். இவர் அதற்குப் புறநடையானவர். அஃதாவது பல்துறை விற்பன்னர். விஞ்ஞானம், கணிதம் முதலிய அறிவியற்கலை வல்லுநர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், லற்றின் ஆகியமொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவர். சோதிடநிபுணர். கவிஞர் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கலைச் சொல்லாக்கக்குழுவில் அவ்வத்துறையில் ஆற்றல்பெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்களே இடம் பெற்றனர். ஆனால், இவரே, கணிதம், விஞ்ஞானம், அரசியல், தத்துவம் முதலிய பல்வேறு துறைகளுக்கும் நியமிக்கப்பட்ட குழுக்களில் இடம்பெற்றுள்ளார். இஃது அவரது அறிவுத்திறனை எடுத்துக்காட்டுவதாகும். தாய்மொழி மூலம் உயர்தரக் கல்வி நடைமுறைக்கு வந்த பின் இவரால், ஆங்கிலத்திலிருந்து பல விஞ்ஞான கணித நூல்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இதுவும் பல்வேறு துறைகளில் அவருக்கிருந்த ஆற்றலைப் புலப்படுத்துவதாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சமயக்கல்வியை ஆழ்ந்து நுணுகிக் கற்றுள்ளார். வேதாந்தம், சித்தாந்தம் என்பவற்றை மிக நுணுகிக்கற்றவர். "The Saiua Siddhanta Theory of Knowledge" என்பது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'கலாநிதி''ப் பட்டத்திற்காக எழுதப்பட்டது. இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகமே பதிப்பித்து வெளியிட்டமை அந்நூலின் பெருமைக்கு அரிய சான்று. திருக்குறளுக்குக் கடவுள் வாழ்த்துத் தொடக்கம் துறவறவியல் முடிய சைவசித்தாந்த பரமாக உரை எழுதியுள்ளார். அவ்வுரை "திருக்குறள் பொன்னுரைப் பகுதிகள்" என்ற பெயருடன் தமிழ் நாட்டில் வெளியாகிய "தமிழ்ப் பொழில்" என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. இவையெல்லாம் சமயத்துறையில் அவரது நுண்மான் நுழை புலனை எடுத்துக் காட்டுவனவாகும்.

இத்தகைய பேரறிஞரின் தொடர்பு மிகமிகச் சிலகாலமாக எனக்கும் கிடைத்தமை முற்பிறப்பில் யான் செய்த தவமென்றே கருதுகின்றேன். நீண்டகாலத் தொடர்பில்லாமற் போனமை எனது தவக்குறைவென்றே கூறவேண்டும். அவர் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறிய பின் அவரிடம் சிலர் சமயக்கல்வி பயின்றதை நான் கண்டேன். கல்விபயின்றவர்கள் சாதாரணமானவர்களல்லர். சமயநெறி வாழ்ந்த துறவிகள்சிலர்; வேதாந்த நூல்களைக் கற்றுணர்ந்தோர் சிலர். இந்தச் சமய வகுப்பு என்னையும் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. என்னைப்போல் இரண்டொருவர் தாம் இல்லறத்தார். மற்றையோர் துறவிகள்; வயது முதிர்ந்தவர்கள் "இளங்கன்று பயமறியாது" என்பார்கள். சமய அறிவு இல்லாத நானும் பொன்னையா மாஸ்டரின் வகுப்பிற் சேர்ந்து விட்டேன். வகுப்புக்கு ஒழுங்காகச் செல்லாத மாணவன் நான் ஒருவனே. காரணம் உத்தியோகம்.

வகுப்பில் பல பாடல்கள் நடைபெற்றன. பகவத்கீதை. உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பாமதி, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானபோதமாபாடியம், தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் என்ற இன்னோரன்னவை. ஒருமணித்தியாலம், ஒன்றரை மணித்தியாலம் பாடம் நடக்கும். சுலோகங்களைச் சூத்திரங்களை வாசித்துப் பொருள் சொல்லுவதன்று அவரது போதனை. ஒரு சுலோகம் முடியும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை ஒருவரியுடன் வகுப்பு முடியும். ஒருசுலோகமாயிருக்கலாம்; ஒருவரியாயிருக்கலாம். ஆனல், சமய உண்மைகள் உள்ளத்தினின்று வாய்மூலம் சொற்களாக வெளிவந்துகொண்டிருக்கும். கேட்கக் கேட்கப் பேரானந்தம் எம்மையறியாமலே பிறக்கும் அந்த வகுப்பை, போதனையென்பதிலும் சாதனை யென்பதே பொருந்தும். ''உள்ளத்தில் உண்மையொளியுண்டாயின் வாக்கினிலே உண்மை ஒளி உண்டாகும்'' என்பர். அவர் கற்பிக்கும்போது அந்த உண்மையை உணரக்கூடியதாயிருந்தது. இளமையிலேயே உத்தியோகத்தைவிட்டு சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசம் பெற்ற சுவாமி ஒருவர், இலங்கை, இந்தியா எங்கும் இந்துசமய சாஸ்திரங்களைக் கற்க அலைந்து திரிந்தவர், பொன்னையா மாஸ்டரின் சமயவகுப்பிற் சிலகாலம் பயின்றபின் இனி எங்கும்போகத் தேவையில்லையென்று அவரிடமே சமயசாஸ்திரங்களைக்கற்று வாழ்வதுடன் அமைந்து விட்டார். அவ்வளவுக்கு அவரது சமயபோதனை வசீகரித்துவிட்டது.

அவரது கல்விச் சிறப்பிலும் வாழ்க்கை நெறிதான் எமக்கு வழிகாட்டி. இளமை தொடங்கி பல சமய சாதனைகளிலீடுபட்டவர். சுன்ஞகம் செல்லாச்சியம்மையாரிடம் அடிக்கடி சென்றுவருவது வழக்கம். யோகர் சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர். இதனை அவர் இயற்றிய ''சைவசித்தாந்தஞான விளையாட்டு'' என்னும் நூலில் ஆசிரியர் வழிபாடு என்ற செய்யுளால் அறியலாம்.

''சும்மா விரு வொருபொல்லாப்புமில்லை யெனத் தெருட்டிநின்றே
யிம்மாநிலத்து யானுய்ய ஞானவிளையாட் டருளிய
பெம்மான் தென்னம் பொழில்சூழ் கொழும்புத்துறை நகர்மேவிய
வெம்மா னருள்வள்ளல் யோகசுவாமி போற்றி போற்றி''

என்பதே அச்செய்யுள்.

அந்நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்:-

பரிவே சொரூபமாறு கொழும்புத்துறை யோகசுவாமி என்பாரோடு சென்று நாற்பது ஆண்டுகளாகப் பழகிய பழக்கத்தின்பயனுக யான் அறிந்தவற்றைப் பிறருக்கு அறிவுறுத்தற் பொருட்டு இந்நூலை இயற்றியுள்ளேன். உபநிடதக் கருத்துக்களும் ஆகம முடிபுகளும் இந்நூல் முழுவதிலுஞ் செறிந்து காணப்படும்.

சைவசித்தாந்த ஞான விளையாட்டு என்னும் நூல் அவரது உயர்ந்த சாதனை மார்க்கத்தை எடுத்துக்காட்டும்

'' சிவன்வேறு நீவே றென்ற நிலைநீங்கி
யலைகடலிற் சென்றடங்கு மாறு போலவும்
பண்ணையும் ஓசையும் போலவும் நீரு
மிரதமும் போலவும் கலப்பு முடனுதலும்
வேருதலு நின்கட்டோன்ற வான்ம
போதமுங்கண் ணொளியுந் தம்முணிற்கு
மாறு அத்துவித நிலைபெறும்
வண்ணஞ் சிவனெடு வேறறநிற்க''

என்பது சைவசித்தாந்த ஞானவிளையாட்டு என்னும் நூலிலுள்ள ஒரு செய்யுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா மாஸ்டர் யாழ். இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றுங் காலங்களில் யோகர் சுவாமிகளிடஞ் சென்று பல சாதனைகளில் ஈடுபட்டுள்ளார். இரவு 7, 8 மணிக்குப் பின்னர் யோகர் சுவாமிகளின் கொழும்புத்துறை ஆசிரமத்திற்குச் சென்று இரவு 12, 1 மணிவரை இருவரும் தியானத்திலிருப்பார்கள். அதன் பின் விடுதிரும்புவது வழக்கம், ஒருநாள் இவர் சுவாமிகளின் ஆசிரமத்திற்குச் செல்லும் போது, ''பசிக்கிறது; பிட்டுத்தின்றல் நல்லது'' என்று எண்ணினாராம். அவ்வெண்ண அலைகள் சுவாமிகளின் எண்ண அலைகளுடன் கலந்து விட்டன போலும் சுவாமிகள் '' பிட்டுக்கொண்டு வா,' என்று கட்டளையிட்டார். சிறிதுநேரஞ்சென்றதும் மூதாட்டி ஒருவர் பிட்டுக்கொண்டுவந்து சுவாமிகளின் திருச்சந்நிதியில் வைத்தாராம். சுவாமிகள், '' நானல்ல; பொன்னையா தான் கேட்டது அவருக்குத்தான் கொடு'' என்றாராம். அதனை உண்டு பசிதீர்ந்த தாகக் கூறினார். சுவாமிகளோடு சேர்ந்து பல சாதனை மார்க்கங்களிலீடுபட்ட ருசிகரமான பல சம்பவங்களைச் சமய வகுப்பின்போது கூறுவார். அவை சமய சாத கர்களுக்குப் பெரிதும் பயன்படுவன.

வேதாந்தம், சித்தாந்தம் என்று கூறி வாதஞ்செய்வோர் நம்மிடையே இன்றும் உளர். அவரது சமயவகுப்பில் தடித்த வேதாந்திகளு மிருந்தனர். தடித்த சித்தாந் திகளு மிருந்தனர். வேதாந்தம், சித்தாந்தம் என்பன ஞானபாதத்தை அடையும் உபாயத்தைக் கூறும் மார்க்கங்கள். மரத்தில் ஏறுவதற்கு ஏணி உதவுவது போல வேதாந்த சித்தாந்தமும் ஞானபாதத்தை அடைய வழிகாட்டும் படிகள் மரத்தில் ஏறிய பின் மரத்தில் ஏற எனக்கு உதவிசெய்த ஏணியே என்று அதனைக் கட்டிப் பிடிப்பார் யாருமில்லை. அதுபோலவே ஞானபாதத்தை அடைய வழிகாட்டும் வேதாந் தம், சிந்தாந்தம் என்பவற்றைக் கட்டிப்பிடித்து வாதஞ் செய்வதிற் பயனில்லை என ஆணித்தரமாக எடுத்துக் கூறுவர். இன்று கூட யோகர் சுவாமிகளைச் சித்தாந்தி என்பர் சிலர். எவ்வளவு பேதமை!

சமயக்கிரியைகள் பற்றியும் ஓர் உவமை மூலம் விளக்குவார். உதைபந்தாட் டத்தின் நோக்கம் தேகப்பயிற்சியே. அதனைவிளையாடும்போது பல பிரமாணங்களை அநுட்டித்து விளையாடுவது வழக்கம் நாம் தேகப்பயிற்சி என்ற நோக்கத்தைமறந்து பிரமாணங்களுக்கும், வெற்றி, தோல்விக்குமே முக்கியத்துவம் அளிக்கிறோம். அது போலவே சமயக்கிரியைகள் யாவும் ஞானமார்க்கத்தை அடைய உதவுவன. நாம் அந்நெறியைக் கைவிட்டுக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றோம். அவரியற்றிய ''சைவசித்தாந்த ஞானவிளையாட்டு'' என்னும் நூல் அவர்களது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி.

அவர்களது களங்கமற்ற சிரிப்பு, பிறர்குற்றங்காணா இயல்பு, பற்றற்றவாழ்க்கை, ஆன்மசாதனை என்பன எமக்கு வழிகாட்டுவனவாக. சுருங்கக்கூறின் பொன்னையா மாஸ்டர் ஓர் ஆன்ம சாதகன்.

அவர்களது ஆன்மா எமக்கு வழிகாட்டப் பிரார்த்திப்போமாக.

பணிவுடைய மாணவன்

அ. சரவணமுத்து B. A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆடவல்லார் கலைவளர்த்து எம்மை ஆடவைக்கும்
## கொக்குவில் கலாபவனம்.



(கலைச்செல்வன்
சுப்பையா அவர்கள்)

கலாபவனம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொக்குவில் கிராமத்தில் 1958ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கலா பவன நாட்டிய மண்டபம் கலையுள்ளங்களைக் கவரும் சித்திரச் சிற்பங்கள் அமைந்த ஒரு கலைக் கூடாமாகும் இக் கலைக் கூடத்தில் பத்தாண்டுகள் அருங்கலையான பரதநாட்டியத்தை பயிலும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. கலாபவனம் கொக்குவில் கிராமத்திற்கோர் அணிகலனாய் விளங்குவதுடன் நாட்டியப் பேரொளியினைப் பரப்பும் கலங்கரை விளக்கமாகவும் இலங்கி வருகிறது. கலாபவனத்தை நினைவுகூரும்பொழுது அதன் ஸ்தாபகரும் எனது குருவுமாகிய காலஞ்சென்ற கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களை இங்கு குறிப்பிடாது விடமுடியாது.

திரு. சுப்பையா அவர்கள் தென்தமிழ்நாட்டின் தெய்வீகக் கலையான பரத நாட்டியத்திலும் மலையாள நாட்டின் உளங்கவர் கலையான கதகளி நாட்டியத்திலும் மிகவும் சிறந்து விளங்கினார் இவ்விரு கலைகளையும் ஈழத்தில் பரப்பிய பெருமை அவரையே சாரும் இவர் சிறுவயதிலேயே நாட்டியக் கலையில் நீங்காத பற்றுடையவராக இருந்ததினால் திருச்செந்தூர் சென்று திரு மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பரதமும் உலகப் புகழ் நடன கலாநிதி குரு கோபிநாத்திடம் கதகளியும் பயின்று பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியதும் கலாபவன நாட்டிய நிலையத்தை 1956ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 1956இல் ஒரு சிறிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட கலாபவனம் சித்திர சிற்பமமைந்த புதிய நாட்டிய மண்டபத்தை 1958இல் பெற்றது இந்த நிரந்தரக் கலைக் கூடத்தில் 6-6-60முதல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. கலா பவனம் கலைக்கு ஆற்றிவரும் தொண்டுகளோ பலப்பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருமலை, பொலன்நறுவை, குருநாகல், கொழும்பு, காலி ஆகிய இடங்களில் சுதந்திர தின விழாக்களிலும், கலைவிழாக்களிலும் பங்குபற்றி வெற்றி விருதுகள் பல பெற்றிருக்கின்றது. நவராத்திரி காலங்களில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வீதியில் அமைந்திருக்கும் திறந்தவெளி அரங்கில் கலாபவன மாணவிகள் தரம் நிறைந்த களைகட்டிய இனிய நடனங்களைப் பொது மக்களுக்கு வழங்கியுள்ளார்கள் இதைத்தவிர நாதஸ்வரக்கச்சேரிகள் இன்னிசை விருந்துகளும் நவராத்திரி விழாக்களில் இடம்பெறுவன. இந்தியா, சீனா, ரூஷியா, இங்கிலாந்து, அமெரிக்கா பேன்ற பிற நாடுகளிலிருந்து வந்த கலாச்சார நட்புறவுக் கலைஞர்களை உவந்து வரவேற்று பரதக் கலையின் நுட்பங்களை விளக்கி உண்மைக்கலையை உணரவைத்த பெருமையும் கலாபவனத்திற்குண்டு கொக்குவில் நங்கையருக்குமட்டுமன்றி மற்றும் குடா நாட்டின் பலபகுதிகளிலுமிருந்து வந்த நங்கையருக்கும் அருங்கலையாம் பரதத்தை முறையாகப் பயிற்றுவித்த பெருமையும் கலாபவனத்தையே சாரும். இக்கலை பயின்ற பலர் இலங்கையின் பல பகுதிகளில் நடன ஆசிரியர்களாகத் திகழ்கிறார்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் பிரபல நடன ஆசிரியர்களாக மிளிர்பவர்கள் அனைவரும் எம்மூர் கலைச்செல்வன் திரு. சுப்பையா அவர்களின் மாணவர்களேயாவர். இராமநாதன் நுண்கலைக்கல்லூரி நடன விரிவுரையாளராகக் கடமையாற்றும் செல்வி சாந்தா பொன்னுத்துரையின் முதல் நடன ஆசிரியர் காலஞ்சென்ற திரு. சுப்பையா அவர்களே. இதே கல்லூரியில் கடமையாற்றும் திருமதி கிருஷாந்தி ரவீந்திராவும் பல காலம் கலாபவனத்தில் பயிற்சிபெற்று அரங்கேற்றமும் செய்தவராவர். கதகளி மாணவர்களுள் வேல் ஆனந்தன் போன்றவர்கள் இவரையே முதற் குருவாகக் கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர். செல்வி சியாமளா நடராஜா, திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தன், திருமதி வைஜயந்திமாலா போன்றவர்களும் மிகவும் பிரபலமான திரு. அப்பையாவின் மாணவிகளாவர். அத்துடன் பல பிரமுகர்கள், அரசாங்க அதிபர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களும் விஜயம்செய்து நடன வகுப்புகள் நடாத்தப்படுவதையும் பார்வையிட்டு மெச்சியுள்ளார்கள். இங்கு நடனம் பயிலும் பலர் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் நடனப்போட்டிகளில் முதல், இரண்டாம் இடங்களைப் பெற்று கலாபவனத்திற்குப் புகழ் தேடித்தந்துள்ளனர்.

திரு கலைச்செல்வன் சுப்பையாவிடம் நாட்டியம் பயின்று அரங்கேற்றம் செய்தவர்கள் மிகச்சிலரே. பயிற்சியைத் துரிதப்படுத்தி பயனற்ற முறையில் அரங்கேற்றம் செய்யாமல், ஆட்டம், பாட்டு நட்டுவாங்கம் எல்லாம் இசையக் கலையில் நல்ல தேர்ச்சியும் ஞானமும் ஏற்பட்டு உணர்ச்சி பாவத்தில் ஆடவல்லமைபெற்ற பின்னரே அரங்கேற்றம் நடைபெற வேண்டும் என்னும் சீரிய நோக்கமுடையவர். நாட்டியக் கலையை நன்கு அறிந்தவர்கள் மாத்திரமல்லாது மற்றையோரும் 'நன்று' என்று பாராட்டும் வகையில் அவருடைய பயிற்சிகளும் உருப்படிகளும் அமையும். கலையை சாஸ்த்திர முறைப்படி பயிற்றுவிப்பதோடு மனத்திருப்தியடையாது நற்பண்புகளையும் நல்லொழுக்கத்தையும் ஒருங்கே போதித்தார். அவர் விருப்பத்திற்கமையப் பன்னிருவர் மட்டுமே அரங்கேற்றம் செய்துள்ளனர். என்னுடைய அரங்கேற்றமும் 1974 ஆம் ஆண்டு எனது குழுவின் நட்டுவாங்கத்துடன் சிறப்பாக நடைபெற்றது. எனினும் இவ்வருங்கலையைத் தொடர்ந்து பயில முடியாமல் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மேற்கொள்ள வேண்டியிருந்ததால் நடனப்பயிற்சியை நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 ஆம் ஆண்டு திரு. சுப்பையா அவர்கள் தமது 55 ஆவது வயதில் திடீரெனக் காலமானார். அவர் இறப்பு எமது ஊருக்கும் கலாபவனத்திற்கும் நாட்டிய உலகுக்கும் ஒரு பேரிழப்பாகும். எனது குருவின் மகளான திருமதி சாந்தினி சிவனேசன் பரதக்கலையைத் தந்தையிடம் பயின்று பின்னர் அடையாறு கலாக்ஷேத்திராவில் டிப்ளோமாப் பட்டம் பெற்று, திரு. கோபிநாத் அவர்களிடம் கதகளி நடனமும் பயின்று, தற்பொழுது கலாபவனத்தின் அதிபராகத் திகழ்கின்றார், இவர் தந்தையின் சீரிய கொள்கைகளைக் கடைப்பிடித்துச் சிறந்த முறையில் கலாபவனத்தை வளர்த்து வருகின்றார். இத்தகைய சிறந்த கலாபவனம் சீரும் சிறப்பும் பெருகி வளர்ச்சியடையவும் கொக்குவில் எமது ஊருக்குப் பெருமை சேர்க்கவும் மஞ்சவனப்பதி முருகன் அருளும், நடனக்கலையின் முதல்வராகிய கூத்தன் பெருமான் திருவருளும் சேர்ந்து வழி நடத்த உளமார இறைஞ்சுகின்றோம்.

கோவில் வீதி,
கிழக்கு, கொக்குவில்.

செல்வி சசிலேகா பரராஜசிங்கம்
(பல் வைத்தியம் -3ம் வருடம்
பேராதனை)


கலாபவனம் வளமுடன் விரிவடைந்து நாட்டியம், இசை பயிற்றும் பெரும் கலைக்கோயிலாக வளரக் கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு, கொக்குவில் மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

With the Best
Wishes
from

RATNA BROS.

GENERAL HARDWARE MERCHANTS

2, GRANDPASS ROAD, (*Armour Street Junction*) COLOMBO 14.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். — குறள்

**Propriety of conduct leads to eminence, it should therefore be preserved more carefully than life.** — *Holy Kural*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவிலில் இன்னிசை பயிற்றும் இசையரசி
# திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்கள்



தெய்வாலயமாம் முருகன் புதுக்கோயிலும், வித்தியாலயமாம்கொக்குவில் இந்துக்கல்லூரிச் சூழலில் கையில் யாழை நினைவூட்டும் வயலினும் இனியமழலைக் குரலில் இசையும் இயற்றும் இசையரசியாம் திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களே எம்மூரின் இசைவளர்க்கும் திருவாட்டியாவார்.

எம் இசைத்தாய் ஆகிய இவர் இன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்தின் நுண்கலைப்பிரிவின் தலைமைப்பீடத்தில் வீற்றிருக்கும் தகைமையுடையர். இங்கு பல்கலைகழகப் பட்டயம் (Diploma) பெறப்பயிலும் மாணவ மாணவியருக்கு ஆக்கம் அளித்துவருகின்றார். 1974ம் ஆண்டு கல்வி அமைச்சினால் இசை விரிவுரையாளராகப் தேர்வுபெற்றவராவர்.

சிங்கப்பூரில் 1926ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 நாள் பிறந்த இவர், அங்கு வளர்ந்து அங்குள்ள யூனியன் கல்லூரி என்னும் ஆங்கிலக் கல்லூரியில் கல்விபயின்று கொண்டிருக்கும்போதே இசையில் ஈடுபட்டார். இவர் தனது 9 ஆவது வயதில் இசை பயில ஆரம்பித்தார். சிங்கப்பூரில் திருவாளர்கள் குமாரசாமி, சிங்காரம், ராமசாமி போன்ற தென்னிந்தியக் கலைஞர்களிடம் வாய்ப்பாட்டும், ராமசாமிப் பிள்ளையிடம் வயலினும் கற்றார். சகோதர சகோதரிகளுடன் தந்தையின் அதிக பிரையாசையால் இசை பயின்று இவரது முதலாவது இசைக்கச்சேரி அங்குள்ள மக்களின் மனதை கவர்ந்திழுத்ததுடன் மக்களின் ஆதரவையும் வரவேற்பையும் புகழையும் பெருமையையும் தேடித்தந்தன. அத்துடன் நில்லாமல் சிங்கப்பூர் மலேசியா வானொலியில் கச்சேரி செய்வதற்காகவும் அழைத்தார்கள். இவருடைய முதல் வானொலிக்கச்சேரி சிங்கப்பூரில் இவருடைய 16 ஆவது வயதில் 42 ஆம் ஆண்டு மகாயுத்தம் தொடங்கிய அன்று முதல்நாள் ஒலிபரப்பாகியது. இந்த மகாயுத்தம் நடக்கும் பொழுதுதான் தீவிரமாக இசைபயில ஆரம்பித்தார். மகாயுத்தம் முடிந்த கையுடன் பெற்றோருடன் இந்தியா சென்று அங்கு குருகுலவாசம் செய்து பிடில்சுப்பையரிடம் வயலினும் அவருடையபிள்ளை பாலசுப்பிரமணியஐயரிடம் வாய்ப்பாட்டும் 2 வருட காலமாகக் கற்றுத் தேர்ச்சி அடைந்து, தென்னிந்திய வானொலியில் கச்சேரிகள் பல இசைத்தனர். 46 ஆம் ஆண்டு தனது தாய் நாடான இலங்கைக்கு வந்து இங்கு வயலின் வாசித்தபடியே பல சுதந்திரதாகப்பாடல்களைப் பாடி மக்களின் மனதை கொள்ளைகொண்டு இசை ஆர்வத்தை வெகு வேகமாகத் தூண்டிவிட்டார். அத்துடன் தனது தாயின் ஊரான கொக்குவிலில் உள்ள பிரசித்தமான கொக்குவில் இந்துக்கல்லூரியில் 48 ஆம் ஆண்டில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று, அங்குள்ள சிறுவர், சிறுமியருக்கு அன்பையும் பண்பையும் இசையுடன் கலந்து ஊட்டித் தானும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்வித்து வந்தார். 1949 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கணவரின் தூண்டுதலினாலும் முயற்சியாலும் 1957 இல் சென்னை கர்நாடக இசைக்கல்லூரியில் சேர்ந்து சங்கீத வித்வான் பட்டத்திற்கு இசை பயின்று 1959 இல் 1ம் பிரிவில் வாய்ப்பாட்டு பிரதான பாடமாகவும் கோட்டு வாத்தியம் துணைப்பாடமாகவும் சித்தியெய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குவந்து பல கல்லூரிக் கட்டிட நிதிக்கும், பொதுநல அபிவிருத்திக்கும் ஏராளமான கச்சேரிகளைக் கொடுத்து உதவியுள்ளார். அத்துடன் எமது நாட்டில் கோயில்களில் கச்சேரிசெய்ய ஆரம்பித்த பெண்மணி இவராவார். இசை இறைவனுக்கே அர்ப்பணமாக வேண்டும் என்ற கொள்கையைப் பரப்புவதற்காகவும் இசையினால் இறைவனை அடையலாம் என்கிற நம்பிக்கையை உண்டாக்குவதற்காகவும் கோவில்களில் கச்சேரிகளைச் செய்துவந்தார். இவர் கச்சேரி எங்கு நடந்தாலும் மக்களின் பெருவெள்ளத்தை நாம் அங்கே காணலாம். இன்றும்கூட இவரது கச்சேரியை கேட்கும்பொழுதெல்லாம் நாமும் நிச்சயமாக இசை பயிலவேண்டும் என்ற அவாவும் ஆசையும் உண்டாகிறது. ஒவ்வொரு மனிதஉள்ளத்திலும் இவ்வாசை நிச்சயமாக உண்டாகும். இந்த ஆசையினால் அவரிடம் இசை பயில வரும் மாணவ மாணவியர் பலர். அதில் நானும் ஒருத்தி. எந்த நேரம் சென்றாலும் முகத்தில் ஒருவித அதிருப்தியையும் காட்டாமல் எல்லோரையும் தன் மக்கள் போல் அன்புடன் உபசரித்து ஒருபாடம் எத்தனைதரம் என்றாலும் அலுக்காமல் முகத்தில் சிரிப்பு மாறாமல் சொல்லித்தந்து எங்களுக்குப் பாடத்தின் சிரமம் தெரியாமல் சொல்லித்தருவதில் அவருக்கு நிகர் அவரே. அத்துடன் இசை பயிலவரும் மாணவ மாணவியரிடம் ஒருவிதமான பலனையும் எதிர்பாராமல் இசை ஆர்வமூட்டி உதவிகள் பல செய்து கற்பித்துவருகிறார். இவருடைய மிகுந்த அன்பினால் கவர்ந்திழுக்கப்பட்டு தாங்களும் அவரிடம் இசை பயிலவேண்டுமென்ற பிடிவாதத்தில் வரும் வயதில் மிகவும் சிறிய குழந்தைகளுக்காக ஒரு ''பாலர் விகாஸ்'' என்ற ஒரு பிரிவைத் தொடங்கி அதில் சிறு சிறு பஜனைப்பாடல்கள் முதலியவற்றை அச் சிறுகுழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்து அக்குழந்தைகளை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்து வருகிறார்.

வட இலங்கை சங்கீதசபை நடத்திவரும் சங்கீதப் பரீட்சைகளுக்குக் கடந்த 30 ஆண்டு காலமாக மாணவ மாணவியரைத் தயார்ப்படுத்தி வருகின்றார். வாய்ப்பாட்டு மாத்திரமல்லாமல் வயலின் சொல்லிக்கொடுப்பதிலும் மிகவும் கைதேர்ந்தவர். இவரிடம் இசை பயின்றவர்களில் அநேகமானோர் தற்போது வானொலிப் பாடகர்களாகவும் பல கல்லூரிகளில் ஆசிரியைகளாகவும் கடமையாற்றி வருகின்றார்கள். 1974 ஆம் ஆண்டு கல்வி அமைச்சு நடத்திய தேர்வுப் பரீட்சையில் இசை விரிவுரையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், இன்று யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவில் தலைமைப் பீடத்தைத் தாங்கிக் கடமையாற்றி, அங்கு டிப்ளோமா பரீட்சையில் தேறுவதற்கு பயிலும் மாணவ மாணவியரைத் தயார்படுத்தி வருகிறார். தன் பிள்ளைகளையும் இசைத் துறையில் ஈடுபடுத்தி மூத்தமகன் வித்வான் பட்டம் பெறவும், இளைய மகளை நடனத்தில் ஈடுபடுத்தி அரங்கேற்றியும் மகிழ்ந்தார். இன்று பல சாயி பஜனைகள் பல இடங்களில் நடத்தி இசையையும் பக்தியையும் யாழ்ப்பாணம் முழுவதும் விதைத்து இசை வளர மிகவும் தொண்டாற்றி வருபவர் இவரே. இசை ஓங்கி வளர்ந்திருக்கும் நாட்டில் செல்வம் கொழிக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே இந்த அருமையான இசைத்தொண்டரைப் பெற்ற எமது கொக்குவில் கிராமம் மிகவும் பெருமையடைகிறது. இவரைக் குருவாகப் பெற்ற நானும் மிகமிகப் பெருமையடைகிறேன். இவரது தொண்டு இன்னும் பல ஆண்டுகள் வளம்பெற்று வாழ கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய சுவாமிகள் அருள்புரிவாராக.

**சுசி. அரியரத்தினம்**
'கனகவாசம்'
(யாழ் வளாக நுண்கலைப்பகுதி டிப்ளோமா வகுப்பு மாணவி) பிரம்படி, கொக்குவில்.

**திருவாட்டி சரஸ்வதி பாக்கியராசா அவர்கள் இசைத்தொண்டு வளர்ந்து, கொக்குவிலில் ஓர் இசைக் கல்லூரியாகப் பெருவாழ்வு பெறக், கொக்குவில் முன்னேற்ற மன்றம் — கொழும்பு, கொக்குவில் மக்கள் சார்பில் வணங்கி வாழ்த்துகின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டர் திரு. ஆ. சின்னத்தம்பி (சமாதான நீதவான்)

### அவர்களுக்கு

## மன்றத்தின் பாராட்டு



கொழும்பு மாநகரில் கொக்குவில் பெருமகனாக நாம் பெருமைகொள்ளக்கூடிய திருத்தொண்டில் உயர்ந்த பெரியார் திரு. ஆ. சின்னத்தம்பி ஐயா ஆவர். அவர் தொண்டினைப் போற்றி இவருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் 1975 — 1977 ஆண்டுவரை தலைவராக ஏற்றிப் போற்றியது நாடறியும். இவர் பங்குகொள்ளாத சைவப்பணி கொழும்பில் இல்லையென்றால் மிகையாகா. இத்துடன் தாம் பிறந்த மண்ணில் கொக்குவிலில் என்ன- பொதுமக்கள் வசதியேற்படினும், இதற்கு கொழும்பில் பொருள் சேர்த்துதவவோ மற்றும் இவர் செல்வாக்கால் ஈடேறக் கூடிய அலுவல்கள் யாவற்றிற்கும் என்றும் உதவும் பெருவுளமுடையார்.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு திரு. கார்த்திகேசு அதிபராகவிருந்த காலத்தில் கல்லூரி விரிவாக்கத்திற்குக் கொழும்பில் (சுபோத விலாச சபையாக) இயங்கிய நாடக மன்றத்தில் நாடகங்கள் வைத்துப் பணம் சேர்த்துதவியதும், இன்று கொக்குவிலில் மகளிர் கல்லூரியாக மலர்ந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியும் கட்டப்பட்ட 1938 ம் ஆண்டிலும் இவற்றிற்குக் கொழும்பில் பொருள் சேர்க்கவும் பெரிதும் உதவினார்.

இவர்களது வாழ்நாளில் 1925 ம் ஆண்டில் கொழும்புக்கு அரசாங்க சேவைக்கு வந்ததிலிருந்து இன்றுவரையும் இவர் தொண்டில் நிலைக்களமாகத் திகழ்வது கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையாகும். இத் தொண்டில் இவர் கூட்டாளிகளுடன் பல தொண்டுள்ளமுடைய பெரியோருடனும் அருணாசலம் மகாதேவா அவர்கள் தலைமையில் தொடங்கிப் பணியாற்றிவந்துள்ளனர். இவ்வமைப்புக்கு 1952 ம் ஆண்டில் ஒரு நிரந்தரக் கட்டிடத்தை அமைத்துத் தொண்டுசெய்து, 1965 ம் ஆண்டில் மருதானை கப்பித்தாவத்தையில் கதிர்காம யாத்திரீகர் தொண்டர்சபை இன்றுஉள கட்டிடத்தை அமைத்தனர். இவ்வமைப்பில் 1964 — 1974 ஆண்டுவரை துணைத் தலைவராகவும் இன்றும் தலைமை தாங்கித் தள்ளாத வயதிலும் தொண்டாற்றுவது இவர் தணியாத தொண்டின் ஆர்வத்தைக் காட்டுவதாகவுள்ளது.

கதிர்காம யாத்திரீகர் தொண்டர்சபை நாட்டில் பல பகுதியிலிருந்தும் கதிர்காமம் செல்லும் முருகன் அடியவர்கள் கொழும்பில் தங்கிச் செல்லவும் உணவு வசதிகளும் செய்துகொடுப்பதில் ஐம்பத்தைந்து ஆண்டுகள் பெருஞ்சாதனை செய்துள்ளனர். 1925 ம் ஆண்டு தொட்டுக் கொழும்பில் தொண்டாற்றிய இச் சபை 1958 ம் ஆண்டில் இனக்கலவரத்தின்பின் கைவிடப்பட்ட மாத்தறை மடத்தில் யாத்திரீகர் தொண்டினையும் விரிவாக்கிப் பணியாற்றினர். ஆனாலும் மீண்டும் மாத்தறை மடத்தின் தொண்டு 1977 ம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இயக்கம் தடைப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
183304

1977 ம் ஆண்டுக்குப் பின் இவர்கள் நோக்கு மன்னூரில்மாதோட்டத்துப் பாலா வியின் கரைமேல் உள்ள கோயிலாம் திருக்கேதீஸ்வரம் செல்லும் சைவப் பெருமக்க ளுக்கு வசதியளிக்க அங்கு ஒரு பெருமடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் ஆண்டுதோறும் விழாக்காலத்தில் அன்னதானம் வழங்குகின்றனர். இவர்கள் கட்டும் மடம் இனிது விரைவில் நிறைவுபெற்று அடியார்க்கு உதவப் பணம் படைத்தோரை உதவ வேண்டுகிறோம்.

கப்பித்தாவத்தையில் உள்ள 1791 ம் ஆண்டு தோன்றிய ஸ்ரீபால செல்வ விநா யகர் கோயிற் திருப்பணியிலும், 1933 ம் ஆண்டு தொட்டு ஈடுபட்டு 1936 ம் ஆண் டில் தர்மகர்த்தாவாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதையடுத்து இவர் இடையரு உழைப்பில் (1948) ம் ஆண்டு கோயிலைப் புதுக்கித் திருப்பணி செய்து சிறப்புறக்கட்டி இதற்கு வேண்டிய வசதிகள் யாவும் அமைத்துக் கொடுத்துக் கொழும்பில் மற்றக் கோயில்களை விட இங்கு நாட்டில் இன்றைய பிரதம அமைச்சர் பிரேமதாசா அவர் கள் போன்றோரையும் வந்து வணங்க வைத்துள்ளனர்.

இவர்கள் கதிர்காம யாத்திரீகர் தொண்டர்சபை கல்வித் தொண்டு செய்யக் கப்பித்தாவத்தையில் 1954 ம் ஆண்டு தமிழ்ப் பிள்ளைகளுக்கான ஒரு பள்ளிக்கூடத்தைத் ''தொண்டர் வித்தியாலயம்'' ஆகக் கட்டி இதனை திரு. த. உருத்திரா (அன்றைய மாநகர பிதா) அவர்களால் திறந்துவைத்துத் தொண்டாற்றியதுடன், அது காலத் தால் அழியும் தறுவாயில், இதனை 1976 — 1977 ம் ஆண்டில் மூன்றுமாடிக் கட்டிட மாக அமைக்கத் தம் அரசியல் செல்வாக்கையெல்லாம் நல்கி இன்றும் தாம் செய்த தேவாலயம், வித்தியாலயம், மடாலயம் இவற்றைக் காப்பதில் தம் வாழ்நாளைப் பய னுக்குவதில் இன்புற்றிருக்கின்றூர். 1906 ம் ஆண்டு பிறந்த அன்னூர் இன்னும் பல் லாண்டு நலத்துடன் பெருவாழ்வு எய்தச் ஸ்ரீ பால செல்வ விநாயகரை வேண்டி வாழ்த் துகின்றோம்.

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கொக்குவில் முன்னேற்ற மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நன்னாளிலே அம் மன்றத்தாருக்கு எனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கொக்குவிலைப் பிறப்பிடமாக்கொண்டு கொழும்பில் வாழுகின்ற பெரியார்கள் ஒன்று சேர்ந்து தமது சொந்தக் கிராமத்தை முன்னேற்றுவதற்காக இம்மன்றம் ஆரம்பிக்கப் பட்டது. இப்படியான மன்றங்கள் தோன்றி சிலகாலம் இயங்கி மறைவதையே நாம் பார்த்திருக்கின்றோம். இந்த வழக்கத்திற்கு மாறாக கொக்குவில் முன்னேற்ற மன்றம் பத்து ஆண்டுகள் சிறப்பாக இயங்கி கொக்குவில் கிராமத்தை முன்னேற்றுவதற்குப் பல நற்பணிகள் செய்வதை நான் பாராட்ட விரும்புகின்றேன்.

இப்பணிகளில் மிகச்சிறந்த பணி கொக்குவில் கிராமத்திற்கு ஒரு மகளிர் மகா வித்தியாலயத்தை உருவாக்குகின்ற பணியாகும். சாரதா மகளிர் கல்லூரியை ஒரு சிறந்த மகளிர் மகாவித்தியாலயமாக்குகின்ற ஆலோசனையை இவர்கள் முன்வைத்துச் செயலாற்றி வந்தார்கள். இன்றைக்கு அந்தக் கல்லூரி மகாவித்தியாலயமாக்கப்பெற்று உயர்தர கலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. கல்லூரிகளுக்குத் தேவையான காணிகளை வாங்குவதற்கும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் இம் மன்றம் முன்னின்று உழைத்தது. ஆனால் கட்டிடங்கள் மட்டும் ஒரு மகாவித்தியாலயமாகா. கொக்குவிலிலும் அதற்கு அண்மையாகவுள்ள மற்றக் கிராமங்களிலும் வாழுகின்ற பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை இக் கல்லூரிக்குக் கூடுதலாக அனுப்ப முடிவெடுக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையில்தான் இக்கல்லூரி மேலும் மேலும் வளரமுடியும். பெண்களுக்கு என ஒரு தனியான கல்லூரி அவசியமென்பதை தமிழ் பண்பாட்டிலூறிய எவரும் ஏற்றுக்கொள்வார்கள். சாரதா மகளிர் கல்லூரியை ஒரு சிறந்த பெண்கள் மகாவித்தியாலமாக்குகின்ற பணியில் கொக்குவில் முன்னேற்ற மன்றத்தாருக்கு எப்போதும் ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

ஒரு நாட்டின் செழிப்பு அதன் கிராமங்களிலேயே தங்கியிருக்கின்றது. கிராமத்தினுடைய எல்லா முன்னேற்றத்திற்கும் அரசை நம்பியிராமல் சுயமுயற்சியினால் கிராமங்களை முன்னேற்ற வேண்டியது எமது கடமை. அந்நோக்கத்துடன் இயங்குகின்ற கொக்குவில் முன்னேற்ற மன்றத்தினுடைய கடந்தகாலப் பணிகளைப் பாராட்டி தொடர்ந்தும் நற்பணி செய்ய வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

மு. சிவசிதம்பரம்
பாராளுமன்ற உறுப்பினர், நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் (பா. உ. நல்லூர்)
ஶ்ரீ லங்கா சோஷலிச ஜனநாயகக் குடியரசின் பாராளுமன்ற
துணை எதிர்க்கட்சி முதல்வர் அவர்கட்கு
ஶ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரித் திறப்பு விழாவில் (22-1-1978)
கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு
கொக்குவில் மக்கள் சார்பில் வழங்கிய

## பாராட்டு

அன்னை - தமிழின் அடிமைமீட்க ஆதிசிவா பேர்கொண்டார்
ஆண்டதமிழன் சங்கிலியின் ஆட்சிமீட்க வந்தாரோ,
இன்தமிழர் இன்னலிறக்க இறைமைநிறை தமிழ் - ஈழம்
ஈட்டித்தரவே பேரவையில் ஈட்டியபிரேரணை முன்மொழிந்தார்
உற்றதன்னூர் உடுப்பிட்டியைத் தாழ்ந்தோர் உயரத்தந்தாரே
ஊரவர் - தமிழர் உரிமைவிற்ற தன்னலங்கள்கையில் ஊமையானுர்
எதிர்த்தவர் எல்லாமேமாற ஏற்ருய் நல்லூர்க்கைவேலோ
ஏற்ருர்தமிழேறு எதிர்க்கட்சித்தலைமை ஏட்டிலென்று கண்டீரோ
ஐயம்வீடு இறையிட்டால் ஐயாவிடுதலை வேண்டுமென்போம்
ஒடுக்கப்பட்ட ஓரினத்தின்ஓலம் சிம்மக்குரல் சிவசிதம்பரமே
ஓயுமோஇடர் ஓங்குமோஈழம் விடுதலைவிழா ஓலையெப்போ
(ஔவிகம் - பேசினேம்) ஆக்கந்தந்தார் சாரதாமகளிர் - கல்லூரி
(அஃதே - இன்று) ஆனந்தம் சிவாஅண்ணு இனியபல்லாண்டு.

மங்களம்

யாப்பு: செ. இராசேந்திரன்

பெருமதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கள் 1977 ம் ஆண்டு ஆடித் திங்களில் (21-7-1977) நிகழ்ந்த தேர்தலில் பொதுசன வாக்கெடுப்பில், நல்லூர்த் தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரதிநிதியாகப் போட்டியிட்டு, இலங்கையிலேயே பெருந்தொகையான அதிகப்படியான வாக்குகள் பெற்றதுடன் தம்மை எதிர்த்துப் போட்டியிட்டோர் தமது கட்டுப்பணத்தைக் கூட இழக்கவைத்துப் பெரும் வெற்றியீட்டினுர். இதனை அடுத்து இவரைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பதவியில் ஏற்றியமை நல்லூர்த் தொகுதி மக்களையெல்லாம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளவைத்தது. நல்லூர்த் தொகுதியின் ஓர் ஊராம் கொக்குவில் மக்கள் சார்பில் கொழும்பு மாநகரில் 17-8-1977 புதன்கிழமையன்று வெற்றிவாகை சூடிய ''சிவா அவர்கட்கு'' பல கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் புடைசூழ வரவேற்புவிழாவொன்றினை ஒழுங்குசெய்தோம். ஆனுல் 15 ந் திகதி நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக ''சிவா'' அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கக் கைவிடப்பட்டது. எம்மூர் கொக்குவிலில் பல்லாண்டு காலமாகப் பொதுமக்களுக்கு வேண்டிய பல புதிய வசதிகளை அமைத்துக்கொடுக்கவும், ஏற்கனவே ஏற்பட்டவையைச் செவ்வனே இயங்கச் சீர்செய்து உதவச் ''சிவா'' அவர்களையே வேண்டிநின்றேம். இவரும் தக்க பொறுப்புடன் எமக்கு வேண்டிய விதப்புரைகளும் பெருநிதியும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு மானியத்திலிருந்து மனமுவந்தளித்ததில் மூன்றண்டுகளுள் பெரிதும் நிறைவெய்தியவை இவை என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியை ஆக்கியும் இதன் விவேகாநந்த விஞ்ஞானகூடத்தின் மேல்மாடியில் ''சுவாமி விபுலாநந்த நூலகமும்'' தந்து இவற்றைத் திறந்துவைத்தமை.

2. கொக்குவில் அரசினர் மருந்தகம்: இதனை மூடிவிட எடுத்த முயற்சிகளை முறியடித்து, நிரந்தரமான புதிய கட்டிடத்தில் அமைக்க முழு முயற்சியையும் தாம் ஏற்றுக்கொண்டு 2-11-1980 இல் இதற்கு அடிக்கல் நாட்டினர். இக் கட்டிடம் புத்தாண்டில் நிறைவெய்திவிடும்.

3. கொக்குவில் கடலை: இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ் - வளாகம் (கடலையைச்) சுவீகரிக்க எடுத்த முயற்சியை எதிர்த்தும், தடுக்கவும் எடுத்த அலுவல்களுக்கெல்லாம் துணைநின்று காத்ததுடன் இதன் வசதிகளை விரிவாக்கவும் மானியமும் வழங்கியமை..

4. கொக்குவில் தொடர் வண்டி நிலைய வீதியின் ஓரமாகவுள்ள வெள்ள வாய்க்கால் ஓர அணை மதில்களையும் முழுதாக நிறைவுசெய்து தருவதுடன், இதே போன்று கோயில் வீதியின் தொடக்கத்தில் உள்ள வாய்க்கால் ஓரத்திற்குக் கட்டித்தர உதவியமை.

5. ''கொக்குவில் ஊராட்சிமன்றப் பொது நூலகம்'' மக்கள் மேம்பாட்டிற்கு உதவ மிகவும் உயர்ந்த மெய்ப்பொருளான அறிவை வளர்க்கத் தாமாகவே தந்த அன்பளிப்பு.

6. கொக்குவில் நவீன மீன்சந்தை: ஆடியான் மடச் சந்திக்கருகாமையில் கொக்குவில் பொதுமக்கள் வேண்டுகோளுக்கு இசைந்து இதனை அமைப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்துகொண்டிருக்கின்றார்.

இத்தனையும் எமக்களித்த எம் தலைவர்க்கு நாம் எம்முளமார்ந்த நன்றியையும் கடப்பாட்டையும் சமர்ப்பிப்பதுடன், இவரை எமது ஊர்ப் பிரதிநிதியாகத் தந்த தமிழர்விடுதலைக் கூட்டணிக்கும் இவர் பெருவெற்றிக்கு இரவுபகலாக உழைத்த எம்மவர், திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை, திரு. ந. அருணாசலம் மற்றையோருக்கும் கொழும்பு வாழ் கொக்குவில் மக்கள் சார்பில் நன்றிகூறுகின்றோம்.

*(20-7-1923)* ம் நாள் பிறந்த எமது ''சிவா'' அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நாடும் தமிழரும் தாமும் மேன்மையுறப் பெருவாழ்வு பெறக் கடவுளையே வேண்டி வாழ்த்துகின்றோம்.

தவமும் வாழ்வும் தமிழர் வளமும்
எம்மூரவர் வாழ்வும் ஏற்றம் விழைக்கும்
தங்கள் குலமும் தலைமையும் குன்றின்
ஏற்றிய செவ்வேள் எழிலொளி விளக்காம்.

வணக்கம்

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*
*from*

## Silver Star Industries

*Show Room:*
120, K. K. S. ROAD,
JAFFNA.
*Phone*: 7376 *Grams:* Silver Star

*Factory:*
103, BROWN ROAD,
KOKUVIL.
SRI LANKA.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. — குறள்

The learned say that those are kingdoms whose wealth is not laboured for and those not, whose wealth is only obtained through labour. — *Holy Kural*

நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக !

## கந்தப்பு ஸ்டோர்ஸ்
## KANTHAPPU STORES

பலசரக்குச் சாமான்கள் விற்பனையாளர்கள்

35, 3rd Cross Street,
*(Shanthaya Mawatha)*
Matara.

35, 3-ம் குறுக்குத் தெரு,
மாத்தறை.

வேலன்றி வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். — குறள்

His not the javelin that gives victory but the king's sceptre, it it do no injustice. — *Holy Kural*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாகக் கல்விப் பணிப்பாளர்
திரு. தி. மாணிக்கவாசகர் B. A; P. G. T; S. L. E. S. I.
அவர்கள் வழங்கும்

# ஆசியுரை

அறுகுபோல் வேர் பரப்பி ஆல்போல் கிளை பரப்பி இன்னல்கள் பல கடந்து ஆக்கப் பணிகளில் இடையறாது உழைத்து சாதனைகள் பல புரிந்து ஏறு நடையிட்டுச் சென்றுகொண்டிருக்கும் "கொக்குவில் முன்னேற்ற மன்றம் – கொழும்பு" தனது அளப்பரிய சேவையின் பத்து ஆண்டுகள் நிறைவைக் களிப்புடன் கொண்டாடுவதையிட்டு கல்வி விருத்திப் பணியில் ஈடுகொண்டிருக்கும் யான் களி மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மன்றம் ஆற்றிவரும் தொண்டுகளுக்கெல்லாம் சிகரமாக அமைவது அதன் கல்வி அபிவிருத்திக்கான சேவையே. கொக்குவில் கிராமத்தில் ஆண்களுக்கான கல்லூரி ஒன்று நீண்ட சேவையாற்றி வந்தபொழுதிலும் தாய்க்குலத்தைச் செட்பனிட்டு வழி நடாத்த ஏற்றதொரு மகளிர் கல்லூரி இல்லையே என மனநலிவுற்றிருந்த கொக்குவில் வாசிகளின் அபிலாசையை இம்மன்றத்தினர் தம் சிரமேற்கொண்டு உழைத்த சலியாத உழைப்பின் களியே 1978 - 1 - 22 இல் உதயமாகிய கொக்குவில் "ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி" என்பதை அவ்வேளையில் வடமாநில கல்விப்பணிப்பாளராக இருந்து அதை ஆரம்பித்துவைத்த யான் நன்கு அறிவேன்.

நல்லதொரு சமூகத்தை உருவாக்கக் கல்லூரிகளை அமைப்பதுமட்டும் போதியதாகாது. அவற்றைச் சிறப்புறப் பேணுவது அதிமுக்கியமாகும். குறிப்பாக மகளிர் கல்லூரிகள் என்பன சீரிய சமுதாயமொன்றுக்கு வித்திடும் தாய்க்குலத்தை உருவாக்கும் கலைக்கூடங்களாகும். அங்கே புனிதம் கமழ வேண்டும். இறை உணர்வு ஒளிரவேண்டும். ஆத்ம திருப்தியே அறிவின் வளர்ச்சி; ஆத்ம நிறையே அறிவின் நிறைவு. ஆகவே இக்கல்லூரி ஆத்மீக வழிநின்று அறிவை வளர்க்கவேண்டும் என்பதே எனது தணியாத ஆசையாகும்.

அன்னை சாரதாதேவியின் புனிதத்துவம் இக்கல்லூரியின் ஒவ்வொரு அணுவிலும் பிரதிபலிக்க வேண்டும். இக்கல்லூரி உருவாக்கும் ஒவ்வொரு பெண்மணியும் சிப்பியுள் முத்தாக, சைவத்தையும் தமிழையும் ஒருங்கே பேணி வளர்க்கும் புனிதமுடைத்தாய் சாரதாதேவியாக வெளியேற என் இதயம் நிறைந்த ஆசிகளை அள்ளித் தருகிறேன். இவ்வாசியுரையை என்னிடம் வேண்டிநின்ற கொக்குவில் முன்னேற்ற மன்றம்-கொழும்பினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இம்மன்றம் தொடர்ந்தும் பல்லாண்டுகள் நற்பணியாற்ற என் இதயபூர்வமான ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

தி. மாணிக்கவாசகர்
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி - திருவாசகம்

**No man is born into any religion he has religion in his own soul.**

*- Swami Vivekanantha*

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு
தனது சீரிய பணியில் தொடர்ந்து முன்னேறுக.

# ராமகிருஷ்ணாஸ்

த. பெ. இல. 85
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தந்தி : "குருதேவ்"

தொலைபேசி : **7179**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அதிபரும்
கல்லூரியின் பழைய மாணவியுமான

## திருமதி செ. நவரத்தினம் அவர்களின்

# ஆசிச் செய்தி

கொக்குவில் முன்னேற்ற மன்றம் தனது பத்தாண்டு சேவை நிறைவையொட்டி ஒரு ஞாபக மலரை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இம் மன்றம் ஆற்றிய அளப்பரும் பணிகள் மலர் வடிவில் வெளிவருவது எமது கிராமத்திற்கே ஒரு தனிச் சிறப்பாகும்.

சிறப்பாக எமது கிராமத்திலேயே ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவிய பெருமை இம் மன்றத்தையே சாரும். இம் மன்றத்தின் அயராத உழைப்பின் பயனாகவே இன்று கொக்குவிலில் எமது கல்லூரி மகளிர் கல்லூரியாகத் திகழ்வது வெள்ளிடை மலை போலத் தெரிகிறது. இம் மன்றம் இக் கல்லூரியின் பெயரை மாற்றியமைப்பதற்கு அருந்தொண்டாற்றியது மாத்திரமல்லாது இடவசதி, விஞ்ஞானகூடம், நூல்நிலையம், மின் இணைப்பு முதலியவற்றிற்கும் முன்வந்து மனமுவந்து தாராளமாக நிதியுதவி செய்தமை நன்றிக்கும், பெருமைக்கும், பாராட்டுக்கும் உரிய விடயமாகும். எங்கள் கல்லூரியில் க. பொ. த. உயர்தர வகுப்பு நடைபெற்று வருகிறது. இக் கல்லூரிக்கு மிக இன்றியமையாத தேவையாக இருக்கும் மனையியல் கூடத்தை அமைப்பதற்கு இம் மன்றம் அரும்பாடுபட்டு வருகிறது.

இம் மன்றம் நாட்டின் தலைநகரில் இயங்கி வருவதால் பல்வேறு அமைச்சுகளில் தொடர்பு பூண்டு எங்கள் கிராமத்திற்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து வருகின்றது. எல்லாத் தானங்களிலும் வித்தியாதானமே மேலானது. இதனை நன்குணர்ந்த இம் மன்றம் எமது கல்லூரிக்குப் பற்பல துறைகளிலும் ஆற்றிவரும் தொண்டிற்கு அதிபர் என்ற முறையிலும் கொக்குவில் கிராமவாசி என்ற வகையிலும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கொக்குவில் முன்னேற்ற மன்றம் ஆல் போலத் தழைத்து அறுகு போல் வேரூன்றிப் பல்லாண்டு காலம் கொக்குவில் கிராமத்திற்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

செ. நவரத்தினம்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. G. U. Pope

The Saiva Siddhanta system is
the most elaborate,
influential, and undoubtedly
the most intrinsically valuable
of all the religions of India.........
Saivaism is the old
pre-historic religion of South India,
essentially existing from
pre-Aryan times and
holds sway over the
hearts of the Tamil People.........
Saiva Siddhanta Philosophy
is the choicest product of
the Dravidian intellect.

*[From his English Translation of Thiruvacakam]*

நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# நோர்தேண் இன்டஸ்றீஸ்

ரயர் நிரப்புபவர்கள்

பிறவுண் வீதி, — கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரிய பெரியோர்கள்



சி இரத்தினசபாபதி
(அமரர்)



திருமதி செல்லம்மா இராசேந்திரம்



உயர்திரு. வி. சிவசுப்பிரமணியம்



திருமதி சரஸ்வதி பாக்கியராசா



கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா
(அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்தாவது ஆண்டுப் பொதுக்கூடலில் (1-11-1980) பங்குகொண்ட மன்றத்து மாதர் குழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு

## ஊர்த்தொண்டில், *(1970—1980)* பத்தாண்டுகள் ஆட்சிக்குழுவின் சார்பில்

# அறிக்கை சமர்ப்பணம்


செல்வநாயகம் இராசேந்திரன்
*தொண்டிற்குரிய செயலாளர் (1973 – 1981),*
*மலர்த் தொகுப்பாளர்.*




வீணைக் கொடியுடன் இசைபடக் கோலோச்சிய வீர வேந்தனைக் கம்பன் போற்றுதலும், "இராவணன் மேலது நீறு" என இவன் சைவச் சால்பை ஞான சம்பந்தரே புகழும் ஈழவேந்தனும் இராவணன் நாட்டின், வடகோடியில் யாழிசைக்குப் பரிசான, பனம் பொழில்சூழ் யாழ்ப்பாணக் குடாநாடு. இது 1619 ஆண்டுவரை நந்திக் கொடியேற்றி நாடாண்ட சங்கிலியின் இராசதானியாகும். இங்கு செந்தமிழும் மேன்மை கொள் சைவநீதியும் தூய்மையுடன் திகழ்கின்றது. சைவத்தின் பாரம்பரியத்தில் புதுமையான தொன்மை மிக்க ஆயுத வணக்கமான சிவனுக்குச் சூலமும், மாலுக்குச் சக்கரமும், முருகவேளிற்கு வேலும் நாட்டி, வீரமும் சைவமும் போற்றிவாழ் தமிழீழப் பகுதியில் யாழ்நகரை எல்லையாகக் கொண்டதும், இரண்டுசதுரக் கிலோமீற்றர் பரப்பைக் கொண்டதும் கொக்குவில். இங்குவாழ் பன்னீராயிரம் நம்மவர் எளிமையான வாழ்வுடன் தமிழ், சைவப் பண்பாட்டினைப் பேணிவாழ்வோராவர்.

எமது ஊர் கொக்குவில்; கோயில்களும், கல்விக்கூடங்களும் நிறைந்துள்ளது. 1910 ஆண்டிலேயே பெரியார் செல்லையா அவர்களால் கட்டப்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரியும், மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியும் இத்துடன் தரமுள்ள நான்கு பாடசாலைகள், தொழில் நுட்பக்கல்லூரி, இலங்கைப் பல்கலைக் கழக யாழ் - வளாகம், இவற்றுடன் கலை வளர்க்கும் அமைப்புகளான, கொக்குவில் கலாபவனம், அமரகலா நாட்டியாலயம் (பொற்பதிவீதி) பல்கலைவளர்க்க, இறையன்பு வளர்க்க கொடியேற்றித் திருவிழாக்காணும் நான்கு கோயில்களும் இவை தவிர்ந்த பத்துக் கோயில்களும், ஒரு கிறீஸ்தவத் தேவாலயமும் உண்டு. மக்கள் வாழ்வு தொடங்கிய காலந்தொட்டுள்ள கொக்குவில் சுடலையும், 1904 ஆண்டில் கிடைத்த தொடர்வண்டி நிலையமும் (Railway Station), ஐம்பது ஆண்டுகளாகச் சேவையிலுள்ள அரசினர் மருந்தகம், கொக்குவிற் ஊராட்சிமன்ற அலுவலகம் பொது நூலகம், முதல் தரமான தொலைபேசித், தந்தித் தொடர்புடைய அஞ்சல் அலுவலகம். இப்படியாக மனிதவாழ்வுக்குத் தேவையான வளம் அத்தனையும் உடையது நம் கொக்குவில்.

கொக்குவில் மக்கள் வசதிகளைத் தேடிக் கொடுப்பதிலும், இவற்றைப் பராமரிப்பதிலும், கொக்குவில் ஊராட்சி மன்றத்தின் பணிகள் அளப்பரியது. இச்சபை 1926 கிராமசபையாக திரு. கந்தையா (வழக்குரைஞர்) தலைமையில் தொடங்கிக் கிராம நீதிமன்றமாகவும் திகழ்ந்தது. 1937 கிராமசபையாகவும், (TRIBUNAL) வழக்கு விசாரித்துத் தீர்த்து வைக்கும் சபையாக மாற்றப்பட்டது, இச்சபை வீதிகள், நீர்த்தேக்கங்கள், போன்றவற்றைப் பாதுகாப்பதிலும் பொதுமக்கள் வசதிகளை தேடிக்கொள்வதிலும் முனைந்துள்ளது. 1956 ல் மின்சக்தி கொக்குவில் கிராமப் பிரதேசத்திற்கு திரு. சி. அருளம்பலம் (Proctor & N.P.) அவர்கள் காலத்தில்

*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டியது. 1966 கொக்குவில் ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்டு 1970 ல் மீண்டும் அமைக்கப்பட்டு 1973 இல் திரும்பவும் கலைக்கப்பட்டு இன்றுவரை மக்களால், மக்கள் மன்றம், மக்களுக்காக இயங்கும் நிலை இழந்தோம். இதனால் கொக்குவில் பொதுமக்கள் வசதிகள் சீரமைப்புகள் செல்வனே நடைபெறுமைக்குக் காரணமெனலாம். மற்றும் இந்நிலையில் கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பிற்குப் பொறுப்புகள் சுமையாகவுள்ளது. கொக்குவில் ஊராட்சிமன்றத்தின் தலைவர்கள் பெயர்களையும் காலத்தையும் முடிந்தளவில் நன்றிக்கடனைக் கருதிக் குறிப்பிடுகின்றோம்.


1926 திரு. கந்தையா (வழக்குரைஞர்)
1929 திரு. சி. முத்துவேலு J. P. (இளைப்பாறிய பொறியியலாளர்)
1932 திரு. V. K. ஞானசுந்தரம் (Proctor & N. P.)
1935 திரு. சி. முத்துவேலு அவர்கள்
1938 திரு. S. நவரத்தினம் ,,
1941 ———do——— ,,
1944 திரு. சி. முத்துவேலு ,,
1947—1966 திரு. ஆறுப்பிள்ளை சின்னத்துரை அவர்கள்
1948—1966 திரு. சி. அருளம்பலம் (Proctor & N. P.) அவர்கள்
1973 திரு. சி. க. சபாபதி அவர்கள்

அடுத்துக் கொக்குவில் அரசியலில், யாழ்ப்பாணத் தொகுதியாக இருந்த காலத்தின் இறுதியில் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்களாலும், 1952 இருந்து கோப்பாய் தொகுதியின் பகுதியாக திரு. கு. வன்னியசிங்கம் அவர்களையும் 1960 இருந்து வைத்திய கலாநிதி ஈ.எம்.வி. நாகநாதன் அவர்களையும் 1970 திரு. சி. அருளம்பலம் அவர்களையும் 1977 இல் இருந்து இன்று திரு. மு. சிவசிதம்பரம் அவர்களையும் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது. இன்று நம்நாடு மக்கள் குடியரசான நிலையில் ''கொக்குவில் மக்கள் எவ்வழி மன்றம் அவ்வழியில்'' எம்மூரவர் அரசியல் உணர்வுகளை, இலட்சியங்களைப் பிரதிபலிப்பதேயன்றி வேறொன்றறியோம்.

கொக்குவில் மண்பிறந்தோர் எக்கலையும் ஏற்றமுற எளிதில் கற்றுப்பயிலும் மதிநுட்பமும், திறனுமுடையோர், கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்பது இவர்கள் திடநம்பிக்கை, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என உலக நாடுகளில் எல்லாம் கல்விக்கும், தொழிலுக்கும் ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்'' நோக்குடன், புறநாடுகளான இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் கடினமாக உழைக்கும் கொக்குவிலார் தம் தாய் மண்ணில் ஒருவீடாவது கட்டி வளப்படுத்தாமலில்லை. இவர்களுள் ஸ்ரீலங்காவின் தலைநகரில் (கொழும்பு) வாழ் கொக்குவில் நன்மக்கள் ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' எனவுணர்ந்த விளைவின் பயனே கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு (இன்) தோற்றம். இவ்வொன்றியம் 14-2-1970 சனிக்கிழமை காலையில், மருதானை, கப்பித்தாவத்தையில் கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை மண்டபத்தில் கூடிய கூடலில் வாழ்வு தொடங்கிற்று. இதன் தலைமையை திரு. இராசையா இராசநாயகம் ஏற்று ஒன்பது ஆண்டுகள் உறுப்பினர்களைத் தமது அன்புப்பிணைப்பில் திளைக்கவைத்துதவினார். இவருக்குச் செயலாளராக மூன்றாண்டுகள் திரு. செ, கோபாலசிங்கமும், பொருளாளராக திரு. சி. க. இரத்தினம் அவர்களும் தொண்டாற்றினர். தலைவராக இன்று திரு. கனகரத்தினம் இரத்தினசபாபதி பெறுப்பேற்றுள்ளார். இவர் மன்றப்பணியில் ஆரம்பகாலந்தொட்டு ஈடுபாடுடன் பங்குகொண்டதுடன் மன்றத்தின் மூளையாக, தக்க ஆலோசனைகள் வழங்கியும், எல்லோருக்கும் நண்பனாய், நல்லாசிரியனாய், நல்வழிகாட்டியாய் இருக்கின்றார் என்றால் மிகையாகாது. திரு. பொ. சின்னத்துரை அவர்கள் மூன்றாண்டுகள் பொருளாளராகவும். 1978 இறுதிவரை துணைத்தலைவராகவும் இருந்தார். இக்காலத்தில் பெருந்திட்டங்களுக்கு நிதி திரட்டியுதவினார். இன்று ஊரில் மன்றம் ஈடுபட்ட அலுவல்களில் செயலாளருடன் முன்னின்று உழைக்கின்றார்.




பெருமதிப்புக்குரிய திரு. மு. சிவசிதம்பரம்
பா. உ. (நல்லூர்)



கொக்குவில்
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி
விவேகானந்த விஞ்ஞானகூடமும்
சுவாமி விபுலானந்த நூலகமும்
அமைந்த மாடி



கொக்குவில் ஊராட்சிமன்றப் பொது நூலகம்





கற்சாசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசாங்க மருந்தக அடிக்கல் நாட்டுவிழாவில்
திரு. ஐ. சண்முகம் அவர்கள், மதிப்பிற்குரிய
திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்)
அவர்களை மாலைசூடி வரவேற்றல்
(2-11-1930)



உருவாகும் புதிய அரசாங்க மருந்தகக் கட்டிடம்



கோயில் வீதியோர வெள்ளவாய்க்கால் மதில்



கொக்குவில் சுடலை (இன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு (இன்) பொறுப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் இவ்வேளையில், கொழும்பு யாழ் கொக்குவில் மக்கள் யாபேரையும், குறிப்பாக இளைஞர்களைப் பெருந்தொகையில் சேர்த்து பிறந்த மண்ணின் வளங்காக்கவும், செழிப்புக்கும் தொண்டாற்ற வாய்ப்பளிக்கும் எமது மன்றத்தில் உறுப்பினராக அழைக்கின்றோம்.

மன்றம் ஊர்த்தொண்டில் ஈடுபட்டுப் பத்தாண்டுகள் நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், மன்றத்தின் வாழ்விற்கு வலிவுதந்த மதிப்பிற்கும் அன்புக்கும் உரிய உறுப்பினர்களுக்கும், திட்டங்களுக்கும் பணமாக இன்முகத்துடன் அள்ளிக் கொடுத்து மன்றத்தின் தொண்டினையெல்லாம் மேன்மையுறச் செய்த பெரியோருக்கும் வள்ளல்களுக்கும், விழா மலரைப் பூக்கவைக்கப் பொருள் விளம்பரமாகத் தந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், ஆசியுரைகளும் வாழ்த்தும், புகழுரையும், பொருள்பொதிந்த கட்டுரைகளும் தந்த சான்றோர், அறிஞர்களுக்கும். மலரைச் சிறப்புற மணமும் நிறமும் சேர்த்து பதிப்பித்து உதவிய யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றியையும் உவமை பொங்கக் கடப்பாட்டினையும் சமர்பித்து கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு அன்னை மனோன்மணியாம் எம் கண்ணகியாள் திருவமுதாக வழங்குகின்றோம். இதில் நல்லவற்றிற்கு மன்றத்திற்கு வாழ்த்தும் குறைகள் இருப்பின் தொண்டிற்குரிய செயலாளரும், மலர்த்தொகுப்பாசிரியராகியேனையும் மன்னிக்க வேண்டுகின்றோம்.

## கொக்குவிலுக்கு மகளிர் கல்லூரி

கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்றே வாழ்கின்ற கொக்குவில் மக்கள் கல்வித்தேவையை முழுதாக நிறைவுசெய்ய 1910ம் ஆண்டில் பெரியார் செல்லையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரியினால் முடியாத நிலையையும், சேர் பொன்னம்பலம் இராமநாதனால் நிறுவப்பட்ட பரமேஸ்வரக் கல்லூரி, வளாகமாக மாறியமையும் ஏற்படுத்திய நெருக்கடிக்கும் தீர்வுகாணவும், பெண்பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டிற்கிணைந்த ஒழுக்கத்தைப் பேணவும், மகளிருக்கான தனிக்கல்லூரியிற் செம்மையான நிறைகல்வி தாய்குலத்திற்குக் கிடைக்கும் போதுதான், ஒரு குடும்பத்திற்கு அண்மையில் கிடைக்கும் கல்விக் களஞ்சியம் முழுத்தகைமைபெறும். இதனால் எமது சமுதாயமே கல்வியில் மேம்பட முடியுமெனத் தெளிந்த கொ. மு. ம- கொழும்பு, ஒரு மகளிர் கல்லூரியின் தேவையை கொக்குவிலுக்கு நிறைவுசெய்ய விழைந்ததன் பயன் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி(யின்) தோற்றம் ஆயது. இந்நன்முயற்சியில் எமது விரிவான விழைவையறிவீர்களாக. 1975 நடுப்பகுதியில் தீவிர முயற்சியில் ஈடுபட்டநாம் 7-9-1975 நந்தாவில் மனோன்மணி வாசிகசாலையில் பெரியார் திரு. ஆ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் கூடிய ஊர்ப்பெருமக்கள் ஆலோசனைப்படி அன்றைய இராமகிருஷ்ண வித்தியாசாலையை, ஒரு மகளிர் கல்லூரியாக்க முதலேற்பாடாக இதற்கு பட்டதாரி ஆசிரியை ஒருவரைத் தலைமைதாங்க வைக்கவும் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதன்படி திருமதி சரஸ்வதிதேவி கணேஸ்வரன் B. Sc. (Dip in Ed.) அவர்களை அதிபராகவும் இன்னும் மூன்று பட்டதாரி ஆசிரியைகளையும் கல்வியமைச்சினை வேண்டிநின்றவேளை எமக்குக் கைகொடுத்துதவியவர் அன்றைய மதிப்பிற்குரிய மேலதிக செயலாளர் திரு. இராமலிங்கம் பாஸ்கரலிங்கம் அவர்கள். அடுத்து விஞ்ஞான கூடம் ஒன்று அமைக்கப் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு மானியத்திலிருந்து ரூபா 75000/- தந்துதவினார் அரசியல் அதிகாரி திரு. சி. அருளம்பலம் தே. அ. பே. உ. (நல்லூர்) அவர்கள். 21-7-1977இல் நடந்த பொதுத் தேர்தலில் கொக்குவில் மக்கள் பேர் ஆதரவைப் பெற்ற பெருமதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளாவது 1938-3-16 அன்று கொக்குவில் வாழ்பெரியோர் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இரா. தம்பித்துரை அவர்கள்
ஆதரடன் கொக்குவில் சேவா சங்கத்தினரால் 1939ம் ஆண்டில் இராமகிருஷ்ணமிசன்
தலைமையில் | கட்டப்பட்டு திறந்ததையும் அடிகளார் அவர்கள், ஸ்ரீ இராம
பாடசாலையாக தவத்திரு சுவாமி விபுலாநந்த குட்டி மகிழ்ந்தாரெனவும், இவர்
கிருஷ்ண சைவவித்தியாசாலை எனப்பெயர் இவ்வித்தியாசாலை வளவிலே தங்கியிருந்து
யாழ்ப்பாணத்து வருகைதரும் வேளையில், வந்தார். இக்கல்லூரியை அமைத்
இக்கல்லூரியை அமைத்தோருக்கு ஊக்கமளித்து தலைமையில் சிறப்புற நடாத்தப்
தோர் ஆதரவுடன் திரு. இரா. சுந்தையா அவர்கள் கையளிக்கப்பட்டதிலிருந்து இவ்வித்தி
பட்டதையும் ஊரறியும். 1962-4-1இல் அரசிடம் தொகை 155ஆக வீழ்ச்சியுற்றது.
யாசாலை தரம்குறைந்து சீரழிந்து 1974ல் மாணவர் ஒரு மகளிர் கல்லூரியாகும்
இந்நிலையில் இங்குள்ள வசதிகளை நல்லபடி பயனுக்க முனைந்து கொழும்பு
திட்டத்துடன், கொக்குவில் முன்னேற்ற மன்றம்-கொழும்பு ஒளியும் (இராமகிருஷ்ணுஸ்,
வாழ் கொக்குவில் மக்களிடம் பணம் சேர்த்து, மின்சார பொறியும் அமைத்துக்
வாழ்நகர்) உபயமாக நீர்த்தாங்கி வக்குடனுய நீரிறைக்கும்
கொடுத்தோம்.

1977-8-28இல் இக்கல்லூரியை நிறுவிய முதியவர்களையும் நலம் விரும்பிகள் பலரையும் கூட்டி, வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கம் அமைத்ததன் பலனுக இவர்கள் கொக்குவில், சிங்கப்பூரில், மலேசியாவில் பணம் சேர்த்தும், தருவித்தும் ஒன்ப தரைப் பரப்புக் காணிநிலம் வாங்கியுதவினர். இதற்கு எமது மன்றமும் ரூபா10,000 கொழும்பில் சேர்த்துதவியதுடன் ரூபா 15000/-திற்கு விவேகானந்த விஞ்ஞானகூடம், சாரதாமனையியல் கூடம் இவற்றிற்கு குழாய்நீர், இவற்றினுடனுய தொட்டிகள், மின்சார இணைப்பு வசதிகளும் உதவியுள்ளோம். இவற்றை யெல்லாம் எடுத்துரைத்து பெருமதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கள் கையாற்முன் ஈடேறவேண்டி இவ்வளவுகாலமும் இம்முயற்சி இழுபட்டதோ, என உள்ளூர மகிழ் இன்றேமென வேண்டிநின்ற பொழுது உளநிறைவுடன் உரியவிதப்புரைகள் வழங்கி இப்பெருங்கல்வித்தொண்டை ஈடேற்றிவைத்தார். கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி 22-1-1978 அன்று ஆறுமுகநாவலர் மரபில் வந்த மதிப்பிற் குரிய திரு. தி, மாணிக்கவாசகர் வடமாநிலக் கல்வியதிபதி மகளிர்கல்லூரியைத் திறந்து வைத்தார். இதில் நல்லூர் வட்டாரக் கல்வியதிபர் திரு. கு. சோமசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதனையடுத்து 1979 சித்திரையில் மகளிர்கல்லூரியில் (G. C. E. A/L)கலை, மனையியல் பாடங்களில் தொடங்கப்பட்டது. இதற்கு திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கள் வேண்டிய விதப்புரைகள் வழங்கியிருந்தும் இதனைச் செயற்படுத்துவதில் ஏற்பட்ட மந்தநிலையில் உயர்திரு வீரவாகு சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர்) அவர்கள் அமைச்சரைக் கண்டு வெற்றிபெறச் செய்தார். இத்துடன் மன்றத்தின் முயற்சிகளுக் கெல்லாம் தமது செல்வாக்கையும் பலமுறை நல்கினர். இக்கல்லூயின் விவேகானந்த விஞ்ஞான கூடத்தைத் திறந்து வைத்தும், மேல் மாடிக்கட்டிடத்தை நிறைவு செய்ய வும் எமது பா. உ. அவர்கள் ரூபா 85000/- பன்முகப்படுத்தப்பட்ட மானியத்தில் உதவியதுடன் இதன்மாடியில், தவத்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார் நூலகத்தை யும் 20-9-1980 அன்று திறந்து வைத்துப் பெருமையளித்தார். இன்று மகளிர்கல்லூரிக்கு விஞ்ஞானகூடம், மனையியல் கூடம், நூலகம், திறந்த அரங்கு விளையாட்டிடமும் போதிய வகுப்பறைகளுடன் வளம்பெற்றுள்ளது.

மேற்படி கல்லூரி1937-5-5ம் நாள் இரவு 11-30 மணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு
1938-3-16ம் நாள் கட்டிடம்திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் பதிவு 21-4-1938
செய்து பாடசாலை தொடங்கப்பட்டது. இக்கல்லூரியை'கொக்குவில் சேவைச் சங்கம் கட்
டியது. இதன் தலைவராக திரு.இரா. தம்பித்துரை பணியாற்றினர். இதில் திரு. மு.
வ. இராசரத்தினம் திரு. இ. செல்லையா, திரு. இராமசாமி திரு. அ. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லெண்ண ஆலோசனைக் குழுவினர்



ஆ. சின்னத்தம்பி



சி. கனகலிங்கம்



மு. நடராசா



அ. கந்தையா



க. தங்கராசா



க. சிவானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. க. இரத்தினம்



பொ. சின்னத்துரை



இரா. சிவரத்தினம்



க. திருச்செல்வம்



இரா. தர்மராஜா



மு. சண்முகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ம. நடராசா, திரு. சி. அப்புத்துரை, திரு. ஆ. சின்னத்தம்பி, திரு. வ. நல்லையா, திரு. ச. சிவபூசம், சி. க. முருகையா, சி. பொ. வேலாயுதபிள்ளை திரு. இரா. கந்தையா, திரு. க. ஆறுமுகத்தம்பி, திரு. செ. காசிப்பிள்ளை ஆகியோரும், இவர்களுக்குப் பெரிதும் உதவியோர் திரு. ப. சி. சீவரத்தினம், திரு. பொ. அப்பாத்துரை வை. சின்னத்தம்பி, பொ. சின்னத்துரை போன்ற பெரியோர்கள் பலருமென அறிகின்றோம். இவர்களில் பலர் இன்று இறைபதம் எய்தியுள்ளனர். இவ் அறிவுத்தான நன் முயற்சியில் ஈடுபட்டோர் குலம், நிறைகல்விபெறக் கடவுளையே வேண்டுகின்றோம்.

## கொக்குவில் அரசாங்க மருந்தகம்

அரசாங்க மருந்தகம் கொக்குவில், இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளாக உடல் நலம் பேணச் சேவையளிக்கின்றது. இது தொடர்வண்டி நிலைய வீதி (**Railway Station Road**) ஓரமாகவுள்ள ஒரு வீட்டில் உள்ளது. இக்கட்டிடம் காலத்தாலும், தீவிபத்துக்குள்ளாகியும், பாழடைந்த நிலையில் அறைகளில் சுவரிலும் நிலத்திலும் கறையான் புற்றுக்களும் உள்ளதாயும், இவ்விடம் மக்கள் தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு அலுவல்கள் நடைபெறுமையையும் 1976 தொடங்கி எழுதினோம். ஆயினும் 1977இல் தீவிர ஈடுபாடுகொண்டு 24-3-1977ம் நாள் உதவிப்பணிப்பாளர் வைத்திய மனைகள் (வடபகுதி) கண்காணிப்பாளர், சுகாதார சேவைகள் (வடபகுதி) அவர்கட்கும் எழுதியதுடன், யாழ்ப்பாணம் பொது வைத்திய மனையில், பெருநெருக்கடியுள்ளதால், கொக்குவிலில் ஒரு மருந்தகத்துடனுய பெறுகால மருத்துவ மனையும் (**Dispensary & Maternity Hospital**) அமைக்கவும் இதற்கு மருந்தகம் இருக்கும் எட்டுப் பரப்புக்காணியையும் அரசு காணிக்காரருக்கு பெறுமதி கொடுத்துச் சுவீகரித்துப் பயனுக்க ஆவன செய்யவும் எழுதியதுடன் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்களையும் நேரில் மன்றச்செயற்குழு கண்டு வேண்டிக்கொண்டதுடன் கடிதப்படிவங்களையும் கையளித்தோம். இதில் மருந்தகம் மருந்துத்தட்டுப்பாடுகள் இல்லாமலும் இரண்டு நேரமும் நல்லபடி இயங்கவைக்க உதவ வேண்டிக்கொண்டோம்.

எமக்கு 1-4-1977 கண்காணிப்பாளர், சுகாதாரசேவைகள் (வடபகுதி) தந்த பதிலில் மருந்தகக்கட்டிடம் தனியாருடையதால், எதுவித திருத்தமும் அரசாங்கச் செலவில் செய்ய முடியாததையும், அறிவுறுத்தியதுடன், இதற்கு அண்மையில் தக்க கட்டிடமொன்றினை நாம் தேடிக்கொடுத்தால் இதன் வாடகையை மதிப்பிட்டபின் இதில் மருந்தகத்தை நடத்தலாமெனவும், மற்றும் மருத்துவ மனையாக்கம் அலுவல், யாழ்ப்பாணம் பொது வைத்தியமனை அண்மையில் உள்ளதால், இக்கோரிக்கையை ஏற்க முடியாமைக்கு வருந்துவதாகப் பொருட்பட (ஆங்கிலத்தில்) பதில் கிடைத்தது. இதற்கு நாம் கொக்குவில் மருந்தகத்திற்கும், யாழ்ப்பாணம் பொது வைத்தியமனைக்குமிடையில் உள்ள இடைத்தூரத்தில் உள்ள தனியார் மருந்தகம், மருத்துவ மனையின் தொகையும் இங்கேயுள்ள நெருக்கடியும் எமது கோரிக்கைக்குச் சான்றுவதுடன், வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிற்கும் யாழ்ப்பாணப் பொது வைத்தியமனை சேவை செய்ய வேண்டியுள்ளதால், கொக்குவில் மருத்தகம் விரிவாக்கப்பட்டு ஒரு மருத்துவ மனையாவது சரியானதென நாம் திடமாக நம்புகின்றோம், என இடித்துரைத்ததுடன் தொடர்ந்தும் செயலாற்றினோம். இந்நிலையில் மருந்தகத்தைக் கொக்குவில் கிழக்கிலிருந்து அகற்றவும் முடியாத பட்சத்தில் மூடவும் முயற்சிகள் நடந்ததையறிந்த நாம் எமது எம். பி. ''சிவா'' அவர்களை மன்றமும், ஊர் நன்மக்கள் சிலரும் மருந்தகத்தைக் காத்துதவ வேண்டினோம். இவர் மருந்தகம் மூடப்படாமல் காத்துத் தருவதாகவும், மற்றும் ஒரு புதிய கட்டிடத்திற்கு நிதி பெற்றுத் தருவதாகவும், இதைக் கட்ட ஒரு காணியை நன்கொடையாகவோ பொதுமக்களிடம் பணம் சேர்த்தோ வாங்கித் தரும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க இத்தேவையை நிறைவு செய்யவே ''கொக்குவில் மருந்தக அபிவிருத்திச் சங்கம்'' 1979 சித்திரையில் கோணாவளை வைரவர் கோயிலில் நிகழ்ந்த பொதுமக்கள் கூடலில், அமைப்பு விதிகள் வகுத்ததுடன் பதவியாளர்களும் தேர்ந்து கொள்ளப்பட்டனர். இதன் விவரம் பின்வருமாறு:

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைவர் | திரு. பொ. கனகரத்தினம் |
| துணைத்தலைவர் | திரு. மு. சுப்பிரமணியம் |
| துணைத்தலைவர் | திரு. பீ. பாலசுப்பிரமணியம் |
| செயலாளர் | திரு. சி. மாதவகுமார் |
| துணைச்செயலாளர் | திரு. திரு. ந. சிவராசா |
| பொருளாளர் | திரு. ஐ. சண்முகம் |

செயற் குழுவினர்

திரு. இ. சிவசம்பு
திரு. செ. இராசேந்திரன்
திரு. பொ. சின்னத்துரை
திரு. சி. மகேந்திரன்
திரு. த. நாகராசா
திரு. க. சிறீதரன்
திரு. ந. அருணாசலம்
திரு. பொ. நடராசா

கணக்காய்வாளர்

திரு. இரா. இராசநாயகம்

இச்சங்கத்தின் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ள திரு. ஐ. சண்முகம், திரு. சி. மாதவகுமரன், திரு. ந. சிவராசா, திரு. இ. சிவசம்பு இவர்களுடன், கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு தலைவர்களாகவிருந்த திரு. இரா. இராசநாயகம், திரு. பொ. சின்னத்துரை, திரு. செ. இராசேந்திரன் ஆகியோர் செயற்குழுவில் பங்கு கொண்டதுடன் பணம் சேர்ப்பதற்கும் உதவினர். கொக்குவில் மருந்தகத்தின் நடவடிக்கைகளை நாளாந்தம் கவனித்துக் குறைகளை கொ. மு. ம. கொழும்புக்கு உடனுக்குடன் அறிவித்ததுடன், இதனை மூடுவதற்கெடுத்த சதிமுயற்சிகளை முறியடிக்கவும் காலந் தாழ்த்தாது விழிப்புடன் தகவல்கள் தந்துதவினர். திரு. ஐ. சண்முகம் இன்று பொருளாளராகத் தொண்டாற்றுகின்றார். இவரும் இத்தொண்டில் ஈடுபட்டோரும் பதினாலாயிரம் ரூபா மட்டில் சேர்த்துள்ளனர். இப்பணத்தை அமைக்கப்படும் புதிய மருந்தகத்தில் பொதுமக்கள் வசதிக்கான பொருட்கள் வாங்க, பொருள் கொடுத்தோர் அனுமதியுடன் விழைந்துள்ளனர். இக்கட்டத்தில் உரிய காலத்தில் கொக்குவில் ஊராட்சி மன்ற வளவில், இவர் தந்த நூலகத்தின் அருகில் இரண்டு இலட்சம் ரூபா செலவில் நிரந்தரமான நவீன வசதிகளுடன் ஒரு மருந்தகம் அமைக்க ஏற்பாடுகள் யாவும் செய்துதவிய எமது கொக்குவில் மக்கள் பெருமதிப்புக்குரிய திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கட்கும், மருந்தகத்தைக் காத்து ஊர் மக்கள் உடல் நலங்காக்கும் பெருவுளங்கொண்டோர் யாவருக்கும் கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு தனது நன்றியையும் கடப்பாட்டையும் உரித்தாக்குகின்றோம். இம்மருந்தகம் நாளடைவில் ஒரு மருத்துவமனையாக விரிவாக்க யாபேரும் தொடர்ந்தும் உழைப்போமாக.

## கொக்குவில் சுடலை சீரமைப்பு

எமது மன்றம் சுடலைச் சீரமைப்பு வேலையில் முதல் கடிதத்தொடர்பை 29-7-1974 இல் சிறப்பு ஆணையாளர் (வடமாநிலம்) அன்றைய நல்லூர் பா. உ. திரு. சி. அருளம்பலம் அவர்கட்கும் அனுப்பப்பட்டது. அன்று சுடலை ஒழுங்கை கல்லும், முள்ளும், பள்ளமும் திட்டியுமாகவும் சுடலை முள்ளுப்பற்றைகள் நிறைந்த காடாகவும், மடம் கூரை மற்றும் கட்டிடம் பாழடைந்தும் கிணறு, தேவைக்குதவாததாக உள்ளதைச் சுட்டிக் காட்டியதுடன்,

சுடலை ஒழுங்கையில் மக்கள் வெறுங்காலுடன் வெய்யிலில் தமது உறவினர் பூதவுடலைச் சுமந்து செல்வதால், இவ்வொழுங்கை செம்மையான தாரிட்ட வீதியாக வேண்டுமெனவும்;

சுடலை நாற்புறத்துக்கும் மதில்கட்டப்படவேண்டுமெனவும்;

சுடலைக்கிணறு சீர்செய்யப்பட்டு, துலாவிடப்படுவதுடன் இதற்கு நிரந்தரமாக இரும்புக் கம்பியினாலாய கொடியும் வாளியும் இடப்படவேண்டுமெனவும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமடம், மக்களுக்கு வெய்யிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பளிக்கக் கூடியதாக அமைக்கப்பட வேண்டியதையும்;

சுடலைக் கிணற்றண்டையிலும் சுடும்மேடைக்கு அண்மையிலும் மின் விளக்குகள் அமைக்கவேண்டுமெனவும்;

சுடலைக் காணிதுப்பரவு செய்யப்பட்டு மக்கள் நடமாட்டத்திற்கு உதவுவதாக வைத்திருக்க வேண்டுமெனவும்;

இத்தனையையும் பாதுகாத்துப் பேண ஒரு சுடலைக் காவலாளி ஒருவர் நியமிக்கப் படவேண்டும் என்பதனையும் வலியுறுத்தினோம்.

இதனையடுத்து 1975 இறுதிவரை பொறுப்புள்ள அதிகாரிகளுக்குக் கடிதங்களும் நேரிற்கண்டு வேண்டுகோள்களும், செல்வாக்குள்ளோர் சிபாரிசுகளும் செய்வித்தும் எதுவும் பயனளிக்காத நிலையில் 2-12-1975ல் அன்றைய மாண்புமிகு உள்ளூராட்சி அமைச்சர் டபிள்யு. பீ. யீ. அரியதாச அவர்கட்கு மன்றம் ஒரு விரிவான முறையீட்டைச் செய்ததுடன், இதன் படிவமொன்றினை மக்கள் முறையீடாக கொக்குவில் மக்கள் ஐந் நூறு பேர் கையொப்பத்துடன் அனுப்பியதன் பயனாக அமைச்சிலிருந்தும், சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடமிருந்தும் சீர்செய்ய நடவடிக்கையெடுப்பதாகவும் பதில்கள் வந்து குவிந்தன. அடுத்து 1976இல் ஒழுங்கையைச் சீர்செய்து தாரிட்டும், சுடலை மூன்புறத்திற்கு மதிலும் கிணற்றிற்குத் துலாவும், பாழடைந்த மடம் திருத்தமும் செய்யப்பட்டது. ஆனாலும் சீரமைப்புகள் முழுமையாக நிறைவு பெறுதலைத் தொடர்ந்தும் புகார் செய்ததன் பலனாக 1977 பிற்பகுதியில் மதிள்கள் மிகுதிப்பகுதிக்கும் கட்டப்பட்டது. ஆனாலும் சரியான பராமரிப்பில்லாததால் மீண்டும் கிணறும், மடமும் பாழடைந் துள்ளன.

இவற்றை மீண்டும் முறையிட்ட பொழுதில், பதிலாக (16-7-1979 எண் D 2/24) கடிதம் சுடலைக் காணியை யாழ்வளாக மருத்துவபீடத்திற்காகச் சுவீகரிக்கக் கொள் கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மன்றத்திற்கு சிறப்பு ஆணையாளர் கொக்குவில் ஊராட்சி மன்றம் அறிவித்தார். இக்கடிதத்துடன் நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களை நேரில் கண்டு தக்க தடுத்தல் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், மன்றம் மாண்புமிகு முதலமைச்சர் திரு. பிரேமதாசா அவர்கட்கும் ஒரு விரிவான முறையீட்டினை அனுப்பியும், இவர் செயலாளரான மதிப்பிற்குரிய திரு. இரா. பாஸ்கரலிங்கம் அவர்களையும் நாடி எமது சுடலையைக் காப்பாற்ற உதவ வேண்டியதன் பலனாக, அமைச்சிலிருந்து 13-11-79 பதில்கிடைத்தது; அடுத்து கொக்குவில் ஊராட்சிமன்றச் சிறப்பு ஆணையாளர் 20-11-1979 நாளிட்ட கடிதத்திலிருந்து "17-11-79 அன்று, யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் (நல்லூர்) பா. உ. திரு. மு. சிவசிதம்பரம், யாழ் மாவட்ட உதவி ஆணையாளரும், தாமும் கலந்து கொண்ட கூடலில், கொக்குவில் சுடலையின் காணியின் கிழக்குப் பக்க ஓரமாக அரைவாசிக் காணிநிலத்தை மாத்திரம் யாழ்-பல்கலைக்கழகத்திற்குக் கொடுப்பதெனவும், அதற்குப் பதிலாக சுடலையை பல்கலைகழகமே அபிவிருத்தி செய்வதாகவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது" என எழுதினர். இன்றுவரை அபிவிருத்தி அலுவல்கள் ஏதும் நடைபெறுத துடன் கிணறும் மடமும் பாழடைத்துள்ளன.

இன்று பொது மக்கள் "கொக்குவில் மயான உரிமையாளர் சங்கம்" ஒன்று அமைத்துள்ளனர். இதன் தலைவர் திரு. பொ. சின்னத்துரை, செயலாளர் திரு. சோ. சிவபாதசுந்தரம் பொருளாளர் திரு. இ. இராசநாயகம் ஆவர். சிரமதானம் செய்து சுடலைக்காணியைத் துப்புரவாக்கியுள்ளது. இச்சங்கம் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் அபிவிருத்திபற்றித் தொடர்பு கொண்டதாகவும் இவை பயனளிக்காததையும் விரக்தி யடைந்த நிலையில் தெரிவிப்பதுடன் எமது நல்லூர் பா. உ. அவர்கட்கு முறையீடும் செய்துள்ளனர். இதனால் மீண்டும் மன்றம் தீவிர நடவடிக்கையில் இறங்க வேண்டி யுள்ளதை அறிவுறுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீதியோர வெள்ளவாய்க்கால் மதில்கள் :**

கொக்குவில் தொடர்வண்டி நிலையவீதி ஒரத்து வெள்ளவாய்க்கால், கிணற்றின் ஆழமாகவிருந்தும், இதற்கு வீதியோர மதில்கள் இற்றைக்கு முப்பது ஆண்டுகட்குமுன் கோயில் வீதியைத் தொடுக்கும் பாலத்திலிருந்து ஒரு நூறுயார் தூரத்திற்குக் கட்டப்பட்டதுடன் கைவிடப்பட்டது. வெள்ள அரிப்பால் வீதி ஒடுக்கப்பட்டு இரண்டு வண்டிகள் விலத்திச் செல்ல முடியாதளவிற்கு வீதி சேதத்துக்குள்ளாகியது. இவ்வேளையில் 1975 இவ்வலுவலகப் பணிப்பாளர், ஆள்புல வேலைகள்பிரிவு - வடமாநிலம் அவர்கள் கவனத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்ததுடன், திரு. சி. அருளம்பலம் பா. உ. (நல்லூர்) அவர்களையும் உதவக் கேட்டுக்கொண்டோம். இதன் பலனாக 1975 பிற்பகுதியில் இம்மதில்கள் கட்டும்வேலை, முன்பு விடப்பட்ட இடத்திலிருந்து தொடங்காது, அச்சுக்கூட ஒழுங்கைக்கு எதிர்ப்பக்க வளைவில் தொடங்கி ஒரு ஐம்பது யாருக்குக் கட்டப்பட்டது. இதற்குக் காரணம் புரியாத நாம் இடைவிடப்பட்ட மதில்கள் தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாலம்வரை கட்டப்பட வேண்டியதையும், கிழக்கு நோக்கி முப்பது ஆண்டுக்கு முதல் கட்டப்பட்ட மதிலுடன் தொடுக்கப்பட வேண்டியதையும், மற்றும் கோயில் வீதி தொடக்கத்தில் உள்ள வெள்ளவாய்க்கால் ஓரத்திற்கும் மதில்கள் கட்டவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி, தொடர்புள்ள அதிகாரிகட்கும் எமது பா. உ. (நல்லூர்) அவர்கட்கும் வேண்டுகோள்களை மீண்டும் விடுத்தோம், இதன் அவசியத்தை எமது வேண்டுகோளுக்கிணங்க, சிறப்பு ஆணையாளர் கொக்குவில் ஊராட்சி மன்றமும் எழுதியிருந்தார். அடுத்து திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. (நல்லூர்) அவர்கள் வேண்டிய நிதியும் விதப்புரையும் கொடுத்துதவியதுடன், திணைக்களத்தினரைத் துரித நடவடிக்கையில் இறங்கி ஆவனசெய்யப் பொறியியலாளர் திரு. மு. சந்திரசேகரம் அவர்களும் உதவினார்கள். இவர்கள் யாபேருக்கும், கொக்குவில் மக்கள் சார்பில் கொ. மு. ம. கொழும்பு நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவிக்கின்றோம்.

இத்துடன் கோயில் வீதியைத் தொடுக்கும் பாலம் பக்கப்பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதையும், இரண்டு அகன்ற வீதிகளைத் தொடுக்கும் இப்பாலம், கோயில் வீதியின் முழு அகலத்திற்கும், அகலிக்கப்படுவதுடன் இவ்வீதிகளில், கல்லூரி மாணவியரும், மாணவரும் சைக்கிளில் நடமாடுவது அதிகரித்துள்ளதாலும், கார், லொறிகள் போக்குவரத்தும் இவ்வீதியில் கூடியதாலும், வாய்க்கால் ஓர மதில்களின்மேல் இரும்புக்குழாய்களால் ஆன பாதுகாப்பு வேலிகள் அமைக்கவேண்டியதையும், பொறுப்புள்ளவர்களுக்கு வேண்டுகோளாக விடுத்துள்ளோம்.

## நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் 10-1-1974 நடந்த குழப்பத்திற்கு மன்றத்தின் கண்டனம்

எமது மன்றம் 23-1-1974 அன்று, செயற்குழுவின் பணிப்பின் பேரில், 10-1-1974 வியாழக்கிழமை இரவு நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதிநாள் விழாவில். ஈழத்து யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தின்முன் கட்டுப்பாடாக விருந்து விழாப்பார்த்த இலட்சக்கணக்கான பொதுமக்கள்மீது தக்க காரணமின்றி, கண்ணீர்ப்புகைக் குண்டுகளைச் சுட்டும், குண்டாந்தடியடியும் செய்தது மல்லாமல், யாழ்-நகர் பஸ்நிலையத்திலும் இப்படியான தாக்குதல்கள் நடாத்தியதாகக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்ததையும் இந்த மனிதத்தன்மையற்ற தாக்குதலால் 10 பேர் உயிரிழந்ததையும் நூற்றுக்கணக்கானோர் காயமுற்றதையும், தம்து பவுண் பொன் நகைகளையும், சைசிக்கிள் வண்டிகளையும், ஆடையணிகளையும் இழந்து பெண்கள், ஆண்கள், பிள்ளைகள் இப்படிப் பலதரப்பட்டோரும் உயிரைக் காப்பதற்காக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சிக்குழுப் பதவியாளர்கள்



க. இரத்தினசபாபதி
(தலைவர்)



செ. இராசேந்திரன்
(செயலாளர்)

## துணைத்தலைவர்கள்



இரா. கனகசபாபதி



ச. பரமநாதன்



அ. ஜெயபாலசிங்கம்
(பொருளாளர்)



சி. சிவசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ சண்முகநாதன்



செ. பரமேஸ்வரன்



ந. யோகசுந்தரம்



கு. இரத்தினசபாபதி



மா. இந்திரகுமார்



சி. ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழித்து ஒழுங்கைகள்ஊடாக - கால்நடையாகப் பல மைல்கள் தூரம் பீதியுடன் சென்றோரும், இரவு முழுவதுமே பாதுகாப்பில்லாத இடங்களில் ஒழித்திருந்து சென்றோரும்; இப்படியாக சொல்லொணுத் துயரத்திற்கு உள்ளாக்கப்பட்டமை, யாழ்ப்பாணத்து மக்கள் மனதிலும், ஈழம் வாழ் தமிழ் மக்கள் மனதிலும் என்றும் மாருத விழுப் புண் வடுவை ஏற்படுத்தியதால் இதன் விழைவு இந்நாட்டில் வாழ் சிங்கள தமிழ் மக்கள் ஒற்றுமைக்குப் பெரும்பாதகம் விளைக்கலாம் என்பதால், பாதகம் இழைத்தவர் களையும், காரணமாக விருந்தவர்களையும் தண்டிக்க, இச்சம்பவம் பற்றிப் பாரபட்ச மற்ற விசாரணை நடத்த ஒரு விசாரணைக்குழுவை அமைத்து இதன் மூலமாகத் துயர் துடைக்கவும், நீதி வழங்கவும் ஆவன செய்யுமாறு "அன்றைய மாண்புமிகு குடியரசுத் தலைவர்" அவர்கட்கும், முதலமைச்சருக்கும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச் சுக்கும் கண்டனம் தெரிவித்தோம்.

## கொக்குவில் ஊராட்சி மன்றத் தேர்தலை நடாத்த வேண்டுகோள்

கொக்குவில் ஊராட்சி மன்றம் *14-3-1973* புதன்கிழமை கலைக்கப்பட்டதால் ஊரில் மக்கள் பொது வசதிகளான: வீதிகள், மின்வசதி, சுடலை மற்றும் இம்மன்றத் தில் பராமரிப்புக்குள்ளவை பாழடைந்துள்ளதையும், மக்களால், மக்கள் மன்றம், மக்க ளுக்காகச் சேவைசெய்யும் சனநாயக உரிமை மறுக்கப்பட்டதையும், ஊராட்சி மன் றத்தின் ஆயுட்காலம் முடிந்ததையும் சுட்டிக்காட்டி, அன்றைய மாண்புமிகு உள்ளு ராட்சி அமைச்சர் திரு. டபிள்யூ. பீ. யீ. அரியநாசா அவர்கட்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கும், அன்றைய நல்லூர் பாராளுமன்ற உறுப்பினருக்கும், கூடிய விரை வில் இத்தேர்தலை நடாத்திட வேண்டினேம். இத்தனைக்கும், கிடைத்தமைக்கான கடிதமும், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்களால் கொள்கைத் தீர் மானமொன்று எடுக்கவேண்டியுள்ளதையும், தொடர்ந்து இத்தீர்மானம் செயற்படுத் தப்படுமெனவும் பதில் கிடைத்தபோதும் எதுவும் நடைபெற்றதாகவில்லை. *1977* இல் அமைக்கப்பட்ட புதிய அரசு, உள்ளூராட்சி அலுவல்களில் சீரமைப்புகள் செய்யவுள்ள தாகவும் காலத்திற்குக் காலம் அறிவித்திருந்தது. *1980* இல் மாவட்ட அபிருத்திச் சபைகள் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதும், *1981* மேத் திங்களில் இதன் தேர்தல் கள் நடைபெறவுள்ளதாகவும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இச்சபைகள் உள்ளு ராட்சி அலுவல்களில் எப்படிச் செயற்படுமென்பதை காத்திருந்து பார்ப்போம்.

## இலங்கைப் பாராளுமன்ற அதிகார அறிக்கையில் உரைகள் மும்மொழியிலும் வெளியிட வேண்டுகோள் 21-2-1974

இலங்கையை, ஆட்சிபுரியும் பாராளுமன்றத்தின், நடவடிக்கைகளையும் மக்கள் பிரதிநிதிகளின் பேச்சுக்களையும் நிகழ்ந்த மொழியிலேயே வெளியிடும் வழமை சரியாக விருந்த பொழுதிலும், இப்பேச்சுக்களை இந்நாட்டில் வாழ் பெருந் தொகையான மக்களின் சிங்களம், தமிழ், மற்றும் உலகப்பொது மொழிகளில் ஒன்றுன ஆங்கிலம், ஆகிய மும்மொழியிலும் மொழிபெயர்புக்களுடன் தேசியப் பேரவையின் அதிகார அறிக்கையில் வெளியிட வேண்டினேம்.

இக் கோரிக்கை நிறைவேறும்பட்சத்தில் மக்கள் தங்கள் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் தங்களுக்காகவும், நாட்டிற்காகவும் என்ன நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளனர் என்பதை அறியப் புதினப் பத்திரிகைகளில் வெளிவரும் அரைகுறைச் செய்திகளை நம்பியிராது, படித்தறியவும் இதனுல் தமிழ்த் தலைவர்கள் கோரிக்கைகளைச் சிங்களமக்கள் அறியவும், சிங்கள மக்கள் கோரிக்கைகளை, நடவடிக்கைகளை தமிழ் மக்கள் அறியவும் தப்பபிப்பிராயங்கள் ஏற்படமாலும் காப்பதுடன் ஒற்றுமையும்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவடையுமெனவும் எடுத்துரைத்தோம். இதற்கு 27-2-1975இல் பதிப்பாசிரியர் (அதிகார அறிக்கை) அவர்களிடமிருந்து கிடைத்த பதிலில், முன்னரும் ஆலோசிக்கப் பட்டதாகவும், ஆனல் அரசாங்கத்தின் நிதிநிலைமையை உத்தேசித்து இன்றுவரை இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## இந்துக்கள் திருநாள்களாகிய சிவராத்திரி, தீபாவலி விடுமுறைகளை ஒழிப்பு முயற்சிக்குக் கண்டனம்.

1975 அரசு இந்துக்கள் விடுமுறை நாள்களைக்குறைக்கும் நோக்குடன் சிவராத் திரி, தீபாவலி விடுமுறைகளை இல்லாமல் செய்ய எடுத்த நடவடிக்கைகளை கேள்வி யுற்ற நாம் உடன் நடவடிக்கையாக, 22-9-1975 அன்றே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன அவர்கட்கும், கலாச்சார அலுவல்கள் அமைச்ச ருக்கும் கண்டனத் தந்தி அனுப்பினோம். ''இத்திருநாள்கள் இன்நாட்டின் வரலாற் றுக் காலத்திற்கு முன்பிருந்தே மக்களால் கொண்டாடப்பட்டதால் அன்னியர் ஆட்சிக் காலத்திலும் கூட இத்திருநாள்கள் விடுமுறையாக விருந்தன. இன்று இலங்கை மக்கள் குடியரசாகிய நிலையில் இந்நாட்டு இந்துக்களாகிய எமது உரிமை யைப் பறிப்பது அநியாயமானது'' எனவும் இத்திருநாள்கள் இந்துக்கள் இலங்கையில் வாழும்காலம்வரை கொண்டாட வேண்டிய புனித நாள்கள் என்பதையும், ஒழிப்பு நடவடிக்கையால் சைவத்தமிழ் மக்களுக்கு அரசின்மேல் அவநம்பிக்கையும் வெறுப்பும் எற்படும் என்பதையும் இடித்துரைத்து. இந்தநடவடிக்கையைக் கைவிடவும் வேண்டிக் கடிதமும் அனுப்பிவைத்தோம்.

## தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை விடுதலை செய்ய வேண்டுகோள்.

பயங்கர வாதிகள் என்றபொய்ப் பெயரில் அடிக்கடி தமிழ் மக்கள் பெரும்பாலும் இளைஞர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதையும் கண்டித்துவிடுத்த வேண்டுகோளை 26-11-1976 இல் மாண்புமிகு முதலமைச்சர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கட்கும், நிதியமைச்சுக்கும் அனுப்பினோம். தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆண்டுக்கணக்கில் நீதிவிசாரணையின்றி வைத்திருப்பதால், இவர்களின் உழைப்பையே ஆதாரமாகக் கொண்டிருக்கும் குடும்பங்கள் ஏழ்மையின் கொடுமையால் வருந்தியதையும் இவர்களிற் சிலர் தங்கள் பெற்றோர் இறுதிச் சடங்குகளுக்குத்தானும் கலந்து கொள்ள முடியாது தடுத்து வைக்கப்பட்டதை தமிழ்மக்கள் ஏற்பதற்கில்லை யென்றும் இவர்கள் தண்டனைக்குரிய குற்றம் புரிந்திருப்பராயின் நீதிமன்றத்தில், நிறுத் தித் தண்டனை வழங்குவதை தமிழ்ச்சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் என்பதையும், இவர்கள் பல்லாண்டுகாலம் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் நிலை தமிழ்மக்களுக்கு அரசின்மேல் வெறுப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளதால், மனிதாபிமானத்துடன் வாழவேண்டிய வயதில் இவர்கள் சிறையில் வாடுவதைத் தவிர்க்க நடவடிக்கை யெடுத்து நீதிவழங்கக் கடவுளை வேண்டிக்கொண்டோம். இப்படியான கடிதங்கள் மூன்று முறை அனுப்பியுள்ளோம்.

## இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ் - வளாகம்.

கொக்குவில் முன்னேற்ற மன்றம்-கொழும்பு, மேற்படி வளாகத்தை இதன் திறப்பு விழாவிற்கு முன்னரே வரவேற்றும், வாழ்த்தியும், எப்படி அமையவேண்டு மென்பதையும் குறிப்பிட்டு அன்றைய மாண்புமிகு பிரதமர், திருவாட்டி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கட்கு 26-7-1974இல் எழுதியதாவது: யாழ்ப்பாணத்தில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட பரமேஸ்வரக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பல்கலைக்கழக, யாழ்-வளாகமாக அமையப்போவதறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோமென்பதையும், இவ்வளாகம் ஒரு முழுமையான பல்கலைக்கழகமாக விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், விவசாயம், கலைகள்போன்ற பல்துறைகளும் அகத்தேகொண்டதாக அமையவேண்டியதுடன் இலங்கைவாழ் தமிழ் மக்களின் அருந்தத்துவப்பொருளான ''சைவசித்தாந்தம்'' இவ்வளாத்தில் ஆய்வுசெய்வதற்கான, ஒரு பகுதியும் இங்கு அமையவேண்டு மென்பதையும் பல்கலைக்கழக வேந்தருக்கும் அனுப்பிவைத்தோம். இவ்வேண்டுகோளில் தரப்படுத்தலால் வாய்ப்பிழக்காமல் ஒவ்வொரு ஆண்டும் உயர்கல்விபெறப் பெரும் இடைஞ்சல்களையெல்லாம் அனுபவிக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்விவாய்ப்பளிக்கவும் வேண்டினோம். யாழ்-வளாகம் அமைந்தால், உயர்கல்விக்காக, பிறஊரில் வசிக்கநேர்வதால் ஏற்படும் பல்லாயிரக்கணக்கான பணமும், குறிப்பாகத் தமிழ்மாணவியர் படும் இடைஞ்சலும் தீர்வதுடன், கல்லூரிப்படிப்புச் செலவுடன் பட்டப்படிப்பு முடியும்வாப்பளிப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சிக்குக் கொக்குவில் வாழ் தமிழ்ச்சைவக்குடிமக்கள் நன்றியையும் கடப்பாட்டையும் சமர்ப்பித்தோம்.

இன்று யாழ்-வளாக விரிவாக்கம், கொக்குவிலையே ஆக்கிரமிப்பதால், மக்கள் பெரும் பீதியுடன் வாழ வேண்டியநிலையில், விவசாயம், பொறியியல் போன்ற வளாக பீடங்கள் கிளிநொச்சிப் பகுதியில், அமையவுள்ளது கேட்டு ஆறுதலடைவோம். ஆண்டுதொறும் பல்கலைக்கழக அனுமதியில் விதிக்கப்படும் தரப்படுத்தலை அகற்றி நீதி வழங்குமாறு வேண்டியுள்ளோம்.

## பேருந்து சேவை, கோண்டாவிலில் இருந்து யாழ்ப்பாணம் வரை

இலங்கைப் போக்குவரவுச் சேவையின், இச்சேவை 1973 முற்பகுதியில் திரு. சி. அருளம்பலம் தே. அ. பே. உ. (நல்லூர்) அவர்களால ஏற்பாடானது. இதனல் கொக்குவில் கிழக்குப் பகுதி மக்கள், பலாலி வீதிக்கோ, காங்கேசன் துறைக்கோ, பேருந்துக்காகச் செல்லாது பொற்பதி வீதியிலிருந்தே செல்ல வசதி செய்துள்ளது, கல்லூரி மாணவ மாணவியரும் கச்சேரி அலுவலர்களும் யாழ்நகர் செல்வோருக்கும் வசதியாகவுள்ளது. இச்சேவையை அரைமணிக்கொருமுறை நடாத்தவும், கல்லூரிச் சேவையை இரட்டிக்கவும் யாழ்நகருக்குச் சினிமாப் படத்திற்குப் போவோர் வசதிக்காக இச்சேவை பத்துமணிவரை நீடிக்கப்படவும், மற்றும் இச்சேவையில் வண்டிகள் பழுதடைவதால் தடைப்படாமலிருக்க வேண்டிய அவசியத்தையும் 25-9-1973 தொடக்கம் 1977 இறுதிவரை பல வேண்டுகோள்கள் மூலம் உதவியுள்ளோம். இச்சேவையை ஏற்படுத்திய பா. உ. அவர்கட்கும், போக்குவரவுச் சேவையினருக்கும் கொக்குவில் மக்கள்சார்பில் எமது நன்றி உரித்தாகுக.

## தொடர்வண்டிச் சேவைப் பகுதிக்கு நாம் விடுத்த கோரிக்கைகள்

மதியவேளை கொழும்பு-யாழ்ப்பாணம் யாழ்தேவியும், உத்தரதேவியும் சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட வேளையில், இம்முயற்சிக்கும் 12-3-1974 மாண்புமிகு அமைச்சர் லெஸ்லி குணவர்த்தன அவர்கட்கு கண்டனமும், வேண்டுகோளும் விடுத்தோம். இதில் மேற்படி சேவை நிறுத்தப்படுவதால் மக்கள் பன்னிரண்டு மணித்தியாலத்திற்குமேல் பயணம் மேற்கொள்ளும் வண்டிகளில் செல்லவேண்டியுள்ளதையும், இவ்வண்டிகளில் மின்விளக்குகள் இல்லாமலும், மலசலகூடங்களில் நீர்க்குழாய்கள் இல்லாமலும், விசிறிகளும் அகற்றப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுடனும் இப்பாதையில் ஓடும்வண்டிகளில்தான் பெரும்தொகை லாபமீட்டப்பட்டிருந்தும் அடிக்கடி கட்டண உயர்வும் நடைபெறுவதே தவிர, வண்டியின் வசதிகள் கவனிக்கப்படாததுடன், சேவையும் நிறுத்தப்பட்டது கொடுமை விளைப்பதாகவுள்ளதால் தொடர்ந்து நாடத்தவும் வேண்டினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தோர் உடலை யாழ்ப்பாணம் தொடர்வண்டியில் கொண்டுவர உதவ வேண்டினோம்.

கொழும்பில் யாழ்ப்பாணத்து மக்கள் பல்லாயிரக்கணக்கில், அரசு ஊழியராகவும், தொழிலாளராகவும், வர்த்தகராகவும் வாழ்வதும் அவர்கள் குடும்பங்கள் வீட்டு வசதிகள் நெருக்கடியாலும், வாழ்க்கைச் செலவு உயர்வாலும் யாழ்ப்பாணத்திலேயே வாழவேண்டியுமுள்ளது. கொழும்பில் வாழ்வோர் இறக்க நேரும் வேளையில் இவர்கள் உடலை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்குப் பல்லாயிரம் செலவாகின்றது. இதற்கு நிவாரணமளிக்க நாள்தொறும் மாலையில் அஞ்சல் சேவையுடன் கூடிய வண்டியில், குறைந்த கட்டணத்தில் சடலங்கள் கொண்டுசெல்ல ஒழுங்குகள் செய்துதவ வேண்டி தகுதிவாய்தோருக்கு எழுதியதுடன் யாழ்ப்பாணப்பிரதேசத்திலிருந்து பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாகவுள்ள பலருக்கும் படிவங்கள் அனுப்பிவைத்தோம்.

## கிழமைச் சந்தியில் குறைந்த கட்டணத்தில் தொடர்வண்டியில் செல்ல வசதி

எம்து மன்றம் மேற்படி அலுவலாக 19-10-1976இல் இருந்து ஆண்டுதொறும் போக்குவரத்து அமைச்சருக்கும், தொடர்வண்டிச் சேவைப்பகுதிக்கும் கொழும்பு வாழ் மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வால் சரியான உணவுவசதியோ இருப்பிட வசதியும் இல்லாமல் இடைஞ்சல் படுவதுடன், இவர்கள் குடும்பநலன்களைப் பராமரிக்கவும் இனசனத்தினரின் நன்மை தின்மைகளில் கலந்து கொள்ளவும் முடியாது பிரயாணக் கட்டணம் பெருமளவாகவுள்ளது. இம் மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் கிழமை முடிவில் குறைந்த கட்டணப் பிரயாணச்சீட்டுகள் வழங்கவேண்டி எழுதியுள்ளோம்.

## திருக்கேதீஸ்வரத்தில் யாத்திரீகர் தங்குமடம்

இராமகிருஷ்ண மிசன் கதிர்காமத்தில் செல்வனே சிறப்புற யாத்திரீகர்கள் ஆயிரக்கணக்கானோருக்கு தங்கவசதியும், உணவுவசதியும் வழங்கியதையும் அந்தத் தெய்வீகச் சூழலில் நம்மையெல்லாம் மறந்து இறையின்பத்தில் லயித்திருக்க வைத்த சேவையைப் பாராட்டியும், இதைப் போன்று சிறந்த தொண்டைத் திருக்கேதீஸ்வரத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்ய, கொழும்பு இராமகிருஷ்ண மடத்தின் தவத்திரு சுவாமிகளுக்கு (14-2-1971) வேண்டுகோள்விடுத்தோம். இதில் திருக்கேதீஸ்வரத்தின் மகிமையையும், புனிதத்தன்மையையும், இவாகள் சேவை அவ்விடம் மக்களுக்குப் பெரிதும் வேண்டப்படுவதாக வேண்டுதலைச் சமர்ப்பித்தோம்.

இன்று கொக்குவிலைச் சேர்ந்த பெரியார் திரு. ஆ. சின்னத்தம்பி (J. P.) அவர்கள் தலைமையில் இயங்கும் கதிர்காமயாத்திரீகர் தொண்டர் சபையும் ஒரு பெரிய மடத்தைக் கட்டியுள்ளது. இது இன்னும் சில மாதங்களில் தொண்டில் ஈடுபடவுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## மின்சார உண்டியல்களின் பேரில் 25% மேலதிகவரி விதிப்பு

கொக்குவில் கிராம மன்றத்திற்கும், உள்ளூராட்சிப்பகுதி அதிகாரிக்கும், துணை உள்ளூராட்சி உதவி ஆணையாருக்கும் 22-1-1973 கடிதத் தொடர் தொடங்கி 1974ம் ஆண்டு பிற்பகுதியில் இவ்வலுவல் முடிவடைந்தது. வழங்கப்பட்ட புதியவரி மதிப்பீட்டில் (ரறிவ்) அதில் வீட்டுப்பாவனையாளருக்கும் பெரும் நிவாரணம் ஏற்பட்டது. ஆனால் இன்று கொக்குவிலில் பல பகுதியில், பாவனையாளருக்குத் தேவையான வெளிச்சம் கிடைப்பதாக இல்லாததால் இதற்கும் நிவாரணம் தேடவேண்டிய முயற்சியில் ஈடுபடவுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணுவளை வயிரவர் கோயில் மணி

கோயில் திருப்பணிக்குழுவின் பொருளாளர் திரு. பொ. கனகரத்தினம் அவர்கள் கோயில் மணிக்குக் கொழும்பில் நிதிசேர்த்துதவக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கொ. மு. ம. கொழும்பு ரூபா ஆயிரம் சேர்த்துதவியது.

## திருமதி செல்லம்மா இராசேந்திரம் அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.



திரு. திருமதி இராசேந்திரம் தம்பதிகள், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள், திருமதி செல்லம்மா இராசேந்திரம் அவர்கள் தமது கணவரை இழந்த நிலையிலும், கொக்குவிலில் உள்ள கோயில்களின் திருப்பணிக்கும், கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியின் காணி நிலம் வாங்கும் நிதிக்கும், விவேகானந்த விஞ்ஞான கூடத்திற்குக் குழாய்நீர், மின் வசதிகளுக்கும், சென்ற ஆண்டில் கொக்குவில் அரசினர் மருந்தகத்திற்குக் காணி நிலம் வாங்கும் நிதிக்கும் பல்லாயிரக் கணக்கில் வாரி வழங்கியுள்ளார். இதுபோல் ஸ்ரீலங்காவின் தலைநகரான கொழும்பிலும், கோயில் திருப்பணிகளுக்கும், கல்லூரிகளுக்கும், சமயசம்பந்தமான, மற்றும் அறநிலையங்களுக்கெல்லாம் அள்ளிக்கொடுத்து அக மகிழும் இம் அம்மையாரை எண்ணும்போதெல்லாம் பெருமைகொள்ளுகின்றோம். இவர்கள் பல்லாண்டுகள் உடல் நலத்துடன் நாடும் நம்கொக்குவிலும் பயனுற வாழ எல்லாம் வல்ல கடவுளையே வேண்டி வாழ்த்துகின்றோம். (மன்றத்தின் திருப்திக்காக இப்பாராட்டை வெளியிட அனுமதியளித்த திருவாட்டிக்கும் எமது நன்றிகள். வழங்கிய தொகையை வெளியிட இவர் விரும்பவில்லை). இவர்தன் மக்களும் இவர்கள் அமைப்பான மகாராஜா ஓகநைசேசனும் வளத்துடன் மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

## காலஞ்சென்ற திரு. சி. சி. இரத்தினசபாபதி அவர்கட்கு நினைவாஞ்சலி



இவர் மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர்; இவர் கொ. மு. ம. கொழும்பின் திட்டமான ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி ஆக்கத்தில் தீவிரமாக மன்றத்தைத் தூண்டியதுடன் முன்னின்று உழைத்தவர்; 1977 இல் இலங்கைப் பல்கலைக் கழக யாழ்வளாகத்தின் கணக்காய்வுப் பகுதித் தலைவராக வந்ததிலிருந்து, மகளிர் கல்லூரிக்குக் காணி வாங்கும் நலன்விரும்பிகள் சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார். இக்காலத்தில் கல்லூரிக்கு ஒன்பதரைப் பரப்புக்காணி பொதுமக்கள் நன்கொடையில் வாங்கப் பெற்றது. இத்துடன் இவர் மன்றத்தின் திட்டங்கள் யாவும் ஊரில் நல்ல முறையில் ஈடேறத் தீவிர ஈடுபாடு காட்டினார். 2-10-1924 ல் பிறந்த இவர் தமது ஐம்பத்திநாலாவது வயதில் 29-9-1978 அன்று காலமானார். இவர் இறுதி நாளன்றும் மாலையில் மகளிர் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இவருக்கு ஓர் இரங்கற் கூட்டத்தை 29-10-1978 ஞாயிறு அன்று சாரதா மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி ச. கணேஷ்வரன் தலைமையில் இணைந்து மன்றம் நடாத்தியது. இதில் யாழ் - வளாக வேந்தர் சு. வித்தியானந்தனும், கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சி. கே. கந்தசாமி, எமது செயலாளர் திரு. செ. இராசேந்திரன் மற்றும் பலரும் இரங்கலுரை வழங்கி அஞ்சலி செலுத்தினோம். மறைந்த இப்பெரிய உள்ளம் விட்டுச் சென்ற மூன்று குமாரர்களும் வளம்பெற வாழ்த்தினோம். ஒரு நினைவாஞ்சலியை வீரகேசரியில் வெளியிட்டும் ஆறுதல்பெற விழைந்தோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு
## 1970–1981 காலத்தில் பதவி வகித்தோர் பெயர் விபரம்

**தலைவர்**

திரு. இரா. இராசநாயகம்
திரு. க. இரத்தினசபாபதி

**துணைத்தலைவர்**

திரு. ஆ. சின்னத்தம்பி
திரு. சி. சேனாதிராசா
திரு. க. இரத்தினசபாபதி
திரு. சி. க. இரத்தினம்
திரு. இரா. கனகசபாபதி
திரு. ச. பரமநாதன்

**செயலாளர்**

திரு. செ. கோபாலசிங்கம்
திரு. செ. இராசேந்திரன்
திரு. சி. சிவசுப்பிரமணியம்

**பொருளாளர்**

திரு. க. இரத்தினம்
திரு. செ. கோபாலசிங்கம்
திரு. பொ. சின்னத்துரை
திரு. சு. ஜெயபாலசிங்கம்

**நல்லெண்ண ஆலோசனைக் குழு**

திரு. ஆ. சின்னத்தம்பி
திரு. அ. கந்தையா
திரு. க. சிவானந்தன்
திரு. க. தங்கராசா
திரு. சி. கனகலிங்கம்
திரு. தா. முத்தையா
திரு. மா. வ. தியாகராசா
திரு. சி. சீ. இரத்தினசபாபதி
திரு. மு. நடராசா
திரு. இரா. சீவரத்தினம்
திரு. க. இரவீந்திரன்
திரு. மு. சண்முகரத்தினம்
திரு. க. திருச்செல்வம்
திரு. சி. குணரத்தினம்
திரு. இரா. தர்மராசா

**செயற்குழு**

திரு. க. இரத்தினசபாபதி
திரு. அ. கந்தையா
திரு. தி. விக்னராசா
திரு. க. சிவானந்தம்
திரு. பொ. சின்னத்துரை
திரு. செ. இராமர்
திரு. வ. பத்மநாதன்
திரு. சி. க. இரத்தினம்
திரு. ச. பரமநாதன்
திரு. க. தியாகராசா
திரு. இரா. கனகசபாபதி
திரு. செ. இராசேந்திரன்
திரு. செ. பரமேஸ்வரன்
திரு. சி. பாலசுந்தரம்
திரு. சி. சிவசுப்பிரமணியம்
திரு. அ தனபாலசிங்கம்
திரு. நா. யோகசுந்தரம்
திரு. கு. இரத்தினசபாபதி
திரு. இரா. லோகேஸ்வரன்
திரு. அ. ஜெயபாலசிங்கம்
திரு. மா. இந்திரகுமார்
திரு. சி. ஸ்ரீதரன்
திரு. அ. சண்முகநாதன்

**கணக்காய்வாளர்**

திரு. சி. சீ. இரத்தினசபாபதி
திரு. சி. கனகலிங்கம்
திரு. மு. நடராசா

கொ. மு. ம. கொழும்பு முகவரி 1979 வரை: 25, பவுண்டன் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு - 10
இன்று: 62, காமல் வீதி, கொள்ளுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sir John Marshall

Among the many revelations that Mohenjo - daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than his discovery that Saivaism has a history going back to the Chalocolithic age or perhaps even further still, and that it takes its place as the most ancient living faith in the world.

*(From his "Mohenjo - daro and the Indus Civilization" -Preface.)*

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு
செய்துவரும் சேவையை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

# நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

**மின்சார உபகரணங்கள் இறக்குமதியாளரும்**
**விற்பனையாளரும்**

**141 - 143,** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 7016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST

WISHES

FROM

# JEZIMA AGENCIES

130, MAIN STREET,
COLOMBO 11

T'phone } 22289
37570

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. —குறள்

If she, who does not worship God, but who rising worships her husband, say "Let it rain," it will rain.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் நன்றியுடன் வழங்குவது....!



பேரன்புடையீர்,

எமது கொ. மு. ம. கொழும்பு செய்த தொண்டுகள் யாவும் முடிந்தளவு விபரமாகவும், இம் மலரில் சிறப்பாகவும் வழங்கும் இவ்வேளையில், மன்றத்தின் வாழ்விற்கு உறுப்பினர் பணமாகவும், நன்கொடையாகவும் வழங்கியதுடன், காலத்திற்குக் காலம் மன்றம் கொக்குவிலில் தமது திட்டங்களைச் செயற்படுத்தப் பெருநிதியளித்தும் மன்றத்திற்கு ஊக்கமும் ஊருக்கு ஆக்கமும் செய்ய இன்முகத்துடன் வரவேற்று இயன்ற பொருள் தந்த மன்ற உறுப்பினர்களுக்கும் கொழும்பு வாழ் கொக்குவில் மக்களுக்கும் நாம் பிறந்த மண்ணில் நம்மவர் வசதியுடன் வாழ நாம் வகுத்த திட்டங்களுக்கும் கடமையுணர்வுடன் உதவியமைக்கு எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இன்றுபோல் என்றும் எமக்கு ஆதரவு தரவும் வேண்டிப் பொருள் தந்தோர் பெயர் பொருள் தொகை விபரமும் இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

வாழ்க கொக்குவில்.

இவ்வண்ணம்,
அ. ஜெயபாலசிங்கம்
தொண்டிற்குரிய பொருளாளர்
கொ. மு. ம. — கொழும்பு

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி வசதிகள் விரிவாக்கத்திற்குக் கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்புக்கு நன்கொடையாக (1976 — 1979 காலத்தில்) பொருள் ஈந்தோர் பெயர்ப்பட்டியலும் தொகையும் மக்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறோம்.

## கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி
## வசதிகள் விரிவாக்க நன்கொடை (மின்சார வசதி)

| | | | |
|---|---|---|---|
| க. சிவானந்தன் | 500-00 | | 2050-00 |
| மு. சண்முகரத்தினம் | 500-00 | கி. சேனாதிராசா | 100-00 |
| மா. வ. தியாகராஜா | 500-00 | செ. பரமேஸ்வரன் | 100-00 |
| க. ரவீந்திரன் | 350-00 | இரா. நடராஜா | 100-00 |
| இ. தர்மராஜா | 200-00 | அ. கந்தையா | 100-00 |
| | 2050-00 | இ. இராசேந்திரன் | 100-00 |
| | | | 2550-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவாக்க நிதி

| | |
|---|---|
| திருமதி செல்லம்மா இராசேந்திரம் (காசோலையாக பெ. ஆ. ச- பெயரில் கொடுக்கப்பட்டது.) | 5000-00 |
| திரு. ம. வ. தியாகராசா (காசோலையாக பெ. ஆ. ச. பெயரில் கொடுக்கப்பட்டது.) | 1000-00 |
| திரு. இரா. தர்மராஜா | 1000-00 |
| ,, இரா. நவரத்தினம் | 1000-00 |
| ,, இரா. நிர்க்குணம் | 500-00 |
| ,, மு. சண்முகரத்தினம் | 500-00 |
| ,, செ. சிவசுப்பிரமணியம் } ,, செ. இராசேந்திரன் | 500-00 |
| ,, க. சிவானந்தன் | 500-00 |
| ,, இரா. இராசநாயகம் | 300-00 |
| ,, பொ. சின்னத்துரை | 250-00 |
| ,, வி. சுப்பையா | 250-00 |
| ,, தா. முத்தையா | 100-00 |
| ,, சி. பாலசுந்தரம் | 100-00 |
| ,, சி. கனகலிங்கம் | 200-00 |
| ,, மு. நடராசா | 200-00 |
| திருமதி ஜெ. குமாரசாமி | 200-00 |
| திரு. க. திருச்செல்வம் | 200-00 |
| ,, கு. செல்வராசா | 200-00 |
| ,, க. தியாகராசா | 200-00 |
| ,, க. இரத்தினசபாபதி | 200-00 |
| ,, செ. கணேஸ்வரன் | 200-00 |
| ,, சி. குணரத்தினம் | 200-00 |
| ,, அ. கந்தையா | 150-00 |
| ,, சி. இரத்தினசிங்கம் | 100-00 |
| ,, இரா. இராசதுரை | 100-00 |
| ,, எஸ். கே. இரத்தினம் | 100-00 |
| ,, எஸ். பரமநாதன் | 100-00 |
| ,, ஆ. சபாரத்தினம் | 100-00 |
| | 13450-00 |

| | |
|---|---|
| | 13450-00 |
| திரு செ. பரமேஸ்வரன் | 100-00 |
| ,, க. நல்லையா | 100-00 |
| ,, ந. யோகசுந்தரம் | 100-00 |
| ,, இரா. கனகசபாபதி | 100-00 |
| ,, கு. சற்குணசிங்கம் | 100-00 |
| ,, இரா. தவராசா | 100-00 |
| ,, எம். சண்முகராசா | 100-00 |
| ,, செ. வேலாயுதபிள்ளை | 100-00 |
| ,, க. மகேந்திரன் | 100-00 |
| ,, க. பாலசுப்பிரமணியம் | 100-00 |
| ,, சி. சிவசுப்பிரமணியம் | 100-00 |
| ,, நா. நவரத்தினம் | 100-00 |
| ,, வி. ரி. நடராசா | 100-00 |
| ,, இரா. நடராசா | 100-00 |
| ,, செ. சுப்பிரமணியம் | 100-00 |
| ,, க. சண்முகநாதன் | 100-00 |
| ,, சி. செல்வராசா | 100-00 |
| ,, எஸ். முத்துக்கிருஷ்ணன் | 100-00 |
| ,, கு. ஆனந்தராசா | 100-00 |
| ,, சி. பரமேஸ்வரன் | 100-00 |
| ,, ஆ. க. ஆறுமுகத்தம்பி | 50-00 |
| ,, கு. லோகேஸ்வரன் | 50-00 |
| ,, அ. தனபாலசிங்கம் | 100-00 |
| செல்வி அ. கந்தையா | 50-00 |
| திரு. எஸ். பி. பாலசிங்கம் | 50-00 |
| ,, அ. சிவரத்தினம் | 50-00 |
| ,, ஐ. கணேசன் | 50-00 |
| ,, செ. சுப்பிரமணியம் | 75-00 |
| ,, தி. சிவகுமார் | 25-00 |
| ,, அ. ஜெயபாலசிங்கம் | 50-00 |
| ,, அ. சிவரத்தினம் | 50-00 |
| திருமதி செல்லம்மா இராசேந்திரம் (பெ. ஆ. ச) பெயரில் வழங்கியது | 10,000-00 |
| | 26050-00 |

### சுவாமி விபுலானந்த நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கியுதவிய நிதிப்பட்டியல்

| | |
|---|---|
| திரு. மு. சண்முகரத்தினம் | 250-00 |
| ,, சி. குணரத்தினம் | 100-00 |
| ,, க. தியாகராசா | 100-00 |
| | 450-00 |

| | | |
|---|---|---|
| 1) | மின்சார நிதி | 2550-00 |
| 2) | கட்டிட நிதி | 26050-00 |
| 3) | நூல்நிலைய நிதி | 450-00 |
| | | 29050-00 |

பரிசோதித்துச் சரியெனக் காணப்பட்டது.

மு. நடராசா (ஒப்பம்)
(கணக்காய்வாளர்)
30-3-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித அறிவைவிட விழுமியது உண்மை — மகாத்மா காந்தி

**Truth is superior to man's wisdom** — *Mahatma Gandhi*

WITH THE BEST COMPLIMENTS FROM

# RAAJANS

*The Newest Photo Copying Centre*

*Specialists in Photo Stat Copies.*

**282 / A1, DAM STREET,**
**COLOMBO 12.**
**(Opposite Dam Street Post Office)**

ORDERS UNDERTAKEN ON HOLIDAYS TOO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TEACH HIM KINDLY WORLD

Teach my son that it is far more honourable to fail than cheat. Teach him to have faith in his own ideas, even if everyone tells him they are wrong.

Try to give my son the strength not to follow the crowd when everyone else is getting on the handwagon. Teach him to listen to all men, but to filter all he hears on a screen of truth and to take only the good that comes through.

Teach him to close his ears on a howling nob - and to stand and fight if he thinks he's right.

— ABRAHAM LINCOLN


பெருவளம் கொழிக்கும் கொக்குவிற்பதி மகள்
திருநிறைந்து அறிவுயர்ந்து என்றும் ஒளிருக.

**SPARTAN PRINTS LIMITED.**

PRINTERS, PUBLISHERS & MANUFACTURES OF SEASIONAL GOODS.

154, WOLFENDHAL STREET, COLOMBO 13.

*T'phone:* 23678



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம்

சிவஞானவாரிதி த. கு. குருசாமி, B. A. Hons (Lond)
(கொக்குவில் மேற்கு சைவத் தமிழ்ப் புலவர் த. குமாரசாமி
அவர்கள் தவப்புதல்வன்)

[இக் கட்டுரை சைவசித்தாந்த கலாநிதி வ. பொன்னையா, B. A. (Lond.) Ph. D. அவர்களுக்குச் சமர்ப்பணம்.]

சைவம் சிவத்தொடு தொடர்புடையது. சிவனை வணங்குவோர் சைவர். சிவனை வழிபட்டு உய்தியடைந்து பேரின்பப் பெருவாழ்விலே திளைத்து உலகியல் சார்ந்த பந்தபாசங்களிலிருந்து விடுதலைபெற்று முத்தியின்பத்திலே சிவானுபூதிபெற வழிகாட்டுவது சைவசித்தாந்தம். சைவம், சித்தம், அந்தம் என்னும் மூன்று சொற்களும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல நீக்க வழியினைக்காட்டி பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமிகம் என்னும் மூவினைகளின் தொடர்பு அறச் செய்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆய முக்காலத்தும் மேலான இன்ப நிலையிலே இருக்கவைத்து, தூலம், சூக்குமம் அதிசூக்குமம் ஆகிய முத்தன்மைகளையும் உணரவைத்து என்றும் இறவாத இன்ப அன்புநிலையில் நினைத்தொறும் பேசுந்தோறும் காண்தொறும் மூவகையிலும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியவைப்பது சைவம். சிவனது பாதாரவிந்தங்களிலே சித்தாந்தத்தைப் பதித்து அதுவே அந்தம் என்பதைத் தெளிந்து என்றும் முத்தியின் பத்திலே திளைத்திருக்கச் செய்யும் நெறி சைவ சித்தாந்த நெறியாகும்.

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு:

| | | |
|---|---|---|
| 1. | சிவஞானபோதம் | மெய்கண்டதேவர் |
| 2. | சிவஞான சித்தியார் | அருணந்திசிவாசாரியர் |
| 3. | சிவப்பிரகாசம் | உமாபதிசிவாசாரியர் |
| 4. | திருவருட்பயன் | உமாபதிசிவாசாரியர் |
| 5. | சங்கற்பநிராகரணம் | உமாபதிசிவாசாரியர் |
| 6. | வினாவெண்பா | உமாபதிசிவாசாரியர் |
| 7. | கொடிக்கவி | உமாபதிசிவாசாரியர் |
| 8. | போற்றிப்பஃறொடை | உமாபதிசிவாசாரியர் |
| 9. | நெஞ்சுவிடுதூது | உமாபதிசிவாசாரியர் |
| 10. | உண்மைநெறி விளக்கம் | உமாபதிசிவாசாரியர் |
| 11. | உண்மை விளக்கம் | திருவதிகை மனவாசகங்கடந்தார் |
| 12. | இருபாவிருபஃது | அருணந்திசிவாசாரியர் |
| 13. | திருவுந்தியார் | உய்யவந்ததேவநாயனார் |
| 14. | திருக்களிற்றுப்படியார் | உய்யவந்ததேவநாயனார் |

காலம்

இந்நூல்கள் எழுத்துருவிலே அமைந்த காலம் 14 ஆவது நூற்றாண்டாகும். இதையே ஆதாரமாகக்கொண்டு சைவ சித்தாந்தத்தின் காலம் 14 ம் நூற்றாண்டு எனக் காணமுற்படுவது அறியாமையாகும். சிவனை வழிபட்ட காலம் சைவத்தின் காலம். சைவத்தின் காலத்தை ஓரளவு நிதானித்துக்கொண்டால் சைவசித்தாந்த காலத்தை ஓரளவு உணர்ந்துகொள்ளலாம். சிவனை மக்கள் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புற்றோங்கிய [காலம் எனவும், பாரத
பட்ட காலம் ஆன்றோர் நாகரிகம்
தேசத்திலே, சிந்துநதிப் பள்ளத்தாக்கிலே மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிக
காலத்திலே சிவலிங்க வழிபாடும், சிவாலய அமைப்பும் காணப்படுகிறதென்
றும், இந்த நாகரிகத்தின் காலம் கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்
றும் அகழ்வாராய்ச்சி நிபுணர் நிரூபித்துள்ளனர். கி. மு. 5000 ஆண்டுகளுக்கு
முன்னரே சிவலிங்க வழிபாடு இருந்தது என்பதும், அக்காலத்து வாழ்ந்த
மக்கள் பேசிய மொழி திராவிடமொழி என்றும் ரஷ்யவிஞ்ஞானிகள் அகழ்வா
ராய்ச்சி மூலமும், சிலாசாசன தொல்பொருளியல் ஆராய்ச்சிகள் மூலமும் நிரூபித்
துள்ளனர். ஒப்பிலக்கண ஆய்வு செய்த கால்ட்வெல் பாதிரியார் ஆதித் திரா
விடத் தாய்மொழி தமிழ்மொழியே எனத் தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார்.[1]

## சைவத்தின் தொன்மை

இதிலிருந்து கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இனம் திராவிட இனம் என்றும், அவர்கள் பேசிய மொழி தமிழென்றும், அவர்கள் வணங்கிய தெய்வம் சிவனென்றும் அறிந்தோம். சித்தத்தின் முடிந்த முடிவிடம் சிவன்கழல் என்பதை அறிந்த தமிழ்மகன் சிவனை வழிபட்டான். அவனுக்கு ஆதாரமாகக் கிடைத்தவை சிவாகம நூல்கள். ஆகம நூல்கள் ஆதிகாலத்திலே தமிழிலே இருந்தன. பின்னர் வடமொழியில் பெயர்க்கப்பட்டன என்ற ஐதிகம் உண்டு. அதற்குக் காரணம் ஆகமநூல்களிலே கூறப்படும் ஆலய அமைப்பு வேதங்களிலே கூறப்படாமையும், விழாக்காலங்களிலே ஓதப்படும் பண்கள் ஆகமங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. வேதங்களில் பண்ணிசைபற்றிய குறிப்பெதுவுமில்லை. இவ்விதமாக ஆராயும்போது வேதங்களும் ஆகமங்களும் தனித் தனிச் சிறப்புக்கள் பொருந்தியனவாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

## சிவாகமங்களின் தோற்றம்

சிவாகமங்கள் சிவபெருமானாலே அருளிச்செய்யப்பட்ட சிறப்பினை உடையன. மானிடராகப் பிறந்து உலகிலே பலவிதமான இன்பதுன்பத்தையும் அனுபவித்து மெய்யுணர்வு பெறுதற்கு விழையும் மனிதர்கள் உண்மை உணர வேண்டும் என்பதற்காக அருளிச்செய்யப்பட்டதனாலே சிவாகமங்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்தன. சதாசிவமூர்த்தியுடைய ஐந்து முகங்களும் சத்தியோஜாத முகத்தினின்றும் கௌசிக முனிவரின் பொருட்டு காமிகம், யோகஜம் சிந்தியம், காரணம், அசிதம் ஆகிய ஐந்து ஆகமங்களும் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது.

வாமதேவ முகத்தினின்றும் காசிப முனிவரின் பொருட்டு தீப்தம், சூக்குமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம் என்னும் ஐந்து ஆகமங்களும் தோன்றின. இவற்றின்படியே காசிபருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது.

[2] அகோர முகத்திலிருந்தும் பரத்துவாச முனிவரின் பொருட்டு விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புயம், ஆக்கினேயம், வீரம் என்னும் ஐந்து ஆகமங்களும் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீஷை செய்யப்பட்டது.

---

[1] Comparative Grammar of Dravidian Languages by Caldwell

[2] சிவபூஜை விளக்கம்—அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் — ப 234—236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்புருட முகத்தினின்றும் கௌதமமுனிவரின் பொருட்டு ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம் என்னும் ஐந்து ஆகமங்களும் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது.

ஈசான முகத்தினின்றும் அகத்திய முனிவரின் பொருட்டு புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம், என்னும் எட்டு ஆகமங்களும் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது.

இச் சிவாகமங்கள் சித்தாந்தம் எனவும் பெயர்பெறும். சிவனால் அருளிச் செய்யப்பெற்றமையால் சைவசித்தாந்த நூல்களே சிவாகமங்கள் என்றும், இவையே முதனூல்கள் என்றும் வழங்கப் பெறுவனவாயின. 28 ஆகமங்களும் முறையே

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அசிதம்
6. தீப்தம்
7. சூக்குமம்
8. சகசிரம்
9. அம்சுமான்
10. சுப்பிரபேதம்
11. விஜயம்
12. நிச்சுவாசம்
13. சுவாயம்புயம்
14. ஆக்கினேயம்
15. வீரம்
16. ரௌரவம்
17. மகுடம்
18. விமலம்
19. சந்திரஞானம்
20. முகபிம்பம்
21. புரோற்கீதம்
22. இலளிதம்
23. சித்தம்
24. சந்தானம்
25. சர்வோக்தம்
26. பாரமேசுரம்
27. கிரணம்
28. வாதுளம்

சிவாகமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களாக வகுக்கப்படும்.

சரியாபாதத்திலே பிராயச்சித்தவிதி, பவித்திரவிதி, சிவலிங்கலக்ஷணம், செபமாலை, யோகப்பட்டம் முதலியவற்றின் இலக்ஷணம் முதலியன கூறப்படும்.

கிரியாபாதத்திலே மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூஜை சமய, விசேட, நிருவாண, ஆசாரிய அபிடேகம் முதலியன விபரிக்கப்படும்.

யோகபாதத்திலே முப்பத்தாறு தத்துவங்கள், இயமம், நியமம், ஆசனம் சமாதிமுறை முதலியன கூறப்படும்.

ஞானபாதத்திலே பதி, பசு, பாச இலக்கணங்கள் கூறப்படும்.

## முப்பொருள் விளக்கம்

பதி, பசு, பாசம் அனாதி, நித்தியம் என்று சைவசித்தாந்தம் வகையறுத்துக்கூறும். திருவாதவூரடிகள் புராணத்திலே திருப்பெருந்துறைச் சருக்கத்திலே இறைவன் மாணிக்கவாசகருக்கு உபதேசித்தருளும்போது "வாய்ந்த முப்பொருளின் செய்தியே பொருளென மனந்தெளிந்து"[4] எனத் திருவாய்

---

[3] சிவபூசை விளக்கம்: அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் (ப. 237)

[4] திருவாதவூரடிகள் புராணம்: கடவுள்மாமுனிவர். திருப்பெருந்துறைச் சருக்கம் (பாடல். 120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானே பதியாக விளங்குகிறான்.
மலர்ந்தருளினார். ஆன்மநாயகனாகிய சிவபெருமானே பதியாக விளங்குகிறான்.
ஆன்மாக்கள் பசுக்களாக விளங்குகின்றன. பசுக்கள் பாசத்துடன் அநாதி
யாகவே பற்றியிருப்பதனால் பிறவி எடுத்து உலகில் இன்பதுன்ப அனுப
வத்தைப் பிராரப்தகர்மவினையின் பயனாக அடைகின்றன. அவ்விதமாக
ஆன்மாக்களுக்குப் பிராரப்தகருமவினையை அளந்து அனுபவிக்குமாறு கூட்டு
விப்பவனும் இறைவனே. ''வல்வினைப்பயன் வருமுறை நெறியே அளத்து
நாம் தர நுகர்ந்தும் மேல் நுகர்வு மாக்கியே திரிந்தன மன அழுக்கால்'' [5]
என்று குறிப்பிடுவதனாலே பிராரப்தகர்மவினைப்பயனாக எமக்குக் கிடைத்த தனு
வாகிய உடலுடன் கூடிவாழும்போது அந்தக் கரணங்களுடன் சேர்ந்து உல
கத்திலே இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறோம். நாம் அனுபவிக்
கும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம் நாமே என்பதனை உணர்ந்து
மனதைத் தூய்மைப்படுத்தி நல்வினையிலே விருப்போ, தீவினையிலே வெறுப்போ
இன்றி இருவினைகளையும் சமமாகவே நோக்கும் இருவினை ஒப்புநிலை கைவரப்
பெறுதல் சிறப்புடைத்து. ''கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார் ஓடும் செம்
பொனும் ஒக்கவேநோக்குவார்'' [6] என்று சேக்கிழார் பெருமான் இருவினை ஒப்பு
நேர்ந்த நிலையில் வாழ்ந்த பெருமைமிக்க திருக்கூட்டச்சிறப்பினை எடுத்துக்
காட்டுகின்றார். இருவினை ஒப்பு நேருவதனாலே மனம் தூய்மையாகிறது.
இறைவனது பாதாரவிந்தங்களை நினைக்கிறது. [7] விரிந்த சஞ்சிதவினைகளன்
புடனேம் விழிக்க வந்தன விரவுமிப் பிறப்பிற் பொருந்தும் வல்வினையுட
லுடனகலும் புந்திசேரருள் வருவினை போக்கும்'' என்று இறைவனே திருவாத
வூருக்குச் சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவு படுத்தினார்.

உலகிலே ஆன்மாக்கள் பிறவி எடுத்தது ஆணவ மலத்திலிருந்து நீங்கு
தற்காகவே மலம் பிறவிக் கேதுவாகிறது. இந்தமலம் செழிம்பு போல்வது.
ஆன்மாவை அநாதியாகவே பற்றியிருப்பது. செம்பிலிருந்து செழிம்பு நீங்குத
லின்றி உடன் சேர்ந்திருப்பது இயல்பு. அதேபோல ஆன்மாவை அநாதியாகவே
பற்றியிருக்கும் ஆணவ வலிகெட ஆன்மா முத்தியின்பத்தில் திளைத்திருப்பதே
பிறவிப்பயனாகும். மணிவாசகப் பொருமான் திருவாசகத்திலே குறிப்பிடும்
போது [8] தங்கண்மலம் கழுவுவார் வந்து சார்வது இவ்வுலகம் என்றும் [9] இந்த
பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்றும் குறிப்பிட்டார்.

ஆணவ மலத்தை நீக்குவதே முடியாதது. ஏனெனில் ஆன்மாவும் அநாதி
ஆணவம் வலிகெட்டு நிற்கும் நிலையே முத்திநிலை என்று சைவசித்தாந்தம்
குறிப்பிடுகிறது. பூவுலகத்தில் பிறவி எடுத்த ஆன்மாக்கள் ஆணவ வலியி
னாலே சுயநலவாதியாகவும், தன்னைப்பற்றியும் தனது குடும்பத்தினரைப் பற்றி
யும் கூடுதலாகச் சிந்திப்பதனாலே இவைகளைப்பற்றிச் சிந்திக்க முடியாத நிலை
க்கு வந்துவிடுவதை அனுபவ வாயிலாக அறியலாம். எப்பொழுது தான், எனது
என்ற நினைப்பு நீங்குகிறதோ அப்பொழுது ஆன்மா புலனறிவழக்கிலிருந்து
விடுபடுகிறது. இன்பதுன்ப அனுபவத்திலே நாட்டம் குறைகிறது. [10] ''நன்றே
வருவதும் தீதே விளைகினும் நானறிவ தோன்றேயுமில்லை'' எனத் தன்னை
முழுமையாக இறைவனுக்கே அர்ப்பணித்தநிலை சைவசித்தாந்தத்திலே விளக்

[5] திருவாதவூரடிகள் புராணம் திருப்பெருந்துறைச் சருக்கம் (102)
[6] பெரியபுராணம் திருக்கூட்டச்சிறப்பு (பாடல் 8)
[7] திருவாதவூரடிகள் புராணம் திருப்பெருந்துறைச் சருக்கம். (122)
[8] திருவாசகம் திருவெம்பாவை 13 ஆம் பாடல்.
[9] திருவாசகம் திருப்பள்ளி எழுச்சி, 'புவனியிற்போய் பிறவிமையினால்'
[10] அபிராமி அந்தாதி. 95 ஆவது பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகிறது.[11] "அவனேதானே ஆகிய அந்நெறி ஏகனாக இறைபணிநிற்க மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" எனக்குறிப்பிடப்பட்டதனையும் சிந் தித்தும் தெளிவுபெறுவது சிறந்தது. சிவபூசையிலே சிவோகம்பாவனை உண்டு. தன்னைச் சிவனாகப் பாவனைசெய்து சிவனைப் பூசை செய்வது சிவபூசையின் சிறப்பாகும். இதனால் பாவனைசெய்து பூசைசெய்யும் ஆன்மா சிவனாவதில்லை. கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவிக்கிறது. ஆனால் கானக்கோழி மயில் ஆவதில்லை. அதேபோல ஆன்மா சிவனாக ஆவ தில்லை. தான்வேறு சிவன்வேறு என்று கருதாது இருதயகமலத்திலே சிவனை இருத்தி ஆணவ வலிகெட்டுத் தன்னைச் செயற்படச் செய்வது; ஆன்மாவை இயக்குவது; ஆன்ம நாயகனாகிய இறைவனேஎன்பதை நன்கு உணர்ந்துகொண் டால், [12] அவன் அருளே கண்ணாகக்காணும் நெறி தோன்றும். உடலை ஆன்மா இருந்து வழிநடத்துகின்றது. ஆன்மா இல்லாவிட்டால் உடல் செயலற்றுவிடு கிறது. ஆன்மாதான் உடலன்று. உடலுக்கு வேறாக, தனியாக ஆன்மா இருந் தாலும் உடலுடன் ஒன்றி இயங்கும்போது உடலுக்கு இட்ட பெயர் வழி உடல் இயக்கத்திற்கு உயிர் இன்றியமையாதது போல ஆன்ம ஈடேற்றத்திற்கு இறைவனது திருவருள் இன்றியமையாததாகும் என்பது வெள்ளிடை மலை. உயிருக்குயிராகிய இறைவனை உள்ளத்திலே இருத்துவதன் மூலமே அவன் அருளை நாடி நிற்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டும். அதற்குச் சிறந்தவழி [13] சிந்தனை நின்தனக்காக்கி, கண்ணிணைத் திருப்பாதப் போதுக்காக்கி வந்தனையும் அம் மலர்க்கே ஆக்கி, வாக்கு மணிவார்த்தைக்காக்கி வழிபடுவது. இதுவே சிவோ கம்பாவனையாகும். இந்த நிலைக்கு வந்துசேரும்போது, [14] சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை முந்தைவினை முழுதும் ஓய உரைத்து" வீடுபேறு அடைவதற்கு நான்கு வழிகள் கூறப்படுகின்றன. சரியைத் தொண்டு செய்து ஆலயத்துக்குச் சென்று [15] நிலைபெறுமாறு எண்ணுதியேல் நித்தலும் எம் பிரா னுடைய கோயில் புக்கு, புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு, பூ மாலை புனைந்து ஏத்தி புகழ்ந்துபாடி, தலையாரக் கும்பிட்டு, கூத்துமாடி சங் கரா சய போற்றி போற்றி என்றும் அலை புனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும் ஆரூரா என்றென்று" இரந்து போற்றி வழிபடுவோருக்கு [16] சாலோக முத்தியும், கிரியைத் தொண்டு மூலம் நந்தவனம் அமைத்தல், பூ எடுத்து மாலை கட்டுதல், சுவாமிக்குச் சாத்துதல், விளக்கு ஏற்றுதல், பூசைக்குரிய பாத்திரங் கள் விளக்குதல், தீபம் எற்றுதல், பூசை செய்தல், அபிடேகம் செய்தல், பூமாலை சாத்துதல், நைந்துருகிப் பாடுதல், ஆடுதல், பணிதல், சேவித்தல் முதலான தொண்டுகள் செய்வோர் [16] சாமீப முத்தியும், யோகசாதனைமூலமாக மூலாதா ரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, பிராணாயாமம் மூலமாக இடைகலை பிங்கலை என்னும் இரு பாதைகளையும் மூடி சுழிமுனை நாடியைத் திறந்து மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று சொல்லப்படுகின்ற ஆறு ஆதாரங்களிலும் ஆன்மாவை இருத்தி தியா னித்து, ஆக்ஞையும் கடந்து [13] துரியம் கடந்த துவாதசாந்தப் பெருவெளி

---

11 சிவஞானபோதம் 10 ஆவது சூத்திரம்

12 திருவாசகம்

13 தேவாரம். திருநாவுக்கரசர் வினாவிடைத் திருத்தாண்டகம். (6 ந் திருமுறை — மைப்படித்த கண்ணாளும் என்ற பாடல்)

14 திருவாசகம்

15 அப்பர் தேவாரம்

16 திருவாதவூரடிகள் புராணம். சரியை - பாடல் 117, கிரியை 118.

17 திருவாதவூரடிகள் புராணம் - யோகம் 119, ஞானம் 120

81 கந்தர் கலிவெண்பா - குமரகுருபரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகிய சிதம்பரத்திலே ஆனந்தத் தாண்டவஞ் செய்து தானும் ஆடி உலகனைத் தையும் [19] ஆட்டுவிக்கும் கட்டுவனாக விளங்கும் அருள்வள்ளல் தாண்டவம் புரி நின்றோர் சாரூபபதவியையும் பெறுவர்.

ஞான நிலையிலே முப்பொருள் உண்மையின் பொருளே மெய்யென உணர்ந்து பதி, பசு, பாசம், கனுதி, நித்தியம் என உணர்ந்து அனுதியாக உள்ள முப்பொருள்களும் ஒன்று மற்றொன்றாவதில்லை என உணர்ந்து பதி இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவர் என உணர்த்தும். பசு பாசத் தோடு தொடர்புடையது. பாசம் பசுவைவிட்டு நீங்காது. ஆதலினாலே நிர்மல மான பொருளுடன் மலத்துடன் கூடிய பசுசேரமாட்டாது என்பதைத் தெளிந்து பதியின் திருவருள் கிடைப்பதனால் பசு பாசத்தின் வலிகெட்டு முத்தியின்பத் தில் திளைத்திருப்பதே பேரின்பம் என்பதை ஞானநிலையில் உணர்ந்தவர்கள் சாயுச்சிய பதவி பெறுவர் என்பதும் சிவஞான உண்மை. இதனை இறைவனே குருமூர்த்தமாக எழுந்தருளிவந்து மாணிக்கவாசகப் பெருமானுக்குக் குருந் தமர நிழலிலே வீற்றிருந்து திருப்பெருந்துறையிலே உபதேசித்தருளினார்.

மெய்நெறி பெறுதற்குச் சிறந்த உபாயத்தை எடுத்துக்கூறும்போது சிவஞானபோதம் 12ம் சூத்திரம்

"செம்மலர் நோன்றாள் சேர வொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

எனச் சிறப்பாக எடுத்து விளங்கப்படுத்துகிறது. இறைவனது பாதங்களைச் சேரு வதுதான் உய்யும் நெறி என்றார். ஆன்மாக்கள் பற்றுக்கோடாகச் சென்று சேரு வதற்குரிய வலிமை பொருந்திய உறுதியான தாமரை மலர் போலும் பாதங் களைச் சேரவிடாது தடுப்பது நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களைத் தரும் ஆணவ மலம். களிம்புபோன்ற தன்மையுடைய ஆணவமலமானது செம்பு போன்ற ஆன்மாவை மீண்டும் பற்றுதவாறு [20] "நான் எனது என்பது அற்ற நிலையே மோன நிலையா திருவடியா" பற்றிநின்றற்கு இறைவனது பாதார விந்தங்களே தஞ்சம் என நம்பி வாழ்கின்ற அடியவருடன் உறவாடி உலகியல் மயக்கத்திலிருந்து விடுபட்டு இறைவனது கழலிணைகளிலே அன்பு நிறைந்த [21] நாயகன் சேவடி தைவருசிந்தையும் தாழ்வடமும் பொருந்திய சிவவேடம் தாங்கிய மெய்யடியார்களைக் கண்டபோதும் சிவாலயங்களைக் கண்டபோதும் சிவ னெனவே வழிபடுதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது சைவசித்தாந்தக் கருத்தினை வலியுறுத்தற்கே.

எமது வாழ்வு பெருவாழ்வாக, நிறைவுபெற்ற வாழ்வாக மலரச்செய்வதற் குரிய வழிவகைகளை எடுத்துக்கூறுவது சைவசித்தாந்தம் ஒன்றே. இச் சைவ சித்தாந்தத்தின் காலம் கி. மு. 5,000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்பத றிந்தோம். திருக்குறள் சைவசித்தாந்தக் கருத்துக்களை முற்றாகத் தெளிவுபடுத் தும் இலக்கியமாக விளங்குகிறது. ஏனெனில், திருக்குறளின் காலத்தையும்,

19 பெரியபுராணம் - சேக்கிழார்
20 கந்தர் கலிவெண்பா - குமரகுருபரர்.
21 பெரியபுராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மதங்கள் தோன்றிய காலத்தையும் ஆராயும்போது, சைவத்தின் காலத்துடன் தொடர்புடைய சிந்தனை மக்கள் மனதில் தோன்றி வளர்ச்சியடைந்த காலத்திலேயே திருக்குறள் தோன்றியிருத்தல் வேண்டும் என்பதற்குப் பல உள்ளீட்டுவமங்கள் சான்றாக அமைகின்றன. மனத்தூய்மையே உய்யுநெறிக்கான வழி எனச் சைவசித்தாந்தம் கூறும். அந்த நெறியையே வலியுறுத்து முகமாக [22]"மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்" எனத் திருக்குறளிலே வலியுறுத்தப்பெற்றிருக்கிறது.

மூவினைகளின் தன்மைகள் சைவசித்தாந்தத்திலே குறிப்பிடப்பட்டது போலவே [22]"ஊழிற் பெருவலியாவுள" எனவும் கூறி இறையருளாலே வினைப் பயனை வெல்லலாம் என்ற கருத்தை உள்ளடக்கி [22]ஊழையும் உட்பக்கம் காண்பர்" என சைவசித்தாந்த உட்பொருளை விளக்கி, [22]"இரு வேறு உலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" எனக்காட்டி மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்துடன் மறைந்தது மாமதயானை என்ற சைவசித்தாந்தக் கருத்துக்கமைய உலகியலில் இருப்பார்க்குத் தெய்வீகநெறி தெரியாமையும், தெய்வீகநெறியிலே நிற்பவர்கள் உலகியலை மதிக்கமாட்டார். இது சைவசித்தாந்த உண்மை.

எடுத்த எடுப்பிலேயே வள்ளுவர் [23]அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்றார். எழுத்து எல்லாம் 'அ' என்னும் எழுத்தை முதலாக உடையது. அதுபோல உலகு எல்லாவற்றினது தோற்றத்திற்கும் தானேதனி முதலாயிருக்கின்ற இறைவனை முதலாக உடையது என்று வேதகாலத்திற்கும் முற்பட்டதாக விளங்கிய சைவசித்தாந்த காலத்தில் நிலவிய ஒன்றே கடவுள், ஒருவனே தேவன் என்ற உண்மையை நன்கு புலனாக்கும் வகையில் தெளிவுபடுத்தினார். சைவசித்தாந்த உண்மைப்படி உலகம் சிவனாலே கட்புலனாக்கப்பட்டது. உலக உற்பத்திக்குத் தானே முதற்காரணனாக இருக்கும் இறைவனும் அவனுடைய சக்தியும் தத்துவங்கடந்தநிலை. இருப்பினும் குணாதீதனாகிய இறைவன் சகுணபிரமமாகி ஒலிவடிவும் உருவவடிவும் பெறுகின்றபோது இறைவன் என்றும் தன்னிலைமை மாறாத நாதபிரமமாகி நிற்கும்போது நாதத்தின் வரிவடிவம் ஆகிறது. நாதம் தண்டு வடிவம் என்று தத்துவங்கள் விவரிக்கின்றன. சக்தி பிந்து வடிவம். ௦ வடிவமாயிருக்கிறாள் அன்னை பராசக்தி. நாதம் ஆகிய சிவன் நின்றபொருள். என்றும் மாற்றமின்றி ஒரே தன்மைத்தான சிவன் ஆன்மாக்களுக்கு சக்திமூலம் அருள்பொழிகிறான். இறைவனது அருட்சக்தியே அம்பிகை. இறைவனது கிருபாநோக்கம் பெற்ற அம்பிகை செயற்படுவதால் எழுத்துக்கள் தோற்றமாயின. எழுத்துக்களுக்கு வரிவடிவம், ஒலிவடிவம் என இருவகை வடிவங்கள் கூறப்படுகின்றன. அ என்னும் எழுத்து உருவடிவில் பார்வதி பரமேஸ்வரரைக் குறிக்கிறது. அ என்னும் எழுத்து வாயைத் திறந்தவுடனே வேறு எந்தவித முயற்சியும் இன்றித் தானாகவே தோன்றுகிற ஒலியமைப்பாகும். இந்த 'அ' என்னும் எழுத்திற்கான முயற்சி ஏனைய எழுத்துக்களுக்கும் தேவைப்படுகிறது. எனவே 'அ' என்னும் எழுத்தினை எடுத்துக்கொண்டால் அது எழுத்துக்களுக்கு முதலாக இருக்கிறது. எழுத்துக்களுக்கு வேறாக இருக்கிறது எழுத்துக்களுடன் கலந்து இருக்கிறது. இதே தன்மைகள் இறைவனுக்கும் பொது. இறைவன் உலகத்திற்கு முதல்வனாக, வேறானவனாக, கலந்திருப்பவனாக விளங்குபவனாதலினாலே ஒன்றாய், உடனாய், வேறாய் முதலாய் அனைத்துலகத்தையும் இயக்கிநிற்கும் சிவன் உலகமுதல்வன் என்கின்ற சைவசித்தாந்த உண்மையினை முதற்குறளிலேயே விளக்கி, ஆங்காங்கு சைவசித்தாந்தக் கருத்துக்களை அழகுற நிறுவி உலக மொழிகளுள் பேச்சுவழக்கிலுள்ள 348 மொழிகளிலே பெயர்க்கப்பெற்ற சிறப்பினையுடைய திருக்குறள் அறுதியிட்டு உறுதியாகக் கூறும் சைவசித்தாந்தத்தின் சிறப்பினை அறிந்து நாம்

[22] திருக்குறள்

[23] திருக்குறள் – 1 ஆம் குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பயனை முற்றுணர்ந்து வையத்து வாழ்வாங்கு வாழ உறுதிகொள்ளுதல் எமது தலையாய கடமையாகும்.

சைவ முதனூல்களாக சிவாகமங்களும் வழிநூல்களாக வந்த சித்தாந்த சாஸ்திரங்களும் சிவபரம்பொருளை வழிவழியாக வழிபடுகின்ற சைவர்களுடைய பரம்பரைச் சொத்தாகும். சைவர்கள் தமது உண்மைநிலை உணர்ந்து உய்யு நெறி அறிதற்குச் சைவசித்தாந்த சாஸ்திரங்களை நன்கு கற்றறிதற்கு முய லுதல் வேண்டும். இறைவனது திருவருளை அள்ளிப்பருகுவதற்கு வழிவகுத்து இறைவனுடன் நேரடித் தொடர்புகொண்டு முத்தியின்பத்திலே திளைப்பதற்கு உதவும் நல்லுணர்வினைத் தரவல்லது சைவசித்தாந்தம் என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு.

[24] ''என்று நீ அன்று நான் உன்அடிமை அல்லவோ'' என்பது மணி வாசகர் வாக்கு. எம்மை ஆள்பவன் ஆண்டவன். ஆண்டவனுக்கு என்றும் நாம் அடிமைத்திறம் பூண்டு ஒழுகுவதனாலே எம்மை முழுமையாக அவனே ஆண்டு கொண்டபின் திரிகரணங்களாய மனம், வாக்கு, காயம் மூன்றும் அவன்வழி இயங்கும்போது நல்லதற்கும் தீயதற்கும் அவனே பொறுப்பாகின்றான். இதனாலே ஆன்மா துன்ப அனுபவமான உடலுடன் கூடி வாழும் நிலையிலும் அவன் அருளிலே திளைக்கிறது. இதுவே முத்தி இன்பம். இதுவே விடுதலை. இதுவே பேரின்பம். இதுவே திருவருட்பேறு. சேரவாரீர் செகத்தீரேஎன அனைவரையும் அழைத்து இறைவன் மூலபண்டாரம் வழங்குகின்றான். முந்திப் பெற்று முத்தி பெறுங்கள் என அழைக்கிறது சைவசித்தாந்தப் பெருநெறி. அந்நெறி நிற்போர் சைவர். சைவர் சிவன் கழல் வணங்குவோர். அம்பிகையை, விநாயகரை, முருகனை, பைரவரை, விட்டுணுவை, யாரை வழிபட்டாலும் சிவனையே முழு முதலாக வழிபடும் பெருநெறி நின்று வாழ்ந்த பெருமையுடையவர்கள் நாம். எமக்குச் சிவனைவிட மேலான தெய்வம் வேறு ஒன்று இல்லை என நம்பி வாழ்ந்தமையால், [25] பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடுவதில் இன்பம் காண்கிறோம். [26] ஆதலால் நமது சக்தி ஆறு முகன் என இறைவன் அருளிச் செய்தமையால் சண்முகப்பெருமானைச் சிவனெனவே வணங்குகிறோம். விநாயகனைப் பார்வதி பரமேஸ்வரனெனவே போற்றுகின்றோம். விட்டுணுவைக் காவல் தெய்வமாகக் கணிக்கிறோம். வைர வரை க்ஷேத்திர பாலகராக வழிபடுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவ பரம் பொருளை ஒருபோதும் மறவாது வாழ்வதற்கு உறுதுணையாயிருந்தது. ஈழநாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் ஊறிநின்ற கந்தபுராண கலாசாரமும் சைவசித்தாந்தப் பெருநெறியுமே எனத் துணிந்து கூறலாம். மிகு சைவத் துறை விளங்க நாம் மேலும் மெய்நெறி வாழ்வில் ஈடுபட சைவசித்தாந்தப் பெருநெறி வழிவகுக்கச் சிவனடியே சிந்திப்போமாக.

''இந்த உலகம் சிவன் இருக்கும் உலகு''

கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணம் (72 ம் பாட்டு)

**உட்னுதவிய நூல்கள்**

1. சிவஞானபோதம்
2. சிவஞானசித்தியர்
3. திருவருட்பயன்
4. பெரியபுராணம்
5. திருவாசகம்
6. திருக்குறள்
7. திருவாதவூரடிகள் புராணம்
8. திருமந்திரம்
9. அடங்கன்முறை - தேவாரம்
10. சிவபூசை விளக்கம்
11. குமாரதந்திரம்
12. Comparative Grammar of the Dravidian Languages by Dr. Caldwell
13. அபிராமி அந்தாதி
14. கந்தர்கலி வெண்பா
15. கந்தபுராணம்

---

[24] திருவாசகம்
[25] திருவாசகம்
[26] கந்தபுராணம் உற்பத்திகாண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் முன்னேற்ற மன்றம் - கொழும்பு
ஆக்கப்பணிகளை ஆராய்ந்து செய்து ஊக்கமடைக உயர்ந்து.

# யந்திரம்ஸ்

## ஸ்தாபனத்தாரால்

கார், லொறி, மீன்பிடி வள்ளம், டிராக்டர், தண்ணீர் பம்,
கைத்தொழில், விவசாய என்ஜின்களுக்கு

கீழ்க்காணும் வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும்.

**சிலிண்டர்**
★ றீபோறிங்
★ றீசிலீவிங்
★ பொலிசிங்
★ கோனிங்

**கிறுங்சாவ்ற்**
★ வெல்டிங்
★ றிநியூஇங்
★ கிறைன்டிங்

**காம்சாவ்ற்**
★ றிகிறைன்டிங்
★ புஸ் பிற்றிங்

**மெயின் ஜேர்ணல்**
★ எலயினிங்
★ லயின் போறிங்

**கொனெக்சன் றொட்**
★ றிமெற்றலிங்
★ பிறேசிங்
★ றிகிறைன்டிங்

**பேசிங்**
★ வால்வ்
★ சிலின்டர் கெட்
★ என்ஜின் புளொக்

**வால்வ் சீற்**
★ பிற்றிங்
பொலிசிங்

*நேர்மை — நிதானம் — சேவை!   அதுவே எம் கொள்கை!!*

## ய ந் தி ர ம் ஸ்

வெலிங்டன் சந்தி,
336, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

மெக்கானிக்கல் பகுதி,
138, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

*காரியாலயம்:*
144 - 1/1, முதல் மாடி, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 8062

*தந்தி:* கருணகிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMLEMENTS OF*

# M/s. A. A. L. PERERA & CO.

(THE TILE PEOPLE)

## 64, WOLFENDHAL STREET,
## COLOMBO 13.

*Phone* : 3 1 0 2 3

கண்ணுடையர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். — குறள்

**The learned are said to have eyes but the unlearned have (merely) two sores in their face.**

-- *Holy Kural*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அருச்சனை ஏன்?

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

(16-7-70) திருவள்ளுவர் ஆண்டு 2001 ஆனி 31 தமிழகத்தில் வெளி யானது). 'தமிழகம்' ஆசிரியருக்கு நன்றியுடன் வெளியிடுகின்றோம்.

வழிபாடு உளங்கலந்த ஒன்றாக அமைய வேண்டுமென்பது நமது இயக்கத்தின் இலட்சியம். உளங்கலந்த வழிபாட்டைத் திருமுறைத் தமிழ் அருச்சனையினாலேயே அடைய முடியும். திருமுறைத் தமிழ் அருச்சனை நோக்கு மொழி வழிப்பட்டதல்ல; சமய வழிப்பட்டதேயாகும். தமிழர்க்கு அவர்கள் சமயநெறி, அவர்களுடைய சமுதாய அமைப்பிலே படிமுறையில் தோன்றி வளர்ந்த நெறியாகும். அது உண்மையானால், அவர்களுடைய தாய் மொழியில்தான் உருவாகி இருக்க வேண்டும். பிற மொழியில் இருத்தல் என்பது வரலாற்று உண்மைக்கு இயைபில்லாதது; உண்மையியலுக்கும் புறம்பானது. தமிழகத்தின் தொன்மை நூலாகிய தொல்காப்பியம்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப"

என்று மறைபற்றிப் பேசுகின்றது. மறைகள், மொழித்தொடர்பானவையல்ல. அதற்கு, மொழி வரையறை கிடையாது. அருளிச் செய்பவர்களுடைய தகுதிபற்றியே மறைக ளாகின்றன. தொல்காப்பிய நூற்பாவுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், பேரா சிரியர் ஆகியோர் "தானே என்று பிரித்துக் காட்டியது தமிழ்மறை என்பதறிவித் தற்கு" என்று தெளிவாக உரை எழுதி விளக்கியுள்ளனர்- மேலும்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"

என்று ஓதுமிடத்தும், தொல்காப்பியர் முதல் நூலுக்கு மொழிவரையறை குறிப் பிடாது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்று ஓதியோன் தகுதியையே உணர்த்தியதூஉம் காண்க.

"அறங்கரை நாவின் நான்மறைமுற்றிய" என்ற தொல்காப்பியப் பாயிர அடிக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், "ஈண்டு நான்மறையென்றது இருக்கும், யசுரும், சாம மும், அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. "இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார் ஆதலின்" என்று எழுதுதல் எண்ணத்தக்கது. வியாசர் காலத் துக்கு முற்பட்ட புறநானூற்றுச் செய்யுட்களில் "நான்மறை முனிவ" ரென்றும் "நால்வேத நெறி" யென்றும் பயிலப் பெறுவது, தமிழில் பழைமையான மறைகளிருந் தன என்ற கருத்துக்கு அரண் செய்வதாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, தேவாரத்திருமுறைகளில் 'நான்மறை', 'நால் வேதம்' என வருவனவும், பண்டைத் தமிழ்மறைகளையே குறிக்கும். ஆரியவழக்கில், ''வேதம் தோற்றுவிக்கப்பட்டதன்று; சுயம்பு'' என்றொரு கருத்தும், ''பிரமனால் செய்யப்பட்டது'' என்ற ஒரு கருத்துமாக முரண்பட்ட கருத்துக்கள் உண்டு. ஆனால், ஊன்றி நோக்குவார்க்கு அது பல முனிவர்களால் அருளிச்செய்யப்பெற்றது என்பது புலப்படும். ஆனால், நமது சமய ஆசிரியன்மார்கள் நால்வர் பெருமக்கள் குறிப்பிடும் நான்மறை, இறைவனே ஆலமர் செல்வனாகத் தென்தமிழ் வழங்கும் திசை நோக்கியே அமர்ந்தருளி அறமுணர்த்தும் ஆசிரியனாகி நால்வர்க்கு அருளிச்செய்ததாகும், தமிழ் மறை வழக்கில் ''நான்கு'' என்பது மனிதர் பெறக்கூடிய பேறுகளாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை உணர்த்தி வழி நடத்தும் மறைகளேயாகும். திருமுறைகள் 'நான்மறை' என்றுமட்டும் வாளா குறிப்பிடுவதில்லை. நான் மறைகளைத் தமிழொடு இயைந்த வழக்கில் குறிப்பிட்டுப் பேசுகின்றன. பண் தமிழுக்கேயுரியது. திருஞானசம்பந்த சுவாமிகள் 'பண்பொலி நான்மறை' என்றும் முத்தமிழ் நான்மறை என்றும் தெளிவாக அருளிச் செய்துள்ளார்கள்.

பண்பொலி நான்மறை பாடியாடிப்பல ஊர்கள் போய்
உண்பலி கொண்டுழல் வானும் வா னின்னொளி மல்கிய
கண்பொலி நெற்றிவெண் டிங்களா னுங்கட ஊர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டா னத்தா னல்லனே.

(திருமுறை 3: பதிகம் 8 பா-6)

தேம்பல் நுண்ணிடை யாள் செழுஞ்சேவன
கண்ணியொடண்ணல் சேர்விடம் தேன் அமர்
பூம்பொழில் திகழ் பொற்பதி பூந்தாராய் போற்றுதல் என்
றேம்பு தன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்தன் ஒண்டமிழ் மாலைகொண்
டாம்படி இவை ஏத்தவல்லார்க்கு அடை யாவினையே!

(திருமுறை 3: பதிகம் 2 பா. 11)

என்பன திருஞானசம்பந்தர் திருப்பாடல்களாகும்.

ஆரிய மொழியில் வெறுப்புக்கொள்ளாது ஒழுகிய மாதவச் சிவஞானமுனிவரும்
''கொழிதமிழ் மறைப்பாடல் கிள்ளைபாடும் சீர்க்காஞ்சி'' என்றும்
''மன்னியஇத் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்து''

என்றும் அருளியுள்ளது அறியத்தக்கது.

இந்தச் சான்றுகள் வழியாக நமது சமயத்திற்குரிய மறைகள் - மந்திரங்கள் தமிழிலேயே இருந்தன என்பதும் இருந்து வருகின்றன என்பதும் அறியக்கிடக்கின்றன. அதனாலன்றோ, 'அருச்சனை பாட்டேயாகும்' ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக!'' என்று நற்றமிழ் ஆரூரர்க்கு ஆணையிட்டார். நால்வரும் ஆழ்வார்களும் நிறைமொழி மாந்தர்கள். அவர்கள் அருளிச்செய்த பாடல்கள் மறைகள் — மந்திரங்கள். அப்பாடல்கள் உயிர்களுக்கு இம்மையோடன்றி மறுமையும் எழுமையும் அளிக்க வல்லன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST*
*COMPLIMENTS*
*FROM*

# SAPPHIRE INDUSTRIES

Approved Manufacturers of Polythene & Plastic Goods

*Office*:
**126, Main Street,**
**Colombo 11,**
**Sri Lanka.**

***Phone***: 072 / 7185

*Factory*:
**25/2, Suramaya Pedess,**
**Kattubedde,**
**Moratuwa,**
**Sri Lanka.**
*Cable*: **"Sapphire"**
**Colombo.**

*WITH BEST COMPLIMENTS FROM*

# FUJI IMPORTERS & EXPORTERS

99 / A, FIRST CROSS STREET,

COLOMBO 11.

*T' Phone*: 32528

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். — குறள்

The ountry of the king who does not daily examine into the wrongs done and distribute justice, will daily fall to ruin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST WISHES FROM

# SRI SAKTHI STORES

*General Merchants, Fancy Goods & Travel Service*

180, GALLE ROAD, COLOMBO 6.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. — குறள்

**True knowledge consists in the removal of ignorance which is (the cause of) Births, and the perception of the true being who is (the bestower of) Heaven.**

WITH BEST COMPLIMENTS

OF

**PARAMOUNT ELECTRICALS**

**S. Paramanathan**

62. CARMEL ROAD,
COLPETTY,
COLOMBO 3

**With Best Wishes from**

# N. K. PILLAI

*PIRAMANALANKULAM,
VAVUNIYA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக் கோயில்களில் தமிழ் அருச்சனை

**தவத்திரு. குன்றக்குடி அடிகளார்**

ஆலயம் பூஜா விதிகளின்படி அபிஷேகம் அர்ச்சனை போன்ற உபசாரங்கள் மாத்ருகா மந்த்ர அக்ஷரங்களின் 50 ஒலிகளைக்கொண்ட வேதாகம புராண மந்திரங்களைக்கொண்டே நடத்தவேண்டும். அந்த ஒலிகளின் உச்சாடத்தினால் ஏற்படும் மந்திர சக்தியினாலேயே உலக க்ஷேமத்திற்குரிய தெய்வஸான்னித்யம் ஆலயங்களில் வளருகிறது. அந்த பூஜா உபசாரங்களில் எந்தவித மாறுதலையும் செய்யக்கூடாது. மாறுதல் செய்வது உலக மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நன்மை பயப்பதாகஆகாது.

ஈசுவர சன்னிதானத்தில் பொதுமக்கள் மனமுருகிப் பிரார்த்திக்கும்பொழுது பதினெட்டு பாஷைகளில் பாடல்களைச் சொல்லலாம்,

''வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக'' திருஞானசம்பந்தர்.

''ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்தாகமங்களும்''
''ஆறிரு நோய் மிகும் அவனி மழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோவில் களானவை
சாற்றிய பூஜைகள் தப்பிடில்தானே'' *(திருமூலர் திருமந்திரம்: 965, 517)*

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் (102) இந்த ஒலிகளின் உற்பத்தி ஸ்தானங்களை விசேஷமாகக் குறிப்பிடுகின்றார்.

''எல்லா வெழுத்தும் வெளிப்படக்கிளந்த
சொல்லிய பள்ளி யெழுதருவளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற்கோட லந்தணர் மறைத்தே
யஃதிவணுவலா தெழுந்து புறத்திசைக்கு
மெய்தெரி வளியிசை யுளவுநுவன் றிசினே.

இதை நச்சினார்க்கினியர், சிவஞானமுனிவர் முதலிய உரையாசிரியர்கள் நன்கு விளக்கியிருக்கிறார்கள்.

காரியதரிசி,
(காஞ்சி காமகோடி பீட வியாஸ பாரத கலாதி சதஸ் சமாஜம்)
(உண்மை நகல்)

1. சமாஜம் பொதுமக்கள் நலத்தையும், தமிழகக்கோயில்களில் தெய்வஸான்னித்யத்தையும் வளர்ப்பதற்காக சிவாகம ஆசார்யர்களின் மன்றத்தைக் கூட்டி ஆராய்ந்தது பாராட்டக் கூடியதே. அம்மன்றத்திற் கலந்துகொண்ட சிவாசாரியார்கள் அவர்கள் நம்பி வாழ்வதற்கிடமான தமிழகத்துக் கோயில்களில் அவர்களுடைய சட்டப் புத்தகமாகிய ஆகமநூல்களைக்கொண்டு வந்து படித்துக்காட்டித் தமிழருச்சனை கூடாது என்பதைச் சான்றுகளோடு பொதுமக்களுக்கு விளக்கம் சொல்ல முன்வருவார்களா?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அர்ச்சனைக்குரிய மொழியைப்பற்றிய பிரச்சினை ஒருபுறம் இருக்கட்டும். பூசகர்கள் இன்று தமிழகத்துக் கோயில்களில் செய்துவரும் அர்ச்சனைக்குரிய ஆதாரத்தையாவது ஆகமங்களிலிருந்து எடுத்துக்காட்ட முடியுமா?

3. திருத்தணிகைக் கோயிற் பூசகர்கள் எழுப்பிய கேள்வி தமிழில் அர்ச்சனை செய்யலாமா? என்பதே கோயில்களில் அபிஷேகம் முதலிய பூஜை முறைகளையா தமிழில் செய்யவேண்டும் என்று கேட்டார்கள்: கோயிற் பூஜைமுறை வேறு; அருச்சனை வேறு: அருச்சனை என்பது பக்தன் இறைவனிடம் வேண்டும் வேண்டுகோள். இன்ன பெயருடைய பக்தன் இன்ன காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதற்காக ஒரு வேண்டுகோள் விடுக்கிருன். அந்த வேண்டுகோளால் பயனடைவது தனி மனிதனேயொழிய, உலக மக்களோ அரசாங்கமோ இல்லை. தமிழில் அருச்சனையா! ஐயகோ! மாறுதல் செய்வது உலகமக்களுக்கும், அரசாங்கத்திற்கும் நன்மை பயப்பதாக ஆகாது என்று கூறுவது பூச்சாண்டி காட்டுவதாகும். அருச்சனை என்ருல்? என்ன என்பதையே புரிந்துகொள்ளாமல் கூறும் புன்மொழியாகும்.

4. பொதுமக்கள் மனமுருகிப் பிரார்த்திக்கும்போது பதினெட்டு பாஷைகளில் பாடல்களைச் சொல்லலாம் என்று சதஸ்சமாஜம் உலகமக்களெல்லாம் பயன்படுவதற்காக ஒரு அனுமதியை அளித்துள்ளது. இந்த அனுமதி ஆகம அடிப்படையில் அளிக்கப்பெற்றதா? அல்லது சுயேச்சையானதா;

5. இறைவனிடம் தங்களுக்குள்ள குறைகளைப் பூசகர்கள் மூலம் தெரிவிக்க வரும் பொதுமக்கள் அவைகளைத் தங்களுக்குத் தெரிந்த தமிழ்மொழியில் தாய் மொழியில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்கிருர்கள். நம்மைத் தமிழாற் பாடுக என்றும், அருச்சனை பாட்டேயாகும் என்றும், இறைவனே சொன்ன சொற்களை ஆதாரமாகக் வைத்துக்கொண்டு திருமுறைகளைக் கேட்டு உவந்த இறைவன் செவிக்குத் திருமுறையால் அருச்சனை செய்க எனத் தமிழ்மக்கள் கேட்கிருர்கள். கோயிலில் பூஜை முறைகளையா அவர்கள் தமிழில் செய்யச் சொல்லிக் கேட்டார்கள்!

6. கோயிற் பூசகர்களுக்கு அருச்சனையைப் பற்றிய சந்தேகம் வந்தமைக்குக் காரணம் உண்டு. ஏனெனில் அவர்களுடைய காரியத்துக்கு அப்பாற்பட்ட முறையே அருச்சனை முறை, தமிழகத்தில் கி.பி. 7ஆம் நூற்றுண்டில் அருச்சனை முறையானது, அருச்சனை பாட்டேயாகும் என்ற இறைவன் வாக்குப்படி இருந்தது. அன்பன் பூவும், நீருங்கொண்டு சென்று தனக்குத்தெரிந்த தமிழ்ப்பாடல்களையும், வடமொழிப் பாடல்களையும் மனமுருகிப் பாடி, கொண்டு சென்ற மலர்களை அவனடிகளில் இட்டு வணங்கினுன். அவ்விறைவன் அப்பாடல்களைக் கேட்டு உவந்து, மலர்களைத் தலைமேற் சூடிக் கொண்டான்.

"மைம்மலர்க்கோதை மார்பினரெனவும்
 மலைமகளவளொடு மருவினரெனவும்
செம்மலர்ப் பிறையும் சிறையணி புனலும்
 சென்னிமே லுடையர் எம் சென்னிமேலுறைவார்
தம்மலர் அடியொன்று அடியவர் பரவத்
 தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழல் சேர
அம்மலர்க் கொன்றை அணிந்த எம் அடிகள்
 அச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே"

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அருச்சனைக்குரிய பாட்டின் பொருள் முன்னிரண்டு வரிகளிற் கொடுக்கப்பெற்றுள்ளன; செய்யும் முறையை மூன்ருவது வரியிலும், அவைகளைப் பெருமான் உவந்த முறையை நான்காவது வரியிலும், இச்செயல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிறு பாக்கத்திற் காணலாமென்ற வரலாற்றுமுறையைப் பாட்டின் இறுதியிலும் ஞானசம்பந்தர் கூறியருளினூர். தனிமனிதனின் வேலையாக இருந்து பூசகர் வேலையாக மாற்றம்பெற்றுவிட்டதால்தான் பூசகர்களுக்கு அருச்சனையைப்பற்றிய சந்தேகம் வந்தது.

7. கோயில் நிர்வாகமும் பூசகர்களும் இணைந்து செய்யும் அருச்சனை முறை ஒரு வியாபாரம்போன்றது; "இதோ தேங்காய் பழம் தருகிறுனே இவனுக்கு இன்னது வேண்டும் எனச்சங்கற்பம் செய்து, இறைவன் பெயர்களை நூற்றெட்டு முறை ஓதிமுடிப்பது தானே அருச்சனை. அதற்கு நிர்வாகமும் பூசகர்களும் காசு கேட்கிறுர்கள். இடைநின்ற தரகர்கள் கேட்கும் காசைத் தரும் தனிமகன் தன் மொழியில் அவைகளைச் சொல்லச் சொன்னுல் அதற்கு ஏன் தடை?

8. அடிப்படைக் கேள்விகள் சிலவற்றை நாம் கேட்க வேண்டும்.

தமிழகத்துக் கோயில்களில் இன்று நடத்தப்பெறும் பூஜை முறைகள் வரலாற்று முறைப்படி எப்போது? யாரால்? எதற்காக? அமைக்கப்பெற்றன என்பதை வரலாற்றுச் சான்றுகளோடு நிறுவுவதற்கு இச் சதஸ் சமாஜம் முன் வருமா?

9. அண்மையிற் கும்பாபிஷேகம் சிறப்புற நடந்த திருவானைக்காக்கோயிலில் யானையும், சிலந்தியும் எம்மொழியில் எம்முறையில் இறைவனைப் பூசித்தன? மாத்ருகா மந்த்ர முறைப்படிச் செய்யும் பூஜை அவைகள் காலத்துக்கு முந்தியதா? பிந்தியதா?

10. சதஸ் சமாஜம் தெரிவித்தவாறு தெய்வ ஸான்னித்யம் வளர்வதற்குரிய ஒலி தமிழில் இல்லையென்பதாகிறது. அவ்வாறே இருக்கட்டும். ஆகம முறைப்படி நிகழும் பூஜை முறைகளில் வேதமொழியில் உபசாரம் சொல்லி முடிந்தபின் திராவிட வேத பாராயணம் சொல்லப்பெறும் என்று பெருமானுக்குக் கிளர்ச்சியூட்டிக் கேட்குமாறு செய்து, பின் திருமுறைகள் ஓதப்பெறுகின்றனவே. மாத்ருகாமந்த்ர அட்சர ஒலிகளைத் தவிர வேறு ஒலிகளுக்கு இடங் கொடுக்கக் கூடாத பூஜைமுறை, தமிழ் ஒலி ஒலிப்பதைப் பூஜை முறையிலேயே ஒன்றுக ஆகமங்களாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது ஏன்?

11. உலக க்ஷேமத்திற்குரிய தெய்வ ஸான்னித்யத்தை வளர்ப்பது மாத்ருகா மந்த்ர அக்ஷர ஒலியே என்பது சதஸ் சமாஜக் கருத்து. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற நாயன்மார்கள் பஞ்சத்தை நீக்கவும், பிற சமயத்தாக்குதல்களிலிருந்து சைவ சமயத்தைக் காக்கவும், இறந்தவர்களை எழுப்பவும், நோயை நீக்கவும் ஆகிய அற்புதங் கள் மூலம் தெய்வஸான்னித்யத்தை நிரூபிப்பதற்கு மாத்ருகா மந்திரங்களை எங்கேனும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லையே! மாத்ருகா மந்த்ர அக்ஷர ஒலிகளால் தெய்வ ஸான்னித்யத்தை உலகக்ஷேமத்திற்காக வளர்த்த வரலாறு ஏதேனும் உண்டா? இதைச் சமாஜம் எடுத்துக் காட்டுமா?

12. 'வேதத்தின் மந்திரத்தால் வெண் மணலேசிவமாக' என்ற திருப்புள்ளிருக்கு வேளூர்த்தலத்துத் திருமுறையை எடுத்துக்காட்டியிருக்கிறது சதஸ் சமாஜம். சமாஜம் காட்டிய வரி அச்செய்யுளின் மூன்றுவது வரி முழுமையும் காண்க.

புள்—சடாயு என்ற பறவை; இருக்கு—வேதம்; வேள்—முருகன். இம்மூவரும் பூசித்த தலம் திருப்புள்ளிருக்கு வேளூர்.

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தான் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேவாரத்தின் முன்னிரண்டு வரிகளைச் சதஸ் சமாஜம் ஒத்துக்கொள்ளாது. பின்னிரண்டு வரிகள் வேதம், சடாயு, முருகன் ஆகிய மூவரும் பூஜை செய்தமையைக் கூறுகின்றன. வேதமானது தன் மந்திரத்தால் வழிபடப் பெற்றவன்: வெண்மணலையே சிவமாகப் பாவனை செய்து சடாயுவால் வழிபடப்பட்டவன்; ஞானப் பூஜை முறைப்படி முருகனால் வழிபடப்பெற்றவன். இவ்வாறு மூவரும் முறையே வழிபட்ட முறையைக் கூறுகின்றன பின்னிரண்டு வரிகள். வேதங்கள் பூஜை செய்யும்போது தன் மந்திரத் தால் பூஜை செய்யுமேயொழிய, தமிழிலா பூஜை செய்யும்! இராவணனால் வெட்டுண்டு கிடந்த சடாயு என்பான் வெண்மணலையே சிவம் எனக்கருதிப் பூஜை செய்தான்; முரு கன் மேற்கொண்ட வழிபாடு ஞானவழிபாடு. வேதம் இறைவனைக் காணாமையால் மக்களைப்போலவே பல இடங்களிற் பூஜை செய்தது 'வேதத்தின் மந்திரத்தால் வெண் மணலையே சிவமாக' என்ற வரியை எடுத்துக் காட்டிவிட்டால் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது என்பதை நிலைநாட்டிவிட்டதாகுமா; தமிழ் எங்கேயும் இறைவனைக் காணத் தவமோ பூஜையோ இயற்றவில்லை; தமிழாராய அவனே வந்தான்; தமிழாற் பாடு என்றான், தமிழைப் பாடியவனுக்குப் பணி செய்தான். வேதங்கள் தம்மைத் தொடர்ந்து வர, தான் தமிழின் பின்னால் ஓடினான் இதை மறுத்துக் காட்டும் வர லாற்று உண்மையைச் சதஸ்சமாஜம் வெளியிடுமா?

13. ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று பறைசாற்றிய திருமூலர் திருமந்திரப் பாடல்களை எடுத்துக்காட்டி இருக்கிறது. சதஸ் சமாஜம், பாட்டை முழுவதும் காட்டுவது அதன் பண்பில்லைபோலும்.

''ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்து ஆகமங்களும்''

என்பன சதஸ் சமாஜம் காட்டிய இரண்டு வரிகள். அதற்குக் கீழே உள்ள வரிகள்.

''ஐம்ப தெழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்தும் போல் அஞ்செழுத்தாமே''

சதஸ் சமாஜம் ஏற்றுக்கொண்ட திருமூலர் திருமந்திரப் பாடலின் இறுதிவரிகள் ஐம் பதெழுத்தும் அழியக்கூடியவைகளே. அவை ஐந்தெழுத்தில் சென்று ஒடுங்கும் என்று கூறுகின்றன. திருமூலர் கருத்துப்படி அழியக்கூடிய ஐம்பதெழுத்துப் பூஜையைச் செய் தால் பயன் என்ன? இறுதியில் நிற்கும் ஐந்தெழுத்துப் பூஜையையே சதஸ் சமாஜம் அறிவிக்கலாமே.

மாத்ருகா மந்த்ர ஒலிமுறைத் தோற்றத்தையும் திருமூலர் சொல்லுகிற 51 எழுத்து ஒலிமுறைத் தோற்றத்தையும் இணைத்து ஒற்றுமைப்படுத்திக் காட்ட, சதஸ் சமாஜத்தால் முடியுமா? 'வேதம்' என்ற சொல் வரும் இடங்களையெல்லாம் எடுத்துக் காட்டிவிட்டால் போதுமா? வேதத்தை ஓதித்தான் பூஜை செய்யவேண்டும் என்பதை யாவது தமிழ் ஓதிப் பூசை செய்யலாகாது என்பதையாவது திருமூலர் எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா?

14. 'சதஸ் சமாஜம்' காட்டிய இன்னொரு பாடலும் திருமூலருடையதே

''ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செய்யுளில் 'சதஸ் சமாஜம்' தன் கருத்துக்குச் சாதமாகக்கொள்வது சாற்றிய பூசைகள்' என்ற தொடராக இருக்கவேண்டும். 'சொல்லப்பட்ட முறைப்படி பூசைகள் தப்பினுல்' எனப் பொருள்கொண்டு தன் கருத்தை வலியுறுத்த முற்படுகிறது அது. ஆனல் திருமூலர் மாத்ருகா மந்திர ஒலி முறைகளைக்கொண்ட மந்திரப் பூசை தவறக்கூடாது என்று எங்கேயும் சொல்லவில்லை, திருக்கோயிலில் உள்ள இலிங்கத்தைப் பிடுங்கி எறியக்கூடாது. கோயில் பதிற்கல்லை எடுக்கக்கூடாது. பூசை தவறக்கூடாது என்பனவற்றைச் சொல்லுகிறேம். இப்படித்தான் வழிபாடு செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனல் அவர் இறுதியிற் கூறிய பாடலுக்குச் சதஸ் சமாஜம் விளக்கம் தருமா?

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தனை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

இப்பாட்டும் 'சதஸ் சமாஜம் எடுத்துக்காட்டிய அதே பகுதியில் வரும் திருமூலர் பாட்டுத்தான். இச் செய்யுளைச் 'சதஸ் சமாஜம்' ஏற்றுக்கொள்ளுமா?

சுருங்கச்சொன்னல், திருக்கோயிற் பூசகர்கள் இன்றைய நிலைபோலவே சதஸ் சமாஜத்தைக் கேட்டுக்கேட்டு எத்தகைய குறைவும் இல்லாமல் சாற்றிய பூசைகளை நடத்தித்தானே வந்தார்கள்! வந்திருந்தும் ஏன் தமிழகத்திற்கு இந்தநிலை? சைவசமயம் ஏன் இவ்வாறு தாழ்ச்சியுறல் வேண்டும்? ஒருவேளை இற்றைத் தமிழகம் தாழ்ந்து, சமயநிலை நலிவுற்றிருப்பதற்கு காரணம் திருமூலர் கூறியவாறு ''பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தனை அர்ச்சித்து'' வருவதுதானே?

தெய்வ ஸான்னித்யத்தை வளர்க்கும் மாத்ருகா மந்த்ர ஒலிமுறைகளைக்கொண்ட விதிப்படி அர்ச்சிக்கும் இனம்—சிவாசாரியார் மரபு இழிநிலை அடைந்து வருகிறது? தன்னை முறைப்படி பூசிக்கிற இனத்தைக் காப்பாற்றக்கூட அருகதை இல்லதா அளவுக்கா தெய்வஸான்னித்யம் பழுதுபட்டுவிட்டது. சிவபூசை செய்யும் மூவாயிரவர், ஈராயிரவர் என்ற எண்ணிக்கைகளெல்லாம் பழுதுபட்டுவிட்டனவே ஏன்? பூசைசெய்யும் இனமே சிறப்பாக வாழமுடியாதபோது தெய்வ ஸான்னித்யம் திருக்கோயில்களில் உண்டு என்பதைச்சொல்ல எப்படி மனம் துணிகிறது. கோயிலில் உள்ள தெய்வம் நம்மைக் காப்பாற்றுகிறது என்ற எண்ணம் இல்லாமல் தெய்வ ஸான்னித்யத்தை நாங்களல்லவோ நாள்தோறும் வளர்க்கிறேம் என்று கூறுமளவுக்குத் தமிழகத்துச் சமயநிலை சென்றுகொண்டிருக்கிறது.

16. தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றைச் சதஸ் சமாஜம் எடுத்துக்காட்டியிருக்கிறது. எழுத்துக்கள் பிறப்பது எப்படி என்ற வரையறை வடமொழி இலக்கணத்தில் இல்லை. தமிழ் எழுத்துக்கள் இவ்வாறு தோற்றம் கொள்ளும். எழுத்துக்களை உச்சரிக்காமல் காலவரையறை இவ்வளவு என்று இலக்கணங்கள் தமிழின் சிறப்புக்கள் சதஸ் சமாஜம் ''தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் இந்த ஒலிகளின் உற்பத்தி ஸ்தானங்களை விசேஷமாகக் குறிப்பிடுகின்றார்'' என்று சுட்டியிருக்கிறது. இந்த ஒலிகள் என்றுல் எந்த ஒலிகள்? மாத்ருகா மந்த்ர எழுத்து ஒலிகளா? தமிழ் எழுத்து ஒலிகளா? இச்சூத்திரக் கருத்தையாவது சதஸ் சமாஜம் உணர்ந்துகொண்டதா?

எழுத்துக்களை எவ்வளவு நேரம் உச்சரிக்கவேண்டும் என்ற மாத்திரையைப் பற்றிய கருத்தை இச்சூத்திரம் கூறுகிறது. ஒரு எழுத்தை உச்சரிக்கும் நேரத்தை—மாத்திரையைக் கணக்கிடும்போது இருவகை உண்டு.

1) எழுத்துக்கு மூலமான காற்றுமூலாதாரத்தில் தோன்றுவது முதல் வாயில் ஓசையாக வெளிப்படும்வரை உள்ள காலத்தை அளந்து கூறுதல்.

☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) வாயிலிருந்து வெளிப்பட்ட எழுத்தோசையை மட்டும் அளந்து கூறுதல்.

அந்தணர் மறையில் எழுத்தோசையைத்தோன்றிய மூலாதாரத்திலிருந்து கணக்கிடுவர். அதை நான் இங்கே கூறவில்லை. வாயிலிருந்து வெளிப்பட்டுப் புறப்பட்டு ஒலிக்கும் ஓசைக்கே நான் மாத்திரை கூறினேன் என்றார் தொல்காப்பியர். இத் தொல்காப்பியக் கருத்து, தமிழில் அர்ச்சனை செய்யலாமா? என்றுகேட்ட சிவாசாரியர்களுக்கு என்ன விளக்கத்தைக் கொடுக்கும். 'சதஸ் சமாஜம்' என்ன செய்திருக்க வேண்டும்? தமிழ் எழுத்தொலிகள் உடம்பில் இன்னின்ன இடங்களில் தோன்றி இன்னின்ன உறுப்புக்களைச் சார்ந்து பிறப்பன ஆகையால் தெய்வ ஸான்னித்தியத்தை வளர்க்கும் ஆற்றல் அவைகளுக்கு இல்லை என்றும், மாத்ருகா மந்த்ர அக்ஷரஒலிகள் உடம்பில் இன்னின்ன இடங்களில் இன்னின்ன உறுப்புக்களைத் தொடுகின்றன. ஆகையால் அவைகள் புனிதத்தன்மை பெற்றுத் தெய்வ ஸான்னித்தியத்தை வளர்க்கும் ஆற்றல் உண்டு என்பதை நிரூபித்திருக்கவேண்டும். அவ்வாறு செய்திருந்தால் பயனுள்ள ஆராய்ச்சி, நாட்டுக்குத் தேவையானதுங் கூட.

சதஸ் சமாஜத்திற்கு ஒரு வேண்டுகோள். மாத்ருகா மந்த்ர ஒலிமுறைகளைக் கொண்ட அர்ச்சனைதான் நடைபெறவேண்டும். மாறாக நடக்கக்கூடாது என்று சதஸ் சமாஜம் எழுதிவிடட்டும். அது நேர்மை. அதற்காகத் தமிழ் நூல்களில் உள்ள செய்யுட்களுக்கு முரண்பாடான உரைகளை எழுதவேண்டாம். சான்றுகளைக் காட்டவிரும்பினால் வரலாற்றாராய்ச்சி கல்வெட்டாராய்ச்சி ஒலிமுறை ஆராய்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு எழுதட்டும். மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது இயற்கை. விளக்கங்காணவேண்டியது அறிஞர்தம் கடமை. அதற்காகப் பாட்டுக்களுக்குத் திரித்துப் பொருள் காணவேண்டாம். சமாஜத்தைக் கேட்டவர்கள் "தமிழில்தான் அர்ச்சனை செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்களே உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டார்கள். தமிழிலும் அர்ச்சனை செய்யலாமா? என்பதுதானே வியாபாரமுறையாகிய அர்ச்சனையைத் தரகர்களாகிய பூசகர்கள் தமிழிலும் செய்யலாம் என்றால் அது பூஜை முறையையே மாற்றிவிட்டதாக ஆகுமா? உண்மைக்குப் புறம்பாக ஒரு அறிக்கையை வெளியிடுவதால் சமாஜம் சாதித்துவிடக்கூடிய பொது நன்மைதான் எதுவோ? இதனால் தோன்ற இருக்கும் விளைவுகள் இரண்டு,

1) தமிழில் செய்யப்படும் அர்ச்சனைதான் வேண்டும் என்ற அமைதிப் புரட்சியைத் துவங்க அருள்நெறித் தொண்டர் காத்திருக்கிறார்கள்.

2) புரியாத மொழியில் நடக்கின்ற எதுவும் தமிழகத்தில் வேண்டாம், கோயில் நிர்வாகம் மட்டுமல்ல, பூசை முறையும் தமிழ்ல்தான் இருக்கவேண்டும் என்று ஒரு புரட்சி தொடங்க இருக்கிறது. திருமுறைகளை ஓதி மனம் செய்து கொண்டவர்கள் இன்று உலகில் சிறப்பாக வாழவில்லையா?

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும்" என்ற குறளின்படி தமிழ்கேட்டுத் தொண்டு செய்யும் விருப்பினனைப் ஓடி வரும் சிவத்தின் திருவருளால் புரட்சிகள் வெற்றியெய்துமேல் துன்பப்படுவது சதஸ் சமாஜம் அல்ல. தூண்டிவிட்டதுதான் அதன்பணி. அப்போது சிவாசாரியர்கள் நிலை என்ன? என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும். தமிழை இழித்துப் பேசித் தொட்டவர்கள் வாழ்ந்ததாக இதுவரை வரலாறு இல்லை. அவ்வரலாற்றுண்மையைச் சதஸ் சமாஜம் போன்றார்க்கு உணர்த்துவதற்கு வேண்டிய சூழ்நிலைகள் எல்லாவற்றையும் இறைவன் உண்டாக்கத் தொடங்கிவிட்டான் போலும்.

(நன்றி: "தமிழகம்" 16-7-70)

தலைவர்
திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*For all your Travel Requirments*

**Passport,**

**Visa,**

**Tickets,**

**Exchange**

**Cargo**

# CEY - TOUR & TRAVELS

54. KEYZER STREET, COLOMBO 11.

*(Member of Rajabdeen's Group)*

# A. M. M. RAJABDEEN & SONS.

**72, Third Cross Street, Colombo 11.**

**Dealers**

*HARDWARE, GARDEN TOOLR, HOUSESHOLD UTENSILS.*

**Await** *OPENING SHORTLY OUR NEW SHOW ROOMS AT BAMBALAPITIYA.*

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும். — குறள்

Forget anger toward everyone, as fountains of evil spring from it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS*

**MALSHIP ( CEYLON ) LIMITED.**

80, RECLAMATION ROAD,

COLOMBO 11.

WITH THE BEST

WISHES

FROM

❋

**W. M. HASSIM (DIST.) LTD.**

*(THE PARASAL PEOPLE)*

232, MAIN STREET,

COLOMBO 11.

*Telephone* 23822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் கண்ட அரசியல்

கலாநிதி அ. சண்முகதாஸ்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )

இன்று பெரும்பாலான நாடுகள் ஜனநாயக ஆட்சி முறையினையே பின்பற்று கின்றன. எனினும் சில நாடுகளிலே இன்றும் முடியாட்சி நிலவுகின்றது. வள்ளுவன் தன்னுடைய நூலிலே விவரிக்கும் அரசியல்முறை முடியாட்சியேயாகும். வள்ளுவனு டைய காலத்திலே நிலவிய ஆட்சிமுறை முடியரசாக அமைய இன்று நிலவும் ஆட்சி முறை குடியரசாயுள்ளது. முடியரசெனினும், குடியரசெனினும் அவற்றுக்கடிப்படையா கப் பல பொதுவான அரசியற் சித்தாந்தங்கள் உண்டு. இத்தகைய பொதுப்பண்புகள் எல்லா நாட்டுக்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லா அரசியல் தத்துவங்களுக்கும் பொதுவானவையாக மாறுத் தன்மையுடையனவாக அமையும். இத்தகைய பொதுப் பண்புகளையே வள்ளுவன் தன்னுடைய ''அரசியல்'' என்னும் பகுதியிலே இருபத் தைந்து அதிகாரங்கள் மூலமாகக் கூறியுள்ளான்.

ஒரு நாட்டுக்குத் தலைவன் ஒருவன் இருத்தல் அவசியமாகும். இது எந்த அரசி யல் நெறியிலும் காணப்படும் பண்பாகும். அத் தலைவன் மன்னனாக அமையலாம், ஜனாதிபதியாகலாம், பிரதமமந்திரியாகலாம், தேசாதிபதியாகலாம் அல்லது சர்வாதிகாரி யாகவும் அமையலாம். இத் தேசத்தலைவனுக்கு இருக்கவேண்டிய நல்ல பண்புகளையெல் லாம் வள்ளுவன் வகுத்துக்கூறுகிறான்.

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

என்னும் இரண்டு குறள்களிலேயும் அரசியற்றலைவன் ஒருவனுக்குரிய பண்புகள் கூறப் பட்டுள்ளன. இப் பண்புகள் எக் காலத்திலும், எந் நாட்டிலும். எத்தகைய அரசி யற்றலைவனுக்கும் இருக்கவேண்டியனவாகும். எடுக்கவேண்டிய ஒரு தீர்மானத்தை அதற்குச் சிலருடைய தீய பகைமை அமைந்திருந்தபோதிலும், அத்தகைய எதிர்ப்புக்கு அஞ்சாது எடுத்தல் ஒரு தலைவனுடைய கடமையாகும். அத் தீர்மானத்தால், பலருக் குத் துன்பம் வாராமற் பார்க்கவேண்டிய தண்ணளி அவனுடைய மனத்திலே நிரம்பி யிருக்கவேண்டும். நாட்டை நன்றாக ஆளுதற்கு ஏற்ற நிரம்பிய அறிவும், எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அவற்றைத் தீர்ப்பதற்குத் தன்னுடைய அறிவினை உபயோகிக் கும் அத்தலைவன் தன் நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக அயராது உழைக்கும் ஊக்கத்தினையுமுடையவனாக இருக்கவேண்டும். இவ்வாறு மன்னனுக்கிருக்கவேண்டுமென வள்ளுவன் கூறும் பண்புகள் காலத்தால் மாறா அடிப்படைப் பண்புகளாக அமைவ துடன் அவை ஒவ்வொரு சாதாரண குடிமகனுக்கும் இருக்கவேண்டியனவுமாகும். தூங் காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய மூன்றும் ஒரு தலைவனுக்கு மாத்திரமல்ல ஒரு நாட்டிலேயுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்கவேண்டியனவாகும். ஒரு காரியத்தினைச் சுறுசுறுப்பாகச் செய்தல், அக் காரியத்தினை நெறிப்பட ஆற்றுதற்குரிய அறிவு அனு பவம் ஆகியனவற்றைப் பெறக்கூடிய கல்வியினை உபயோகித்தல், ஒன்றனையும் பாராது அக் காரியத்தை விரைந்து செய்து முடிக்கும் ஆண்மை ஆகிய மூன்று பண்புகளும் பொதுவாக எமக்கு இருக்கவேண்டுமெனினும், தலைவன் ஒருவனிடத்தே அவை சிறப் பாகக் காணப்படவேண்டியனவாகும்.

மன்னராட்சி நடைபெற்ற காலத்திலே தன் திருக்குறளை யாத்த வள்ளுவன் மன்னனே எல்லா அரசியல் நிர்வாகங்களையும் நிர்வகித்துவந்தமையால், அது சார்பான கருத்துக்களை யெல்லாம் மன்னனுடன் தொடர்புறுத்தியே கூறலானார். ஆனால், இன்றோ அரசியல் நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், அரசியல் அதிகாரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வேளையிலே வள்ளுவனுடைய குறள் பொருத்த
மற்றதாகிவிடுமென நாம் எண்ணவேண்டியதில்லை. வள்ளுவன் காட்டுகின்ற அரசியற்
சித்தாந்தம் உலகப் பொதுமைகளை {(Universals) உள்ளடக்கியதாத அமைகின்றது.
ஜனநாயகம், கம்யூனிசம், சோஷலிசம், சர்வாதிகாரம் என்றெல்லாம் பல அரசியற்
சித்தாந்தங்கள் இன்று உலகிலே நடைமுறையிலுள்ளன. இவற்றினுடைய வேறு
பாடுகளைக் கூர்ந்து நோக்கின் அவ் வேறுபாடுகள் மேலமைப்பிலான வேறுபாடுகளாக
வேயுள்ளன. ஆழமைப்பிலே அவையெல்லாம் மக்கள் நலமுடையனவாகவும், உலகப்
பொதுமைகளை உள்ளடக்கியனவாகவும் அமைந்துள்ளன. இத்தகையஅரசியல் தொடர்
பான உலகப்பொதுமைப் பண்புகளைப்பற்றி இந்திய அறிஞர்கள் காலங்காலமாகச் சிந்
தித்துள்ளனர். அத்தகைய சிந்தனைகளையெல்லாம் ஒன்றுதிரட்டிக் குறள்களாக வடித்
துத் தந்திருக்கிருன் வள்ளுவன். இதனுலேயே ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாரதி பாடினுன். உலக அறிஞர்கள் இக்
கருத்துக்களை அறிய ஆவலுற்றுர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திருக்குறள்
மொழிபெயர்ப்பு அமைகின்றது. பைபிள், திருக்குராஅன் ஆகிய இரண்டும் உலகத்தி
லுள்ள பெருந்தொகையான மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்த வரி
சையிலே திருக்குறள் மூன்ருவது இடத்தைப் பெறுகின்றது. பைபிளைப்போலவோ திருக்
குர்ஆனைப்போலவோ சமயச்சார்பற்ற நூல் பெருந்தொகையான மொழிகளிலே மொழி
பெயர்க்கப்பட்டதென்ருல், அப்பெருமை திருக்குறளையே சாரும். அரசியலதிகாரம் பன்
முகப்படுத்தப்பட்ட இக்காலத்திலே வள்ளுவன் அன்று மன்னனுக்கெனக் கூறிய கருத்
துக்கள் ஜனுதிபதிதொடக்கம், {சாதாரண ஒரு மாவட்டத்தின் அரசாங்க அதிபர்
வரைக்குமுள்ள நிர்வாகத்தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் பொருத்தமானவையாகவும்,
பயனுடையனவாகவும் அமைகின்றன. அரசியல் என்னும் பகுதியிலுள்ள அதிகார
வைப்பு முறையினை நோக்கின், இவ்வுண்மை புலப்படும்.

வள்ளுவனுடைய அரசியலமைப்பு அறத்தினை அடிப்படையாகக் கொண்டது. அறத்தினை அடிப்படையாகக்கொண்ட அரசாங்கம் நடத்த நினைப்பவர்கள் கட்டாயம் வள்ளுவனுடைய திருக்குறளைப் படித்தாகவேண்டும். அறத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதால், வீரத்துக்கோ, அவ் வீரத்துக்கு அடிப்படையான பண்புகளையோ கைவிடவேண்டுமென வள்ளுவன் கூறவில்லை. ''குட்டக் குட்டக் குனிகின்ற'' அறத்தைப்பற்றி வள்ளுவன் கூறவில்லை.

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு

என்பது வள்ளுவனுடைய வாக்கு. அரசு, அரசுத்தலைவன், அரசநிர்வாக அமைப்பு, அதை நிர்வகிப்பவர், மக்கள் ஆகியவர்களுக்கிருக்கவேண்டிய அறவழிகளை அனுசரித்து அவற்றினின்று மாறுபடாமல், வீரத்திலும் வழுவாமல் நின்று ஆட்சிபுரிவதே மன்னனுக்குரிய இலட்சணமாகும். இத்தகைய இலட்சணமுள்ள ஒரு தலைவனுலேதான் தர்மத்தின் நிலைப்பட்ட ஓர் ஆட்சியினை அமைக்கவும், வெற்றியுற நடத்தவும் முடியும். அத்தகைய தலைவன்தான் எல்லா மக்களுக்கும் முறைசெய்து காக்கமுடியும். மக்களுள் ஒரு பகுதியினருக்கு முறைசெய்தும், இன்னெரு பகுதியினருக்கு முறையல்லாதன செய்தலாலே ஒரு நாட்டிலே ஒரு தலைவன் நிலைபேறுடையவனுக இருக்கமுடியாது என வள்ளுவன் கூறுவான். இதனுற்போலும் எங்கள் நாட்டிலும் பிற நாடுகளிலும் அரசுத் தலைவர்கள் காலத்துக்குக் காலம் மக்களாலே மாற்றப்படுகின்றுர்கள். மக்கள் தம்முடைய தலைவனைக் கடவுள் என்று கருதத் தலைப்பட்டால், ஒருபோதும் அக் கடவுளை மாற்றமாட்டார்கள்.

''முறைசெய்து காப்பாற்று மன்னன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்''

என்று வள்ளுவன் கூறும் இறையாக இக்காலத்தலைவர்கள் ஆகிவிடாத காரணத்தாலேயே மக்கள் அத்தலைவர்களை மாற்றிக் கொண்டிருக்கிருர்கள்போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் என்பது வெறுமனே நாடாளுகின்றவர்கள் மாத்திரமல்ல. தேர்தற் காலங்களிலே நாடாள எண்ணுகின்றவர்கள் நாட்டு மக்களின் நலன்களையெல்லாம் எடுத்துரைப்பார்கள். தேர்தல் முடிவுற்ற பின்னர் நாடாளுபவர்களும் நாட்டு மக்களை மறந்து விடுகின்றனர். நாட்டு மக்களும் தம்முடைய கடமைகளையும் உரிமைகளையும் மறந்து விடுகின்றனர். இத்தகைய ஒரு காலகட்டத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த வேளையிலே,

அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்னும் வள்ளுவனுடைய குறளை நாம் மனங்கொள்ள வேண்டியிருக்கின்றது. அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் விடுங் குடிமக்களை ஓர் அரசு உருவாக்கினால், அக்குடிமக்கள் நெடுகக் கண்ணீர் விடுதலிலேயே காலத்தைக் கழிக்கமாட்டார்கள். அக்கண்ணீர் அரசை மாற்றியமைக்கும் படையாக மாறி விடுவதை நாம் பல நாடுகளின் அரசியல் வரலாறுகளிலே காண்கிறோம். மன்னனுக்குரிய இலட்சணங்களைக் கூறிச்செல்லும் வள்ளுவன் குடிமக்களுடைய கடமைகள் உரிமைகள் ஆகியவற்றையுந் தன் நூலிலே கூறிச் சென்றுள்ளான்.

எந்த அரசியற் சித்தாந்தத்துக்கும் அடிப்படையாக அமைவது மக்கள் நலனைப் பேணுதலேயாகும். எல்லா அரசுகளினதும் குறிக்கோள் இதுவேயாகும். ஒரு நாட்டிலுள்ள மக்கள் வேண்டிய உணவினைப் பெற்றும், சுகதேகிகளாகவும், உட்பகை, புறப்பகை ஆகியன இல்லாதவர்களாகவும் வாழும் நிலையினை அடையவே எல்லா அரசாங்கங்களும் விரும்புகின்றன. இல்லாமையை அகற்றவே எல்லா அரசுகளும் முயற்சி செய்கின்றன.

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்

என்று இல்லாமையைக் கடியும் வள்ளுவன்,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

என்றும் கூறியுள்ளான். பசி, பிணி, பகை இவை மூன்றுமே இன்று உலக நாடுகளின் கவனத்துக்குரியனவாயுள்ளன. பாரிய பொருளாதாரத் திட்டங்களெல்லாம் பசியைப் போக்குவதற்குத்தானே மேற்கொள்ளப்படுகின்றன. உலக சுகாதார நிறுவனம் நாடெங்கிலும் பிணியைப்போக்கும் நோக்குடையதாயுள்ளது. ஆயுதக்குவிப்பு, ஆயுதக்குறைப்புப் பற்றியெல்லாம் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இவையெல்லாம் பகையை அகற்றுவதற்குத்தான். பசி, பிணி, பகை ஆகிய தீங்குகள் இல்லாத ஒரு நாட்டினை ஆளுவது அல்லது உண்டாக்குவதே ஓர் அரசியற்றலைவனின் குறிக்கோளாக அமைய வேண்டுமென்பது வள்ளுவனின் எண்ணமாகும்.

அரசியலிலே நிர்வாக யந்திரம் முக்கியமானது. அரசியற் சித்தாந்த அடிப்படையிலே எந்தக் கட்சியாவது நாட்டை ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நாட்டை ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும், அது மாற்றுக் கட்சியாக இருந்தாலும், காலங்காலமாக நிர்வாகயந்திரத்தை இயக்கிவரும் அறிவுடைய நிர்வாகிகள் மாற்றப்படுவதில்லை. ஆனால், அவர்களுள் எவரெவர் எத்திறமையுடையவர்கள் எத்தகைய பணியை ஆற்றக்கூடியவர்கள் என்று அறிந்து அவரவருக்கேற்ற பொறுப்புள்ள பதவிகளை வழங்குவதிலே அரசு கவனமாக இருக்கவேண்டுமென வள்ளுவன் ஆலோசனை கூறுகிறான்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வள்ளுவன் கூறும் ஆலோசனையை மதித்துப் பொறுப்புள்ள பதவிகளைப் பொருத்த மானவர்களாகப் பார்த்துக் கொடுக்காது, தம் கட்சிக்காரர் என்பதற்காக அறிவற்ற ஆனால் வெளிவேடம் புனையக்கூடிய ஒருவருக்குக் கொடுத்தால்,

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்

என்று வள்ளுவன் கூறுகிறான். இவ்வாறு ஆராயாது பாரிய பொறுப்புக்களைப் பொருத்த மற்றவர்களிடத்தே கையளிப்பதால், பின்னர் கையளித்தவருக்கு மாத்திரமல்ல, மக்கள் எல்லோருக்குமே துன்பந்தான் விளையும். தெரிந்தெடுக்கும்போது பொருத்தமானவரைத் தெரிந்திடவேண்டும். தெரிந்த பின்னர் அவரைச் சந்தேகிப்பது நல்லதல்ல. இன்றைய காலகட்ட அரசியல் வரலாறுகளிலே இந்த நிலையைத்தான் காணுகின்றோம். வள்ளுவனின்

தேறற்க யாரையும் தேராது; தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்

என்னும் குறளினை அத்தகைய அரசியல்வாதிகளுக்கு அடிக்கடி நினைப்பூட்ட வேண்டியதாகும். அத்துடன்

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

என்னும் குறளுண்மையின் அனுபவத்தினை அன்று மாத்திரமல்ல இன்றும் நாம் பெற்று வருகின்றோம்.

அரசியலதிகாரிகளை நியமிக்கும்போது அரசியற்றலைவன் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளைக் கூறிய வள்ளுவன், அவ்வதிகாரிகள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்றெல்லாம் கூறியுள்ளான். அரசியற்றலைவனுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிப் பக்கபலமாக அமைவது அமைச்சு ஆகும்.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு

என்பதே அமைச்சின் இலக்கணம் எனக் கூறும் வள்ளுவன்

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு

என அமைச்சினுடைய குணத்தினை எடுத்துக் கூறினான். இத்தகைய அமைச்சன் சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினையைச் செய்யும் வகைபற்றிய அறிவு, ஆகியனவற்றைக் கொண்டவனாக அமையவேண்டுமென அதிகாரங்களமைத்து வள்ளுவன் கூறியுள்ளான். ஒருவனுடைய தோற்றத்தைக் கண்டு அவனுடைய அறிவினையும் செயலினையும் மதித்துவிடாமல் உண்மைத்தன்மையினை அறிந்து செயற்படுதல் அமைச்சனது கடமை என வள்ளுவர் வற்புறுத்துவர். அதேபோல தோற்றத்தைக் கொண்டு அமைச்சனுடைய தன்மைகளை அரசியற்றலைவன் மதிப்பிட்டுவிடக்கூடாதென்பதையும் கூறியுள்ளார்.

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து

என்பதே அக்கருத்தினை வழங்கும் குறளாகும். ஒரு சிறிய அச்சு இல்லாவிட்டால் ஒரு பெரிய தேர் ஓடமுடியாது. அதுபோல தோற்றத்திலே சிறியவராயிருந்தாலும் பயனளிக்கக்கூடிய பெரிய காரியத்தைச் சாதிக்கக் கூடும். ஆகவே வடிவினுடைய சிறுமையை நோக்கி ஒரு நாளும் இகழக் கூடாது.

தொகுத்து நோக்குமிடத்து, வள்ளுவனுடைய அரசியல் அறவழிப்பட்டது என்பதையும், அரசியற்றலைவன், அமைச்சு, நாடு, மக்கள் படை ஆகியவற்றின் தன்மைகள் யாவை என்பதையும் அவற்றுக்கு அடிப்படையாக அமைகின்ற பண்புகள் எவை என்பதையும் வள்ளுவன் அரசியல் அங்கவியல், ஒழிபியல் என்னும் இயல்களிலே குறிப்பிட்டுள்ளான். அரசன், அமைச்சர், அரசியலதிகாரிகள் ஆகியோர்க்கெனக் கூறப்பட்ட இக்குறள்கள் சாதாரண குடிமக்களுக்குப் பயனுடையனவாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. இன்றைய அரசியல் வாதிகள் பலர் வள்ளுவனுடைய இக்குறட்பாக்களைத் திரும்பவும் ஒரு தட்வை படித்துப் பார்ப்பது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. — குறள்

Desire the desire of him who is without desire; in order to renounce desire, desire that desire. — *Holy Kural*

WITH THE BEST WISHES FROM

*Well Wisher*

ரவி ஜுவலர்ஸ்

**RAVI JEWELLERS**

*Buyers and Sellers*

**GOLD & SILVER JEWELLER**

**Orders Executed Promptly**

115, SEA STREET,
COLOMBO - 11.

*T'phone:* **36358**

**SABA AGENCY**

*3, SEA STREET, COLOMBO 11*
*SRI LANKA.*

***Phone 36331***

***All kinds of Imported & Local Radios Radio Spares & Electrical Goods.***

*Autorised Dealers*
**INEMI - EP - LP RECORDS**
**SABA RECORD BAR**

*Visit us for*
*All kinds of Tamil, Hindi, Sinhala, English Recordings and Pre Recorded Video Cazettes*

*Authorised Dealers for*
**UNI WALKERS LTD.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS FROM*

# SHICK INDUSTRIES

MANUFACTURERS OF

## WANDERLIGHT SOAP

Wanderlight Soap is Specially Manufactured to protect and preserve beauty and complexion all materials from Cotton to Synthetic.

**Will be out in the Market very soon**

*MANUFACTURERS*

**SHICK INDUSTRIES**
56, AVISSAWELLA ROAD,
WELLAMPITIYA.

*T'PHONE* 302 (*Wellampitiya*)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். — குறள்

**All men that live are one in circumstance of birth,
Diversities of Works Give each his special worth.**
— *Holy Kural*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

*Bobby's Cool Bar*

CONTACT

*for*

**Airport Hire**

*in*

**Private Car.**

**437, GALLE ROAD,**
**BAMBALAPITIYA,**
**COLOMBO 4**

*T'phone* **85971**

# VANEE STUDIO
## PHOTOGRAPHERS

*for Quality Photographs*

*Consult us*

**C. B. VANEE RAJU**
**M/s. Vanee Studio**

*Office*: **155, 1st Floor, Sea Street, Colombo 11.**

*Residence*:
**28, Muhandram Road,**
**Colombo 3.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY

*With the Best Compliments*

*from*

# MASCONS LIMITED.

**175 - 179, ARMOUR STREET,**
**COLOMBO 13.**

T'PHONE **25561**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. — குறள்

Whatever thing of whatsoever kind it be, this wisdom's part in each the very think too see. - *Holy Kural*

University of Jaffna
183304
Library

REFERENCE

183304

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

*With the Best*

*Compliments*

*from*

# THE BROWNS GROUP OF COMPANIES

**481, DARLEY ROAD, COLOMBO 10.**

P. O. BOX 200, TEL 91171-8

*Over*

**HUNDRED YEARS**

*of*

*Service*

**AGRICULTURE, INDUSTRY, ENGINEERING,**

**TRANSPORT, TOURISM, EXPORTS, TRADE.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவிற்பதி கொண்டாடும் அறிவும்
செழிப்பும் கலையும் சீர்பெற்றுயர
தக்க வழிகளை ஆய்ந்து தம்பணியை
மிக்க சிறப்புடன் செயற்படும்
கொக்குவில் முன்னேற்ற மன்றம் – கொழும்பு
செழித்துக் கிளைவிட் டெழுக.

# சித்திரா ட்ரேடர்ஸ்

உரிமையாளர் : சி. குணரத்தினம்




WHOLE SALE & RETAIL DEALERS

**JAFFNA BEST CIGARS ✤ JAFFNA GINGILLY OIL**
**✤ BEST HIGH GROWN TEA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.